REGD. No. 3384 TAMIL MANI PHONE No. 3249

தமிழ் மணி

வாரப்பதிப்பு



★

வீரத் தமிழர்

★

வங்கப் பிரிவினை காலத்தில் வெள்ளையரை வெருட்டியடித்துத், தாய் நாட்டையும், தமிழ் நாட்டையும் தட்டியெழுப்பி, சுதேசிக் கப்பலோட்டிக் காட்டிய வீரத் தமிழர் வ. உ. சிதம்பரநாதன் தமிழ் நாட்டின் தவப்புதல்வர்; வீரனுகத் தோன்றி, சுத்த வீரனுகவே மாண்டார். தாய் நாட்டின் சுதந்திரத்துக்காக உடல், பொருள், ஆவியாவையும் ஒருங்கே தத்தஞ் செய்த தமிழ் நாட்டின் சொக்கத் தங்கம்; சுதந்திரப் போர் முன்னணியில் நின்ற வீர சிங்கம்! இவர் 1872-ம் வருடம் செப்டம்பர் மாதம் 5-ந் தேதி பிறந்தார்; 1936-ம் வருடம், நவம்பர் மாதம், 18ந் தேதி நள்ளிரவில், 64வயதில் இறந்தார். அவர் இறந்த தேதியையே சிதம்பரநாதனின் நினைவு நாளாகக் கொண்டாடி வருகிறூர்கள் இந்திய சுதந்திரத்தைக் கண்குளிரக் காண அவர் நம்மிடையே இல்லை; என்ருலும், அவர் புகழ், தியாகம், வீரம் உலகம் உள்ளளவும், ஒரு தமிழன் உயிரோடு இருக்கும் வரையில் மறையாது என்பது திண்ணம்.

★

மணி 13. ஓசை 2. 16, நவம்பர், 1917. விலே அணு 2.

பழைய கருப்பனே கருப்பன்
தென்னாப்பிரிக்காவின் நிறத் திமிர்
அமெரிக்கப் பிரதிநிதியின் - அதிசயத் தீர்மானம்!
டால்டன் ராஜிநாமாவும், - சர்ச்சில் சலசலப்பும்

பழைய கருப்பனே கருப்பன் என்ற நிலைமையுற்றால், ஐக்கிய நாடுகள் சங்கமும் வந்துகொண்டிருக்கிறது. வல்லரசுகளின் எடுப்பார் கைப் பிள்ளையாக இருந்த காரணத்தால் முன்பிருந்த சர்வதேச சங்கம் சமாப்தி ஆகிவிட்டது. அதே நிலைமைதான் இப்போதுள்ள சர்வதேச சங்கத்துக்கும் வந்துவிடுமோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அவ்வளவு தூரம் அமெரிக்காவும், பிரிட்டனும் அந்தச் சங்கத்தை ஆட்டிவைத்துக்கொண்டிருக்கின்றன. நிறத்திமிர் பிடித்த தென்னாப்பிரிக்கப் பிரதமர் [illegible] ஸ்மட்ஸ் ஐக்கிய நாடுகள் சங்கத்தை ஏதோ ஒரு துருப்புக்குச் சமமாக மதித்து வருகிறார். அச்சங்கம் உலகுக்கு, நீதி வழங்கத் தோன்றிய ஒரு நீதி மன்றம்; எனவே, அதனுடைய கட்டளையை ஏற்று அதன்படி நடக்க வேண்டும், என்ற எண்ணமே அவருக்குக் கிடையாது. அப்படியிருக்கலானால், சென்ற வருஷம் தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னையைப்பற்றி அச்சங்கம் நிறைவேற்றிய தீர்மானத்தை கண்ணியமாக ஒப்புக்கொண்டு அதன்படி நடந்திருப்பார். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. செய்யாதது மட்டுமின்றி மேலும், மேலும் தென்னாப்பிரிக்க இந்தியரை நிறத்திமிர் சட்டத்தால், படாத பாடுபடுத்தி வருகிறார். உண்மையிலேயே அவருக்கு நீதி, நேர்மை என்பவைகளில் நாட்டமிருக்குமானால், சென்ற வருஷம் ஐ. நா. சங்கம் தீர்மானித்தபடி இந்தியாவுடன் கலந்துபேசி ஒரு சமரச முடிவுக்கு வந்திருக்கலாம். அதுமட்டுமல்ல, தாமாக பேச்சு வார்த்தை நடத்த முன்வராவிட்டாலும், இந்தியா அழைத்தபோதாவது அந்த அழைப்பை ஏற்று, பேச்சு நடத்தியிருக்கலாம்; அதையும் செய்யவில்லை. இந்தியாவின் அழைப்பை நிராகரித்துவிட்டனர் தென்னாப்பிரிக்க சர்க்கார். எனவே, தென்னாப்பிரிக்க சர்க்கார் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் தீர்ப்பை மதிப்பதில்லை என்ற முடிவு கட்டிவிட்டனர் என்பது, வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது.

அமெரிக்கத் தீர்மானம்

இப்படிப்பட்ட நிலைமையில் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் கட்டளை என்னும் தனது தீர்மானத்தை அலட்சியம் செய்த ஒரு நாட்டின் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இதுதான் நல்முறை. ஆனால் அச்சங்கத்தின் தூண்களாக இருக்கும், அமெரிக்காவும், பிரிட்டனும் இந்த முறையை விட்டு, தென்னாப்பிரிக்காவின் நிறத்திமிருக்கு மேலும் தூபம் போடும் முறையிலே நடந்துகொள்ளுகின்றன. ஐ. நா. சங்கத்திலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி ஒரு அருமையான யோசனை கூறியிருக்கிறார். அதாவது தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை பற்றி ஜெனரல் ஸ்மட்ஸ் கோஷ்டிக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள தகராறை, சர்வதேச கோர்ட்டின் வி[illegible]க்குக் கொண்டு வர[illegible]. இது[illegible] அவர் ஐ. நா. சங்கத்துக்குக் கொண்டு வரப்போவதாக இருக்கும் பிரேரணை. பாரோ ஒருவன் குதிரை முட்டை கண்டுபிடித்து விட்டதாகக் கதை சொல்லுவான். அதுபோலவே இருக்கிறது. இந்த யோசனை ஒன்றும் புதிதல்ல. இதே யோசனையை முன்பொருதடவை தென்னாப்பிரிக்கா பிரேரேபித்தது. ஆனால் ஐ. நா. சங்கம் அதனை நிராகரித்து விட்டது. மூக்கறுபட்ட பழைய யோசனையையே அமெரிக்கப் பிரதிநிதி அச்சங்கத்தில் கொண்டுவருவதுதான் விந்தையிலும் விந்தை. இங்ஙனம் தென்னாப்பிரிக்காவை ஆதரிக்க முன்வந்த அமெரிக்காவுக்கு பிரிட்டனும் பேராதரவு அளிக்கத் தயார், என்று சொல்லியிருக்கிறது. இதெல்லாம் தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னையை, எப்படியாவது மட்டிக் கழிக்கும் யோசனைகளேயன்றி வேறொன்றுமில்லை. அமெரிக்காவும் பிரிட்டனும் கொண்டிருக்கும் இந்த எண்ணம் ஈடேறுமானால் பலவீனர்களில் உலகத்துக்கே கேடுவிளையும். தென்னாப்பிரிக்க வெள்ளையரின் நிறத்திமிர் அதிகமாகும். ஐ. நா. சங்கத்தின் மதிப்பு குறைந்தால், அமைதிக்குப் பங்கம் விளைவது திண்ணம்.

இந்தியத் தீர்மானம்

இந்நிலையில் இந்தியாவும் ஐ. நா. சங்கத்திற்கு ஒரு தீர்மானம் கொண்டு வருகிறது. அதாவது அத்தீர்மானத்தின்படி தென்னாப்பிரிக்க இந்தியர் பற்றி ஐ. நா. சங்கம் செய்திருக்கும் தீர்மானம் மீண்டும் உறுதிப் படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட தீர்மானம் ஒன்று கொண்டுவருவதன் மூலம் ஐ. நா. சங்கத்திலுள்ள பெரும்பாலோருடைய ஆதரவை இந்தியா தேடுகிறது. சென்ற முறை இந்தியாவுக்கு ஆதரவு தந்த நாடுகள், இம்முறையும், ஆதரவுதரும் என்பது திண்ணம். அப்படி ஆதரிக்குமானால் தென்னாப்பிரிக்காவின் நிலை முன்னிலும் மோசமாகும். அப்படியின்றி இந்தியாவிற்கு ஆதரவு கிடைக்கவில்லையானால் அதனால் ஐ. நா. சங்கத்துக்குக் கெட்ட பெயர் ஏற்படுவது நிச்சயம். எனவே இவற்றையெல்லாம் முன் கூட்டியே உணர்ந்து, இந்தியாவுக்கு நீதி வழங்க முன்வர வேண்டியது ஐ. நா. சங்கத்தின் கடனாகும். இந்தக் கடமையை அச்சங்கம் நிறைவேற்ற வேண்டுமானால் தென்னாப்பிரிக்க இந்தியர் பற்றி சென்ற ஆண்டு தான் செய்த தீர்மானத்தை நிறைவேற்றி வைக்கும்படி தென்னாப்பிரிக்க சர்க்காரைத் தூண்டவேண்டும்.

டால்டன் ராஜிநாமா

இப்பொழுது பிரிட்டனில் பதவியிலிருக்கும் கட்சி தொழிற் கட்சிதான். அப்படியிருந்தும் ஒரு தொழிற் கட்சிக்கு இருக்கவேண்டிய சமதர்ம மனப்பான்மையை பிரிட்டனிடம் காண முடியவில்லை. தென்னாப்பிரிக்க வெள்ளையரின் நிறவெறிக்குப் பிரிட்டன் மறைமுகமாக ஆதரவு அளித்து வருவதே இதற்குப் போதிய சான்று. இவ்வளவு அட்டகாசம் செய்துவரும் பிரிட்டனின் அரசியல் பொருளாதார நிலைமையைச் சற்று ஆராய்ந்து பார்க்கப் போனால் "ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம், அதன் உள்ளேயிருக்குதாம் ஈரும் பேனும்" என்ற கதைபோலவேயிருக்கிறது. கடந்த யுத்தத்திற்குப் பின் பிரிட்டனின் பொருளாதார நிலை மெள்ள மெள்ள சரிந்துகொண்டே வருகிறது. சமீபத்தில் நடைபெற்ற முனிசிபல் தேர்தலில் தொழிற் கட்சியினர் [illegible]ன்றனர். இவை[illegible] இப்பொழுது திடீரென பிரிட்டி[illegible] மந்திரி தோழர் டால்டன் தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். சர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் அந்தப் பதவிக்கு வந்துவிட்டார். இதன் மர்மம் என்ன என்பதுதான் புரியவில்லை. தோழர் டால்டனின் ராஜிநாமாவுக்குக் கூறப்படும் காரணம் அதி விநோதமாகவேயிருக்கிறது. பட்ஜெட் பார்லிமெண்டில் வெளியிடுவதற்கு முன்பே அதை நிதி மந்திரி யோசிக்காமல் வெளியிட்டு விட்டாராம். இப்படி ஒரு மந்திரியார் மதிமிழந்து செய்த காரியத்தை தானே தனது ராஜிநாமாக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அந்தக் கடிதமும் தாராளமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சர்ச்சில் சலசலப்பு

இந்த சம்பவத்தில் எல்லாவற்றையும்விட வேடிக்கையென்னவென்றால், ரகற்கெடுத்தலும் எட்டு வாதபுரியும் எதிர்க்கட்சித் தலைவரான சர்ச்சில் துரை தோழர் டால்டனின் நிலைமைக்கு இரங்கி நெஞ்சுருகி அவரது கள்ளங்கபடமற்ற தன்மையைப் பாராட்டி அவருக்குத் தமது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டாராம். ஆனால் அதே சர்ச்சில் துரை சில மணி நேரங்களுக்கெல்லாம் தலைகீழாகத் தாண்டிக் குதித்திருக்கிறார். பட்ஜெட் ரகசியம் எப்படி வெளியாயிற்று என்பதற்கு விசாரணை வேண்டும் என்று அவர் வற்புறுத்தியிருக்கிறார். இப்படி முன்னுக்குப்பின் முரணாக சர்ச்சில் துரை நடந்துகொண்டதும், நிதி மந்திரியார் முன் யோசனையின்றி பட்ஜெட் ரகசியத்தை வெளியிட்டதும் அரசியல் அறிவுபடைத்தவர்களுக்கு ஆச்சரியத்தினையும் ஐயப்பத்தினையும் தருவதாகவேயிருக்கிறது. சரி, எப்படியோ தொலைந்து போகட்டும். உள் நாட்டில் இவ்வளவு ஊழல்களை வைத்துக்கொண்டு வெளியாரைப் பற்றியாவது இந்த வெள்ளையர் பேசாமலிருக்கின்றனரா என்றால், அதுதான் இல்லை; ஆங்காங்கே நிறத்திமிர் ஆட்சியும், பிரித்தாளும் ஆட்சியும் நடத்திக்கொண்டுதான் வருகின்றனர். இத்தகைய ஆர்ப்பாட்டங்களெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் செல்லுமோ தெரியவில்லை. பிரிட்டன் இதே போக்கில் போய்க்கொண்டிருந்தால் இன்னும் சில ஆண்டுகளுக்குள் அதனுடைய ஏகாதிபத்திய ஆட்சி அஸ்தமித்துப்போவது திண்ணம்.



இம்மாதம் 20-ம் தேதி மணமகளாகப்போகும் இளவரசி எலிசபெத்.

சங்கநாதம்

தட்டிக்கேட்க ஆளில்லா விட்டால்...?
பாக்கிஸ்தான் வாலாக்களின் வாலாட்டம்!
ஜூனகட் வெற்றி; - இந்தியாவின் ஜனநாயகம்!
சுஹ்ரவர்த்தியின் பகல் வேஷம்

"தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டம்" என்பதுபோல பாகிஸ்தான் வாலாக்கள் தம்மைத் தட்டிக்கேட்பவரில்லை என்ற ஆணவத்தால், இந்தியாவையே பயமுறுத்திக்கொண்டிருக்கின்றனர். நாஜி ஹிட்லரைப்போல நாடு பிடிக்கும் ஆசை, ஜனாப் ஜின்னாவுக்கும் பிடித்துவிட்டது. இத்தனைநாள் பாடுபட்டு இந்தியாவை இரு கூறாகப் போட்டதோடு அவர் திருப்தியடையவில்லை. தன்னுடைய பாகிஸ்தான் ராஜ்யத்தின் எல்லையை விஸ்தரிப்பதிலேயே நாட்டங்கொண்டிருக்கிறார். தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறும் அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் இதுவே காரணம். பாகிஸ்தானைச் சுற்றியுள்ள சமஸ்தானங்களையெல்லாம் அப்படியே விழுங்கிவிடவேண்டுமென்பது ஜின்னாவின் பேராசை. அந்த ஆசையால் தூண்டப்பட்ட அவர் ஆங்காங்கு தனது கையாட்களையும், ஐந்தாம்படையினரையும் வைத்து, நாடுபிடிக்கும் வேலையைச் செய்துவருகிறார். பாகிஸ்தானுக்குப் பக்கத்தில் ஒரு சமஸ்தானம் இருந்துவிட்டால் அது தனக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடுகிறார். அந்த சமஸ்தான மக்களில் பெரும்பாலோர் இந்துக்களாயிருந்து அவர்களுக்குப் பாகிஸ்தானில் சேர விருப்பமில்லாவிட்டாலும் அதைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. அங்கு நூற்றுக்குப் பத்துபேர் முஸ்லிம்கள் இருந்துவிட்டாலும் சரி, அல்லது அந்த சமஸ்தான ராஜா ஒரு முஸ்லிமாக இருந்துவிட்டாலும் சரி, அதைக் காரணமாக வைத்துக்கொண்டு அந்த சமஸ்தான மக்கள் அத்தனை பேரையும் தமக்கும் தமது பாகிஸ்தான் ஆட்சிக்கும் அடிமைப்படுத்துவதே ஜின்னாவின் நோக்கம். மக்களுக்காகவே ஆட்சிமுறை என்ற பேச்சே அவரது பாகிஸ்தான் அகராதியில் கிடையாது.

பாக்கிஸ்தான் - - படையெடுப்பு

இப்பொழுது இந்த பாகிஸ்தான் பாதுஷாவின் பரிசோதனைக்குள் அகப்பட்டு அவஸ்தைப்படும் சமஸ்தானங்கள் முக்கியமாக மூன்று. அவற்றுள் ஹைதராபாத்தும், ஜூனகட்டும் ஒரு ரகம். ஹைதராபாத்திலும், ஜூனகட்டிலும் இந்துக்களே அதிகம். முஸ்லிம்கள் மிகக்குறைவு. ஆனால் இவ்விரு சமஸ்தானங்களின் குட்டி ராஜாக்கள் இருவரும் பாகிஸ்தான் வாலாக்கள். காஷ்மீரம் அப்படியல்ல; அங்கு குடிமக்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள். அந்த சமஸ்தான மகாராஜா ஒரு இந்து. ஆனால் நிலைமையட்டும் தலைகீழாக உள்ளது. அங்கு பெரும்பாலோராக உள்ள முஸ்லிம்கள் பாகிஸ்தான் ஆட்சியை விரும்பவில்லை. அந்த குடிமக்கள் அத்தனைபேரும் காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா அவர்களின் தலைமையின்கீழ் பாகிஸ்தான் ஆட்சி வராமல் தடுக்க பகல் இரவாகப் பாடுபட்டுவருகின்றனர். ஆனால் பாகிஸ்தான் படை காஷ்மீருக்குள் புகுந்து பலாத்காரமாக காஷ்மீரை பாகிஸ்தானுடன் சேர்த்துக்கொள்ள கடந்த மூன்று நான்கு வாரங்களாகப் போராடிவருகின்றனர். இதனை எதிர்த்து காஷ்மீரப் பிரதமரின் வேண்டுகோளின்படியும், இந்திய யூனியன் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேருவின் உத்தரவுப்படியும் இந்தியத் துருப்புகள் போராடிவருகின்றன. இது வாசகர்கள் அனைவரும் அறிந்த விஷயம். அடுத்தபடியாக கடந்த சில வாரமாக பாகிஸ்தானுடன் சேர பிடிவாதம் செய்துகொண்டிருந்த ஜூனகட், சமஸ்தானத்தைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

ஜூனகட் வெற்றி

உண்மையில் ஜூனகட் சமஸ்தானம் பாகிஸ்தானில் சேர விருப்பவில்லை அந்த சமஸ்தான மக்களின் விருப்பத்துக்கு மாறாகவே ஜூனகட் நவாப் அந்த சமஸ்தானத்தைப் பாகிஸ்தானில் சேர்க்கமுயன்றார். நவாப்பின் முயற்சியை முறியடிக்கும் முறையிலே மக்கள் அங்கு புரட்சிசெய்ய ஆரம்பித்தனர். அந்த மக்களின் எதிர்ப்புக்குரல், இந்திய யூனியனைத் துணைக்கழைத்தது. நிலைமையைச் சமாளிக்கமுடியாத ஜூனகாட் நவாப், தலை தப்பினால் போதுமென்று பட்டப் பகலில் கோட்டைவிட்ட கதைபோல, ஜூனகட்டை விட்டே ஒருவருக்குந் தெரியாமல் கராச்சிக்கு ஓடி, ஜின்னாவிடம் அடைக்கலம் புகுந்தார். இந்த நிலையிலே ஜூனகட் மக்கள் இந்திய யூனியனைத் துணைக்கழைக்க, இந்திய யூனியன் படைகள் அந்த சமஸ்தானத்துக்குள் புகுந்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு அதனைப் பிடித்துவிட்டது. ஜூனகட் பணிந்தது. இந்திய யூனியன் படைகள் அங்கு பிரவேசித்து வெற்றி பெற்றதைக் கண்டு, மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்தியத் துருப்புக்களை, மக்கள் குதூகலத்துடன் வரவேற்றனர். சமஸ்தானம் முழுதும் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தோடியது. இந்திய டொமினியன் துருப்புகளை ஜூனகட் சமஸ்தான எல்லையில் மேஜர் "ஹார்வி ஜோன்ஸ்" மற்றும் உயர்தர சமஸ்தான அதிகாரிகள், பிரமுகர்கள், வரவேற்றனர். சமஸ்தான துறைமுகம், விமான நிலையம், ராணுவ காரியாலயம்' முதலியவற்றை இந்தியத் துருப்புகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன.

இந்திய ஜனநாயகம்

இவ்வளவும் ஜூனகட்டில் கிடைத்த வெற்றி, இந்திய யூனியன் சர்க்கார் இதனை தமக்கொரு பெரிய வெற்றி என்று கருதவில்லை. ஏனெனில், ஜூனகட் ஏற்கனவே இந்தியாவைச் சேர்ந்ததுதான். இப்பொழுது படைகள் அங்கு சென்று அதைப் பிடிக்க நேர்ந்தமைக்குக் காரணம், அங்குள்ள மக்களுக்குப் பாதுகாப்பளிக்கவேயாகும். அதிலும் சிறப்பாக சிறுபான்மையோரான முஸ்லிம்களைக் காக்கவே இந்த ஏற்பாடு. எனவே, இதனை பலாத்காரத்தால் ஏற்பட்ட வெற்றி என்று சொல்லிவிடமுடியாது. ஜூனகட் பணிந்துவிட்ட காரணத்தினாலேயே, அந்த சமஸ்தானம் இந்திய யூனியனுடன் சேர்ந்துவிட்டதாகக் கொள்ளமுடியாது. யூனியன் சர்க்காரும் அப்படிக் கருதவில்லை. நவாபுடன் சமரசப் பேச்சுகள் நடத்தியாவது, பொதுஜன வோட் எடுத்தாவதுதான் அந்த சமஸ்தானத்தை இந்திய யூனியனுடன், சேர்த்துக்கொள்ளப்போகிறனர். இதிலிருந்தே இந்திய யூனியன் ஜனநாயகக் கொள்கையைக் கை விட்டுவிடவில்லை என்பதை, பாகிஸ்தான் வாலாக்கள் தெரிந்துகொள்ளட்டும்.

ஜூனகட் திவான் பல்டி

உண்மை நிலைமை இப்படியிருக்க ஜூனகட்டுக்குள் இந்திய படைகள் பிரவேசித்தது சட்ட விரோதமானது, சர்வதேச சட்டத்தை மீறியதாகும் என்றெல்லாம், பாகிஸ்தான் சர்க்கார் அதிகாரிகள் பேச ஆரம்பித்திருக்கின்றனர். முன்னர் இந்திய யூனியனை ஆதரித்த ஜூனகட் திவான்கூட பின்னர், பல்டி அடித்துவிட்டார். ஜூனகட் இன்னமும் பாகிஸ்தானிலேயே இருக்கிறது என்றும், பாதுகாப்பிற்காகவே இந்திய யூனியனை அழைத்ததாகவும் கூறுகிறார். அது மட்டுமல்ல; அந்த திவான் தான் அடித்த பல்டிக்கு மற்றொரு விசித்திரமான காரணம் கூறுகிறார். அவர் கூறுகிறார் கேளுங்கள்;

"பாகிஸ்தானுக்குத் தெரியாமல் இந்திய யூனியனில் ஜூனகட் சேராது. பாகிஸ்தான் உதவியை ஜூனகட் கோராவிடினும், சட்டம், அமைதியை நிலைநாட்டுவதில், உதவி புரிவதாக பாகிஸ்தான் சர்க்கார் வாக்களித்தது. இரு டொமினியன்களுக்கிடையே சச்சரவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் நேரிடும்படி விடக்கூடாதென நவாப் கருதியதால் உதவியை சமஸ்தானம் ஏற்கவில்லை. பாகிஸ்தானைவிட இந்திய யூனியனில் வலிவுடனிருக்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்திடமுள்ள பீதியே ஜூனகத் பாகிஸ்தானில் சேருவதற்கு முக்கிய காரணம்." என்று பேசியிருக்கிறார். கம்யூனிஸ்டுகளுக்குப் பயந்துதான் ஜூனகட் பாகிஸ்தானில் சேர்ந்ததாம். எப்படியிருக்கு நியாயம்? சரியான சமாதானம் கூறமுடியாத வேளையில், எதையாவது உளறிக் கொட்டுவது சில நடைய வழக்கம். அதையேதான் இந்த திவானும் செய்கிறார்.

கல்கத்தா மாகாநாடு

அன்று வங்காளத்தில் படுகொலைகள் நடைபெற ஆதிகர்த்தாவாக இருந்த வங்கப் பிரதமர் சுஹர்வர்த்திக்குத் கொஞ்சகாலமாக ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது. இந்து-முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்டப்போவதாகக் கூத்தாடுகிறார். வங்காளத்தில் காந்திஜி தங்கியிருந்தபோது, அவரது சேவைகளை வானளாவப் புகழ்ந்தார். இப்பொழுதும் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக அரும்பாடுபடுவதுபோல காட்டிக்கொள்ளுகிறார். ஆனால் அவர் என்னக் கூத்தாடினாலும், காரியத்திலேயே கண்ணாயிருக்கிறார் என்பதும், அவர் போடுவதெல்லாம் வெளிவேஷம் என்பதும் தெரியாமற் போகவில்லை. இதனை விளக்கவேண்டுமானால், சமீபத்தில் அவர் தலைமையின்கீழ் கூடிய இந்திய முஸ்லிம் தலைவர்கள் மகாநாட்டு நடவடிக்கைகளை கவனித்தாலே போதும். இந்த மகாநாட்டில் 18 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அவற்றுள் இந்திய மக்களிடையே ஒற்றுமையை உண்டுபண்ணவும், இரு டொமினியன்களுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தும்படியும், காந்திஜியையும் நேருவையும் கேட்டுக்கொள்வது ஒன்று. இது நமக்குத் தெரிந்த விஷயந்தான். இப்போதுள்ள நிலைமையில் இதில் ஆச்சரியமொன்றுமில்லை. லீகர்கள் இத்தகைய தீர்மானம் ஒன்றை செய்யாவிட்டால் இந்திய யூனியன் மக்களுடைய நம்பிக்கையைப் பெறமுடியாது. அடுத்தபடியாக அம் மகாநாடு செய்துள்ள தீர்[illegible] தீர்மானங்களையும் [illegible] [illegible]ழர் சுஹர்வர்த்தி, இந்திய யூனியன் முஸ[illegible] யூனியன் சர்க்காரிடம் விசுவாசமுள்ளவர்களாக, நடந்துகொள்ளவேண்டுமென்பதுபோல் வெளிவேஷம் போடுகிறாரேயன்றி, உண்மையில் அவருக்கோ, அவரது சகாக்களுக்கோ, அத்தகைய நல்லெண்ணம் கிடையாது. மைனாரிட்டிகளுக்கு நம்பிக்கை ஏற்படும்வண்ணம், அரசாங்க உத்தியோகங்களில் அவர்களுக்குப் பங்குதரவேண்டும் என்று கூறுகிறது, இம்மகாநாட்டுத் தீர்மானம். ரொம்ப சரி, அப்படியே தருவோம். ஆனால் இப்பொழுது முஸ்லிம் தலைவர்கள் என்று சொல்லப்படும் சிலர், பதவிகளிலிருந்துகொண்டே இந்திய யூனியனுக்கு எதிராக காரியங்களைச் செய்துவருகின்றனரே, இது ஏன்? இவர்களில் பலர் ரகசியமாக ஆயுதங்கள் திரட்டி வைத்திருக்கிறார்களே, இது ஏன்? இல்லை என்று இவர்களால் சொல்லமுடியுமா? இதெல்லாம் இந்த மகாநாட்டினருக்குத் தெரியாமற் போனதேன்?

யாருக்குப் பாதுகாப்பு?

மைனாரிட்டிகளுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டும் என்று, இந்திய யூனியனுக்குப் புத்திசொல்ல வந்திருக்கும் சுஹர்வர்த்தியார், இம்மாதிரி ஆங்காங்கே முஸ்லிம் தலைவர்கள் ரகசியமாக ஆயுதங்களை சேகரித்துவைப்பதைமட்டும் கண்டிக்காததேன்? இந்த ரகசிய ஆயுத சேகரிப்பு நடந்துவருகையில் யூனியன் சர்க்காருக்கோ மற்றெந்த சர்க்காருக்கோ லீகர்களிடம் எப்படி நம்பிக்கை ஏற்படும்? யூனியன் சர்க்கார், மைனாரிட்டிகளுக்கு தாராளமான பாதுகாப்பளிக்கத் தயார். ஆனால் இந்திய யூனியனில் உள்ள லீகர்கள் தமமை ஒரு தனிப்

(அடுத்த பக்கம் பார்க்க)

தமிழாசிரியர் துக்கவாரம்

'மணியம்'

சென்னைத் தமிழாசிரியர் கழகப் 2-11-47 ல் முடிவு செய்த படியே 10-11-47 முதல் தமிழாசிரியர் துக்கவாரம் கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழாசிரியர் யாவரும் 'தமிழ் வாழ்க, தமிழாசிரியர் நிலை உயர்க' என்று பொறிக்கப் பெற்றுள்ள இலச்சினையை (*Badge*) அணிந்துள்ளனர். பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் மிகவும் ஆர்வங் காட்டியதுடன், ஏராளமான இலச்சினைகளையும் பெற்று அணிந்துகொண்டுள்ளனர். சிறப்பாகத் தாய் மொழியாசிரியர்களின் நலனுக்காகவும் (தமிழ் தெலுங்கு முதலியன) பொதுவாக எல்லா ஆசிரியர்களின் நிலை உயர்வதற்காகவும் மேற்கொள்ளப் பெற்றுள்ள இக்கிளர்ச்சியில், பொதுமக்களும், தொழிலாளர் தலைவர்களும் தமிழ், ஆங்கிலம், முதலிய எல்லாப் பத்திரிகாசிரியர்களும், கீழ், மேல் சட்டசபை உறுப்பினர்களும் (M. L. A, M L. C.) நகராண்மைக் கழக உறுப்பினர்களும், எல்லா அரசியல் கட்சியைச்சேர்ந்தவர்களும், தலைமையாசிரியர்களும், ஆசிரியத் தோழர்கள் எல்லோருமே கலந்து கொண்டுள்ளனர். தக்க உதவிகளும் செய்து ஊக்கி வருகின்றனர். பலர் மனமுவந்து கூட்டங்களிற் கலந்து கொண்டும், சொற்பொழி வாற்றியும், தலைமை வகித்தும், பொருளுதவி புரிந்தும் தமிழாசிரியர்களுக்குத் துணைசெய்ய முன் வந்துள்ளமை, பெரிதும் போற்றத் தக்கதாம்.

இதுவரையும் நடந்தகூட்டங்கள் யாவும சிறப்பாக நடைபெற்றுள்ளன. பொதுமக்களின் ஆதரவும் நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. நியாயத்திற்காக, நேர்மைக்காகத் தொடங்கப் பெற்றுள்ள இக்கிளர்ச்சியில் வெற்றி கிடைப்பது உறுதி. பொது மக்கள் ஆதரவைப் பெற்ற பிறகு, மாணவர்களின் ஆர்வம் நிறைந்த உளளக் கிளர்ச்சியைப் பெற்ற பிறகு, உடனுழைக்கும் எல்லா ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் பெற்றபிறகு, தலைமையாசிரியர்களின் தயவையும் தேடிக் கொண்ட பிறகு, நகராண்மைக் கழக, சட்டசபை உறுப்பினர்களின் நல்லெண்ணத்தையும், உதவியையும் பெற்ற பிறகு, ஒரு கிளர்ச்சி பயன் தராமற் போகாதென்பது ஒருதலை. பத்திரிகாசிரியர்கள் அத்தனைபேரும் துணை நிற்க எடுத்த காரியம் நிச்சயமாக வெற்றி பெற்றே தீரும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. வருங்கால நாட்டு மக்களாகிய மாணவர்கள் கலந்து கொண்ட பிறகும் நடவாத, நிறைவேறாத, செயல் ஒன்று உண்டோ! இல்லை! இல்லை!! எக்காலத்தும் இல்லை.

முதற் கூட்டம். புரசை முத்தையச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் 10-11-47 மாலை 4-30 மணிக்குத் தொடங்கியது. புலவர் திரு. வே த. அர்ச்சுனனவர்கள் தலைமை தாங்க, புலவர் மா. வெ இராகவன் தொழிலாளர் தலைவர் வ. சு. தேவசுந்தரம், எழுத்தாளர் த. சிங்காரவேலன் முதலியோர் தமிழாசிரியர்கள் நிலைபற்றியும், அவர் தம் ஊதிபத்திட்டம்பற்றி அரசியலார்கொண்டுள்ள பிழைபாடான கருத்துப்பற்றியும் விரிவாகப் பேசினர். தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிந்தது.

இரண்டாவது கூட்டம். வண்ணாரப்பேட்டை நகராண்மைக் கழகப் பள்ளியில் 11—11—47 மாலை 5 மணிக்குத் தொடங்கியது. நகராண்மைக் கழக உறுப்பினர் திரு. எ. பி. பார்த்தசாரதி நாயக்கரவர்கள் தலைமை தாங்க, முத்தையன், நக்கீரர் கழகச் செயலாளர். சிறுவை மோகனசுந்தரம், மாணவர் மன்றத்தைச் சார்ந்த திரு. அங்கமுத்து, நகராண்மைக் கழக உறுப்பினர், திருவேங்கட நாயக்கர் முதலானோர் தமிழாசிரியர் துக்கவாரம் கொண்டாட நேர்ந்தமைக்கு வருந்தியும், அரசியலார் தமிழாசிரியர் தம் குறைகளைப் போக்க உடனே முன்வந்து ஆவன செய்ய வேண்டுமென்றும், பேசிய பின்னர் புலவர் ஆறுமுகம் செட்டியாரவர்கள் நன்றி கூறக் கூட்டம் முடிவு பெற்றது.

மூன்றாவது கூட்டம் பெரம்பூர் உயர்நிலைப்பள்ளியில் 12—11—47 மாலை 5-மணிக்குத் தொடங்கியது. புலவர். ஆலங்குடி முத்தையன் அவர்கள் தலைமை வகிக்க மேல் சட்ட சபை உறுப்பினர்-தொழிலாளர் தலைவர் திரு பி! ஆர். கே. சர்மா, பி. ஏ., எம். எல். சி அவர்களும் நேரு அச்சுக்கூடத் தலைவர் சென்னை மாகாண அச்சுக்கோர்ப்போர் சங்கத் தலைவர், பெரம்பூர் உணவுக் கமிட்டித் தலைவர் திரு. ஆறுமுகம் பிள்ளையவர்களும் இன்றைய தமிழாசிரியர் நிலைபற்றி வருந்துவதாகவும், இந்த நிலையில தமிழாசிரியர்களை வைத்திருப்பது அதிலும் சுதந்திரம் பெற்றுவிட்டதாகக் கூறப்படும் இந்த நாளில், தமிழார்வமுடையவராகக் கூறிக் கொள்ளப்படும், தமிழுக்கே உழைப்பதாகக் கூறிக்கொள்ளும் திரு. அவினாசிலிங்கம் செட்டியாரவர்களைக் கல்வியமைச்சராகக் கொண்டுள்ள இந்த நாளிலே, தமிழாசிரியர்கள் துக்கவாரங் கொண்டாடத்தக்க நிலையிலே வைத்திருப்பது, தமிழ்நாட்டிற்கே பெருந்த, என்றென்றைக்கும் மாற்ற முடியாத, அவமானமென்றும், இப்போதாகிலும் அரசியலார் முனவந்து ஆவன செய்ய வேண்டுமென்றும் பேசியதுடன், என்றுந் தாங்கள் மனமுவந்து ஒத்துழைப்பதாகவும், ஒல்லும் வகையெல்லாம் முயலுவதாகவும் உறுதி கூறினர்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் திரு. வே. த. அர்ச்சுனனவர்கள் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. ஒவ்வொரு கூட்டத்திலும் நிறைவேற்றப்பெற்ற தீர்மானம் வருமாறு:—

தமிழாசிரியர்களுக்கும் இதர பாட ஆசிரியர்களுக்குச் சமமாக ஊதியம் உயர்த்தியும், பிற தகுதிகள் தந்தும் அவர்களை ஊக்குதல் வேண்டும் என, மாபெரும் மாநாடுகள் இருமுறை கூட்டியும். கல்வியமைச்சரைப் பலமுறை நேரிற் கண்டு வேண்டியும், ஒரு சிறிதும் பயன் பெறாதது குறித்து இக்கூட்டம் வருந்துகிறது. இத்துக்க வாரக் கூட்டங் காரணமாக, மற்றுமோர் முறை அமைச்சரவர்களை நேரிற் கண்டு இணங்காவிடில் தக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இக்கூட்டம் அரசாங்கத்தாருக்கு அறிவித்துக் கொள்ளுகிறது.

ஏனைய கூட்ட நிகழ்ச்சிகள் பின்னர் வரும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

பட்ட கூட்டத்தினராக எண்ணிக் கொண்டு, இந்தியாவைத் தனது தாயகமாக நினையாமல், பாக்கிஸ்தானையோ வேறு அந்நிய நாட்டையோ தமக்குத் தாயகமாக நினைத்துக் கொண்டு காரியங்களைச் செய்து வருகின்றனரே, இது ஏன்? உண்மை நிலைமை இப்படியிருக்க கல்கத்தா மகாநாட்டில் சுஹார்வர்த்தியார், கொஞ்சமும் கூசாமல், இந்திய சர்க்கார் மூஸ்லிம்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்ததைக் கண்டித்திருக்கிறார். அதிகாரிகள் வரை முறையின்றி முஸ்லிம்களின் வீடுகளைச் சோதனைப் போடுவதாக ஓலமிடுகின்றனர். உள்ளத்தில் மோசமும் உதட்டில் நேசமும் வைத்துக் கொண்டு உறவாடும் இவர்களிடம் இந்திய யூனியன் எப்படித்தான் நம்பிக்கை கொள்ள முடியும்? இவற்றையெல்லாம் பற்றி ஒருவார்த்தை கூட பேசாமல், ஊரை ஏமாற்ற ஒரு மகாநாடு கூடி விட்டால் போதுமா? இதைக் கண்டு இந்தியத் தலைவர்கள் ஏமாந்து விடுவார்களா? ஒருநாளும் ஏமாற மாட்டார்கள். ஆகவே முஸ்லிம் தோழர்கள் இனியாகிலும் உள்ளத்தில் உண்மை ஒளி தோன்றப் பெற்று, ஒற்றுமைக்கு வழி கோலுவார்களாக.

பேபி கமலாவின் அழகுபடுத்திக்கொள்ளும் முறை

லக்ஸ் டாய்லட் சோப்...

கட்டழகி கமலாவின் அப்பழுக்கற்ற இனிதான வதனமே அவரது கவர்ச்சிக்கு முக்கிய காரணம். நீடித்து நிற்கும் சரும எழிலின் ரகசியம் தவறாமல் ஒரு அழகுபடுத்திக்கொள்ளும்முறையை கையாள்வதுதான் என்பது அவருக்குத் தெரியும். ஆகையால், சரும பாதுகாப்பில் தனி சிரத்தை யெடுத்துக்கொள்கிறார். லக்ஸ் டாய்லட் சோப்பின் தாராளமாயுண்டாகும் நுரை மணங்கொண்ட நுரை அவர் சருமத்தை குளுமையாகவும், மிருதுவாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்கிறது. நீங்களும் ஏன் கமலாவைப்போல் இந்த வெண்மையான குற்றமற்ற சோப்பைக் கொண்டு உங்கள் வதன எழிலை காப்பாற்றக்கூடாது?

ஏ.வி.எம் பிரொடக்ஷன்ஸாரின் "நாம் இருவர்" என்ற புதுப் படத்தில் பேபி கமலாவை பார்க்கலாம். இந்த சமூகப் படத்தில் அவரது சிறந்த நடிப்பு அவருக்கு தனிப் பெருமையளிக்கும்.



லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களுக்கு அழகுதரும் சோப்

LTS. 162-50-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

இனப் பற்று

D. S. வேலன்

ஒரு நாடு முன்னேற வேண்டுமாயின் அந்நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்று வளரவேண்டும். நாட்டுப்பற்று வளரவேண்டுமாயின் இனப்பற்று வளரவேண்டும். இனப்பற்று வளரவேண்டுமாயின் மொழிப்பற்று வளரவேண்டும். இதனைச் சுருங்கச் சொல்லவேண்டுமானல் நாட்டுப் பற்றுக்கு அடிப்படையாக வேண்டப்படுவது மொழிப்பற்று. அதாவது அந்தந்த நாட்டுமக்கள் தத்தம் தாய்மொழியிடம் பற்றுக்கொள்ளவேண்டும். இங்ஙனம் தாய்மொழியிடம் மக்கள், பற்று கொள்ள வேண்டிய அவசியத்தைக் குறித்து சென்ற ஆண்டு "தமிழ்மணி"யின் முதல் இதழில் "தாய்மொழிப் பற்று" என்ற தலைப்பின் கீழ், கட்டுரையொன்று வரைந்திருந்தேன் என்பதை வாசகர்கள் அறிவர். நாடு நலம்பெற தாய்மொழிப்பற்று, நாட்டுப்பற்று மொழிப் பற்று ஆகிய முப்பற்றுகளும் அவசியம் என்பதை பொதுவாகவும், அவற்றுள் மொழிப்பற்றினைப் பற்றி சற்று விரிவாகவும் குறிப்பிட்டிருந்தேன். இனி அடுத்தபடியாக "இனப்பற்று" என்பது குறித்து ஈண்டு சில எழுத விழைகின்றேன்.

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு — நம்மில்
ஒற்றுமை நீங்கில் நம் அனைவருக்கும்
—தாழ்வு

என்றார் பாரதியார். பாரதியாருடைய இந்த வாக்கைச் சற்று துருவி ஆராய்ந்து பாருங்கள். இதனால் மக்களை வாழவைப்பது ஒற்றுமை, தாழவைப்பது ஒற்றுமையின்மை, என்பது தெளிவாகப் புலனாகின்றது. எனவே இந்த ஒற்றுமை வளரவேண்டுமானால் வேற்றுமைகள் அகலவேண்டுவது அவசியம். நாட்டு மக்களுடைய நல்வாழ்க்கை என்னும் நிலத்திலே வேற்றுமை என்னும் களைகள் இருக்குமாயின் ஒற்றுமை வளராது. ஒற்றுமை வித்தை ஊன்ற வேண்டுமானல் மக்கள் உள்ளத்திலே இனப்பற்று அவசியம் இடம் பெறவேண்டும்.

சாதி வேற்றுமைகள் ஒழியவேண்டும்; சமத்துவ சமுதாயம் அமையவேண்டும், என்றெல்லாம் நாம் பலகாலமாகப் பேசிவருகிறோம். ஆனல் சாதி வேற்றுமைகள் இன்னும் ஒழிந்தபாடில்லை. இது ஏன்? இதே சமயத்தில் பிற இனத்தவரைப் பாருங்கள் இஸ்லாமியரிடம் சாதி வேற்றுமை இருக்கின்றதா? மேனாட்டவரிடம் மருந்துக்கேனும் சாதி என்பதைக் காணமுடிகிறதா? ஆனல் தமிழர்களாகிய நம்மிடையே மாத்திரம் அந்தப் பாழும் சாதி வேற்றுமை ஆழப்பதிந்து அசைக்க முடியாதிருப்பது ஏன்? இனப்பற்று இல்லாததுதான் இதற்குக் காரணம்.

தமிழன் பரந்த நோக்கமுடையவன். அவனது பரந்த நோக்கம் அவனுக்கு அவசியமாக இருக்கவேண்டிய இனப்பற்றை அழித்து விட்டது. வந்தாரையெல்லாம் வரவேற்று ஆதரவளித்தானே யன்றி வந்தவர் தன் இனத்தவர் தானா? தன் இனத்தவரல்லாத பிற இனத்தவரால் என்னென்ன தீங்கு விளையும் என்பனவற்றைச் சற்றேனும் எண்ணிப் பார்த்தான் இல்லை. தன்னினம் என்றெண்ணுவது சுயநலம் எனக் கருதி இனத்தை மறந்தான். இனப்பற்று அழியவே பிற இனத்தவரின் சூழ்ச்சிக்கு ஆளானன். அப்பொழுதுதான் சாதி வேற்றுமை தலைகாட்ட ஆரம்பித்தது. எனவே இன்றுள்ள நிலைமாறி தமிழர் சமத்துவமாக வாழவேண்டுமாயின், தமிழரிடையே இனப்பற்று வளரவேண்டும். தமிழர் ஒரு தனியினம் என்ற உணர்ச்சி ஒவ்வொரு தமிழருடைய உள்ளத்திலும் இடம்பெறவேண்டும்.

இனப்பற்று இல்லாத மக்கட் கூட்டம் இன்ப வாழ்வை எதிர்பார்க்கவே முடியாது. இந்த இனப்பற்று என்பது உயிர்களிடத்துக் காணப்படவேண்டிய அவசியமானதோர் பண்பு. பகுத்தறிவில்லாத விலங்கினங்களைப் பாருங்கள். பறவைக் கூட்டத்தைப் பாருங்கள்; அவைகளிடமெல்லாம் ஒருவித இனப்பற்று இருப்பதையும், அவை கூட்டம் கூட்டமாகக்கூடி வாழ்வதையும் நாள் தோறும் நாம் கண்டு வருகிறோம் அல்லவா? இங்ஙனம் மக்களினும் தாழ்ந்த பிறவியாகக் கருதப்படும் விலங்கினங்களுக்கிருக்கும் உணர்வு மக்களிடம் காணப்படவில்லையெனில் அதனை என்னவென்பது? எனவே இனியாவது நாம் இந்த இனப்பற்று கொள்ளவேண்டிய அவசியத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். இனப்பற்று கொள்ளுவது தவறு என்றோ சுயநலமென்றோ யாரும் கருதக்கூடாது. இத்தகைய கருத்து அறியாமையினால் எழுந்ததேயன்றி வேறில்லை. ஈண்டு இனப்பற்று என்று நான் குறிப்பிடுவது ஜாதிப்பற்றினையல்ல; ஜாதிப்பற்று வேறு, இனப்பற்று வேறு. "ஜாதி" என்ற சொல்லே தமிழ்ச்சொல் அல்ல. பண்டைத் தமிழருக்கு ஜாதி வேற்றுமை கிடையாது. எனவே தமிழிலே அந்த சொல்லுக்கும் இடமில்லை. பண்டைத் தமிழரின் முதன் நூலாகிய தொல்காப்பியத்தினைத் துருவித் துருவிப் பார்த்தாலும் "ஜாதி" என்ற சொல்லைக் காணமுடியாது. இங்ஙனம் ஆதியில் காணமுடியாத ஜாதி பாதியில் எப்படி வந்தது? என்று சிலர் கேட்கலாம். அதற்குப் பதில் கூறப்புகின் இக்கட்டுரை விரிந்து செல்லும். அது பின்னர் ஆரிய-திராவிட பிரச்னையில் வந்து முடியும். ஆரிய திராவிட பிரச்னை பெரியதோர் பிரச்னை. எனவே அதனைப் பின்னர் கவனிப்போம்.

இப்பொழுது நமக்கு உடனடியாக வேண்டப்படுவது தமிழர் அனைவரும் ஒரே இனத்தவர் என்ற இனப்பற்று தான். இந்த இனப்பற்றை வளர்க்கவே நாம் பாடுபடவேண்டும். "தமிழன் என்றோர் இனம் உண்டு தனியாய், அவர்க்கோர் குணம் உண்டு" என்ற நாமக்கல் கவிஞரின் மொழியை தமிழர் மறத்தலாகாது. தமிழருடைய சிந்தனையும் செயலும் தமிழ் இனப்பற்றை வளர்ப்பதிலேயே செலவழிக்கப்படவேண்டும். ஜாதிப்பற்று கொள்ளுவது தவறு. அது ஒற்றுமையைக் குலைக்கும்; இனப்பற்று அப்படியல்ல; இனப்பற்றால் ஒற்றுமை உணர்ச்சி வளரும், வேற்றுமை உணர்ச்சி வீழ்ந்துபடும். சுயநலம், வகுப்புவாதம் எனவெல்லாம் குறை கூறப்படுவதெல்லாம் ஜாதி வேற்றுமையைக் குறித்தே கூறப்படுவனவாகும். பொதுவாக தமிழர் ஓர் தனி இனம் என்று சொல்லுவது சுயநலமோ வகுப்புவாதமோ ஆகாது. அப்படி யாராவது இந்த இனப்பற்றை வகுப்புவாதம் என்று சொல்லுவார்களேயாயின், அப்படிச் சொல்லுபவர்கள் தமிழர் அல்ல என்றுதான் சொல்லவேண்டும். இது ஒரு புறமிருக்க.

இத்தனைகாலம் இல்லாத இனப்பற்று இப்போது எழவேண்டிய அவசியம் என்னவெனில், நம்நாடு இப்போது சுதந்திரநாடாகத் திகழ்கிறது இந்த சுதந்திர நாட்டில் தமிழர் சுதந்திரமாக வாழவேண்டும். ஆனல் அப்படி வாழ முடியவில்லை என்பது நான் எனது அபிப்பிராயம். எப்படியெனில் தமிழ் நாட்டிலே உள்ள ஒரு சுயநலக் கூட்டம் தம்மையும் தமிழர் என்று சொல்லிக்கொள்ளுகிறது ஆனல் தமிழ் மொழியிடமோ, தமிழ் நாட்டிடமோ, பற்று கொள்ளாமல் தம்மைமட்டும் தமிழரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிக்கொண்டு தமிழர்மீது எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திவருகிறது. இதுகாறும் தமிழர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் இந்த ஆதிக்கத்தைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்படவில்லை. அன்று தமிழருடைய நாட்டமெல்லாம் வெள்ளையர் ஆதிக்கத்தை அகற்றுவதெங்ஙனம் என்பதிலேயே இருந்ததேயன்றி, இந்த உள்நாட்டு கொள்ளையர் ஆதிக்கத்தைக் குலைப்பதில் இல்லை. ஆனல் இன்றைய நிலை அதுவல்ல. எப்பாடு பட்டேனும் உள்நாட்டுக் கொள்ளையர் ஆதிக்கத்தை அழித்தே தீரவேண்டும். அழிக்காதவரை தமிழருக்கு வாழ்வே கிடையாது. இன்று தமிழர்மீது ஆதிக்கம் செலுத்தும் அந்த சுயநலக்கூட்டம் தன்னை ஒரு தனி இனமாக்கிக்கொண்டு அந்த இனப்பற்றுடன் வேலைசெய்து வருகிறது. இந்த இனப்பற்றுதான் அவர்கள் நம்மை ஆளும்படிச் செய்கிறது. எனவே அந்த இனப்பற்றை எதிர்த்து போராட தமிழரும் இனப்பற்று கொள்ளவேண்டும். தமிழர் வாழ

[அடுத்த பக்கம் பார்க்க]

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

48 ஆண்டுகள் பிரசித்தி பெற்ற

ஸ்ரீ அம்பாள்

நெ. 1 பட்டணம் பொடியை உபயோகித்து ஆனந்தமடையுங்கள். காரம், மணம், குணத்தில் இணையற்றது.

ஸ்ரீ அம்பாள் & கோ

தபால் பெட்டி நெ. 3. மதராஸ்

இனப் பற்று

[முன் பக்கத் தொடர்ச்சி]

* * *

வேண்டுமானால் தமிழ் இனப்பற்று வளரவேண்டும். தமிழ் அரசியல் தலைவர்களும், பத்திரிகாசிரியர்களும் மற்றவர்களும் இந்த இனப்பற்றினை வளர்க்க இடையறாது பாடுபட வேண்டும். அவர்களெல்லாம் இதுகாறும் மக்களுக்கு நாட்டுப்பற்றினை ஊட்டும் பெரும்பணியில் ஈடுபட்டிருந்தனர். அதற்கேற்றாற்போல் நாட்டுப் பற்று கொள்ளவேண்டிய அவசியம் மக்களுக்கு இருந்துவந்தது. இன்றய நிலை அதுவல்ல. நாம் கேட்ட விடுதலை கிடைத்துவிட்டது. இனி நமது அடுத்த வேலை நம் இனத்தை ஈடேற்றுவதாகும். இதுகாறும் எந்த தமிழனும், தமிழன் ஒரு தனி இனத்தவர் என்ற, எண்ணமே கொள்ளவில்லை. பொதுவாகத் தன்னை இந்தியன் என்றும், தன்னுடைய நாடு இந்தியா என்றும் சொல்லிவந்தான். இங்ஙனம் தன்னாடு இந்தியா; தான் ஒரு இந்தியன், என்ற எண்ணம் இதுவரையில் இருந்துவந்தது சரி. வெள்ளையனை வெளியேற்றத் தோன்றிய அந்த எண்ணம் வெற்றிபெற்றுவிட்டது. இனி அந்த எண்ணத்தைச்சற்று தமிழ் நாட்டின் பக்கம் திரும்பி தமிழ் நாடு, தமிழர், என்ற அளவுக்கு சுருக்கிக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் இந்தியா ஒரு பெரிய நிலப்பரப்பு. ஏறக்குறைய ஐரோப்பாவின் பரப்பளவை ஒத்ததாகும். இவ்வளவு பரந்த பூபாகத்தில் பல இனத்தவர் [illegible]கின்றனர். பொதுவாக அவர்கள் அனைவரும் இந்துக்கள் என்று அழைக்கப்பட்டபோதிலும் அவர்களிடையே வேறுபாடு இல்லாமலில்லை. தென்னாட்டைப்பொறுத்தவரையில் வட நாட்டவரைவிட, தென்னாட்டவர் கலை நாகரிகம், பண்பாடு முதலியவற்றில் வேறுபடுகின்றனர். தமிழர்களுடைய பண்பாட்டுக்கும் மார்வாடி, குஜராத்திகளின் பண்பாட்டிற்கும், அளவற்ற வேற்றுமைகள் உண்டு. எனவே இங்ஙனம் வேறுபட்ட பண்பாடுடைய ஒவ்வொரு இனத்தாரும் தத்தம் நலனைத்தான் நாடுவார்களேயன்றி பிற இனத்தின் நலத்தை நாடுவார்களென்று கூற இயலாது. எனவேதான் எல்லா துறைகளிலும் உயர் தனிப்பண்புகளைப்பெற்றிருக்கும் தமிழினத்தவராகிய நாம், ஓர் தனியினம் என்பதை உணர்ந்து நம்முடைய இனப்பற்றை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்கிறேன்.

இனப்பற்றில்லாத நாட்டு மக்கள் முன்னேறமுடியாது. அதுபோலவே இன்றயத்தினம் சகல துறைகளிலும் முன்னேற்ற மடைந்துள்ள ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்ட்டிரியா, முதலிய சின்னஞ் சிற நாட்டு மக்களிடம் இன உணர்ச்சி இருந்து வருவதைக்காணலாம். கடந்த யுத்தத்தில் உலகையே ஆட்டிவைத்தது ஜெர்மனியும் ஜப்பானும். அப்படி ஆட்டிவைத்தது சரியா? தவறா? என்பது வேறு விஷயம். இதில் நாம் கவனிக்கவேண்டுவது அங்ஙனம் உலகையே ஆட்டிவைக்கும் அளவுக்கு அந்நாடுகளுக்கு சக்தி வந்ததற்குக்காரணம் என்னவென்பதுதான்? அப்படிப் பார்க்கையில் அந்நாட்டு மக்களின் இனப்பற்றுதான் இதற்குக்காரணம் என்பது தெரியவரும். அந்த இனப்பற்றுதான் நாட்டின் வளத்தை அதிகரிக்கச்செய்யவும், பிறர் ஆதிக்கத்தினின்று தம்மைக் காப்பாற்றிக்கொள்ளவும் செய்தது.

ஆகவே, தமிழரும் இனப்பற்று கொள்ளவேண்டும். இனப்பற்று என்ற அளவிலே மற்ற பற்றுகள் அனைத்தும் அறுபட்டுவிடவேண்டியவைகளாகும். தமிழர்களுக்கிடையே பல ஜாதிப் பிரிவுகள் இருக்கலாம்; மதப் பிரிவுகள் இருக்கலாம்; கட்சிப் பிரிவுகள் இருக்கலாம். ஆனால், தமிழ் நாடு, தமிழர் நலம், என்ற பேச்சுகள் எழும்போது அவரவர் தங்களுடைய ஜாதி, மத, கட்சி, வேறுபாடுகளை உதறித் தள்ளிவிட்டு, ஒன்றுபடவேண்டும். அப்படி ஒன்றுபடவேண்டிய காலம் இனிமேல்தான் வரவேண்டும் என்று காத்துக்கொண்டிருப்பதில் பயனில்லை. ஆகஸ்டு 15-ல் சுதந்திரம் வந்துவிட்டதுபோலவே தமிழர் ஒன்றுபட வேண்டிய காலமும் அன்றே வந்துவிட்டது. இனி தமிழர் தமிழ் மொழி, கலை, நாகரிகம், நாட்டு எல்லை, ஆகியவற்றைக் காக்க அரும்பணியாற்ற வேண்டும். இதில் ஜாதி, மத, கட்சி வேற்றுமைகள் குறுக்கிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அவை குறுக்கிடாமல் பாதுகாக்கும் அரண்தான் இனப்பற்று.

இங்ஙனம் இனப்பற்று கொள்ள வேண்டும் என்று சொல்லுவதிலிருந்து அவரவர் தமது கட்சியையோ, கட்சிக் கொள்கையையோ விட்டுவிடவேண்டும் என்று சொல்லுவதாக யாரும் கருதிவிடக்கூடாது. இன உணர்ச்சி எல்லாவற்றையும் கடந்து நிற்பது. ஆனால், ஆபத்துக் காலத்தில் கை கொடுப்பதாகும். தமிழர் அனைவரும் ஒரே இனத்தவர் அல்லது, ஒரே குலத்தவர் என்ற எண்ணம் மக்களிடையே வலுக்க, வலுக்க ஜாதி வேற்றுமைகள் தானாக விலகிப் போகும். இனப்பற்றின் காரணமாக கட்சிப் பற்றினையோ, கட்சிக் கொள்கைகளையோ விட்டுக்கொடுக்கத் தேவையில்லை என்று மேலே கூறினேன். ஆனால், ஜாதிப் பற்றைப்பற்றி மாத்திரம் அத்தகைய அறிவுரையைத் தர நான் விரும்பவில்லை. ஜாதிப் பற்று ஒழியவேண்டிய பற்று. அப்பற்று உள்ளவரை இந்த நாடு உருப்படப்போவதில்லை. இதுகாறும் இந்த நாடு சீரழிந்ததற்கும் இந்தப் பொல்லாத ஜாதிப் பற்றுதான் காரணம். இப்பொழுது நாம் எந்த இனப்பற்று வேண்டுமென்று கூறுகிறோமோ, அந்த இனப்பற்றை அழித்தது இதே ஜாதிப் பற்றுதான்.

எனவே, தமிழ்ப் பெருங்குடி மக்களே, உங்களிடையே உள்ள, ஜாதிப் பற்றினை அறவே ஒழித்துவிட்டு, இனப்பற்றை வளர்த்துக்கொள்ளுங்கள். நாடு, மக்கள் நலம் என்பவைகளைக் குறிக்கோளாகக் கொண்டு, சமயம் வாய்க்கும்போது கொடி வித்தியாசம், உடை வித்தியாசம் இவற்றை உதறித் தள்ளிவிட்டு, ஒன்றுபடுங்கள் வீணான போராட்டங்களில் இறங்கி உங்களுக்குள்ளேயே பிளவை உண்டு பண்ணிக்கொள்ளாதீர்கள். பிளவு, இனப்பற்றைச் சீர்குலையச் செய்கிறது. இனப்பற்று குலைந்தால் எதிரிகளுக்குக் கொண்டாட்டம். இதனால் உங்களுடைய எதிர்கால வாழ்வும், பாழ்பட்டுப்போகும். எனவே, வேண்டாத பற்றுகளை விட்டொழித்து இனப்பற்றைக் கடைப்பிடிக்குமாறு உங்களனைவரையும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உங்களுக்குத் தெரியுமா?

1. சஹாரா பாலைவனம் 2,000,000 சதுர மைல் பரப்பளவுள்ளது.
2. மீன்களுக்கு அவைகளுடைய செதில்களே சுவாசப்பையாக வேலை செய்கின்றன.
3. நான்கு பெரிய பிரிட்டிஷ் ரயில்வேக்களின் மொத்த பிரயாணப் பாதை 19,000 மைல்களுக்கு மேற்பட்டதாகும்.
4. லண்டன் நகரத் தோட்டமொன்றில் 30 அங்குல நீளமும், ஒரு மனிதனுடைய மணிக்கட்டு அளவு அகலமும் கொண்ட அவரைக்காய்கள் பயிராகின்றன.
5. ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் மிருகங்களைப் பற்றி அறிந்துகொள்ள மிருகக் கூட்டங்கள் நிறைந்த ஒரு தனி பகுதி இருந்து வருகிறது.
6. உலகத்தில் அதிகமாக செம்பு அகப்படும் இடம் பெல்ஜியன் காங்கோ. அங்கு 6.5 பங்கு இந்த உலோகம் கிடைக்கிறது.
7. கிரிக்கட் விளையாட்டு சட்டப்படி கிரிக்கட் தடுப்பு 30 அங்குல நீளத்திற்கும், 45 அங்குல அகலத்திற்கும் அதிகப்படாமலிருக்க வேண்டும்.
8. லண்டன் ஹைட் பார்க் கார்னர் வழியாக தினமும் 78000 மோட்டார் வண்டிகள் செல்லுகின்றன-
9. பூமிக்குச் மிகச் சமீபத்திலுள்ள கிரகம் ஆங்கிலத்தில் "மார்ஸ்" என்று அழைக்கப்படும் கிரகமாகும்.
10. மனித எலும்புக்கூட்டில் 200-க்கு மேற்பட்ட தனித்தனி எலும்புகள் இருக்கின்றன.
11. ஒரு பைண்ட தண்ணீரின் எடை ஒன்றேகால் பவுண்டு.

!!! பட்டு & நூல் !!!
கைத்தறி ஜவுளிகள் கண்ட்ரோல் விலைக்கு கிடைக்குமிடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53, கிடங்கு தெரு, ஜி. டி. மதராஸ்.

உண்மையான தேவ ஔஷதங்கள்
அனுபவமானவை! நம்பிக்கையானவை!!
பழனி சி. எம். சாமி. மருந்துகள்.
(அசல்) தங்க பஸ்பம் :—வாலிபருக்கு ஏற்றது; வயோதிகருக்குத் தகுந்தது, நோயாளருக்கு உகந்தது. சகல வியாதிகளையும் நீக்கி வலிமையையும், இன்பத்தையும் ஊக்கத்தையும், வாலிபத்தன்மையும, ரத்தவிருத்தியையும் உண்டாக்கும்.
24-நாள் பஸ்பம் விலை ரூ. 20-0-0
குருபஸ்பம் (க்ஷயரோக நிவாரணி) இது ஓர் அற்புத சஞ்சீவி காசம், க்ஷயம், இளைப்பு, (தொய்வு) இருமல், தும்மல், கோழை, கபக்கட்டு, மார்ச்சளி, மூச்சடைப்பு, சுரம், ரத்தம் வருதல் இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் குணமடையும். இதற்கு சமமான மருந்து கிடையாது.
24-நாள் பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 20-0-0
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S.I

படிப்பது ராமாயணம்! இடிப்பது?
என்னென்ன "குல்மால்"!
கையில் எடுப்பது ஜெபமாலை!
கக்கத்தில் வைப்பது?
ஊருக்கு உபதேசம், உனக்கில்லையடி!

படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்! இந்த போக்கில்தான் இன்று காங்கிரஸ் மந்திரிகள் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசுவதெல்லாம் ஜனநாயகமாகவும்; ஜனங்கள் ஆட்சி, மக்கள் மந்திரிசபை என்று சொல்லி, மக்களைப் பசப்பிவருகிறார்கள்! ஆனால் செய்வதோ நேர்மாறு. காங்கிரஸ் மந்திரிகள், அதிகாரத்துக்கு வந்ததிலிருந்தே, இதை மக்கள், கண்கூடாகக் கண்டிருக்கலாம்! போனதெல்லாம் போகட்டும்; ஜமீன்தார், இனாம்தார் ஒழிப்பு மசோதா சம்பந்தமாக, இதே மந்திரிகள், எத்தனை 'பல்டி' அடித்தார்கள்; என்னென்ன "குல்மால்" செய்துவருகிறார்களென்பது மக்களுக்குத் தெரியும்! மசோதா சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியில் விவாதத்துக்கு வந்ததும், அநேக மந்திரிகள் எதிர்த்தார்கள்; ஒரு சில மந்திரிகள், மசோதாவை நேரடியாக எதிர்க்கத் துணியாமல் நடுநிலைமை வகித்தார்கள். முதன் மந்திரியே எதிர்க்கத் துணிந்தார்; மசோதாவைக் கொண்டுவந்த ரெவின்யூ மந்திரியே அதை ஆதரித்து வோட் கொடுக்கத் தைரியமின்றிப் பதுங்கினாரென்றால், மந்திரிகளின் போக்கைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை! மாஜி முதன் மந்திரி ஆந்திர சிங்கம் பிரகாசமவர்களுகூட வாலை மடக்கிக்கொண்டு பதுங்கிய அலட்சணம், எல்லோருக்கும் தெரியும்! அப்புறம் டில்லிக்குக் காவடி தூக்கினார்கள்! இந்த லட்சணத்திலிருக்கிறது சென்னை மந்திரி சபை! இதற்குக் காரணம் என்ன? ஜமீன்தார்கள் நிறைந்த மந்திரி சபையாக இருப்பதுதான், இதற்குக் காரணம்; மேலும், பணமூட்டைகள் உருளுவது மற்றொரு காரணம்; மந்திரிகளும் பணமூட்டைகளிடம், சிக்கி தனம், திண்டாடுவது மூன்றாவது காரணம். பணமூட்டைகளிடம் கட்டுண்டு, திக்குமுக்காடும் இந்த மந்திரி சபையிடமிருந்து ஏழை மக்கள் வேறு என்னதான் எதிர்பார்க்க முடியும்? என்றாலும், இதே மந்திரிகள் ஜனநாயகம் பேசுகிறார்கள்; மக்கள் மந்திரிசபை என்றும். வாய்கூசாமல் சொல்லுகிறார்கள்! கையிலெடுப்பது ஜெபமாலை, கட்கத்தில் வைப்பது கன்னக்கோல் போலல்லவா இவர்கள் செயல் இருக்கிறது?

எதிர்க்கவேண்டும்

ஜமீன்தார்கள், இனாம்தார்களுக்கு நஷ்டஈடு கொடுக்க 10 கோடி ரூபாய் திட்டம் போட்டார்கள்; அது அனுமார் வால்போல், இருபது கோடிக்கு வளர்ந்துவிடுமோவென்று, மக்கள் நெஞ்சில் கைவைத்துக்கொண்டிருக்கிறார்கள்! ஏழை மக்களின் வரிப்பணத்தைக்கொண்டு, இவ்வளவு பெருந்தொகையை, வாரிக்கொடுக்க அவர்கள் திட்டம் போட்டிருப்பது அநியாயமல்லவா? பாவமல்லவா? இது கடவுளுக்கு ஏற்குமா? நீங்களே சொல்லுங்கள். ஆகவே, ஏழை மக்கள் ஜமீன்தார்களுக்கும், இனாம்தார்களுக்கும், நஷ்டஈடு கொடுக்கக்கூடாதென்று காடியாய்க் கத்துகிறார்கள்! அந்த ஏழை மக்களின் கூக்குரல் அவர்கள் செவியில் ஏறுகிறதா? இல்லை; ஏறவில்லை. மந்திரிகள் அவர்கள் போக்கிலேயே போய்க்கொண்டிருக்கிறார்கள்; இனம் இனத்தோடு, வெள்ளாடு தனதோடு, என்று சொல்லுவது பொய்யாகுமா? பணம் பணத்தோடுதானே சேரும்? ஏழைகளுக்கும், பணமூட்டைகளுக்கும் எப்படி உறவு ஏற்படப்போகிறது? படுகுழிக்கும், மலைக்குமுள்ள வித்தியாசம் இருக்கும்போது இந்த ஜமீன்தார் மந்திரிகள் பணமூட்டைகளையே ஆதரித்ததில் ஆச்சரியமென்ன? ஜமீன்தார்களும், இனாம்தார்களும் ஏற்கனவே பணத்தில் மிதந்துகொண்டிருக்கிறார்கள்! சகல சுவர்க்கலோக இன்ப, சுகங்களை அனுபவித்துவருகின்றனர், கஷ்ட நஷ்டமென்ன என்பதையே அறியாதவர்கள். அத்தகைய பணமூட்டைகளுக்கு எதற்காக நஷ்டஈடு கொடுக்கவேண்டும்? பணத்தோடு பணத்தைக்கொண்டு குவிப்பதா? நஷ்டஈடு கொடுத்தால் அதே பணத்தைக்கொண்டு அதே, பணமூட்டைகள் ஏழைகளை நசுக்க முற்படமாட்டார்களா? இதை மந்திரிகள் யோசித்துப் பார்த்தார்களா? மெய்தான்; யோசித்துப்பார்க்கவேண்டிய அவசியம் என்ன வந்தது! யோசித்துப் பார்க்க அவர்கள் தலைவிதியா என்ன? யோசித்துப் பார்க்கவேண்டியது மக்கள் பொறுப்பு; ஏழை விவசாயத் தொழிலாளர் பொறுப்பு; இதைத் தீரயோசித்து [illegible] அவர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டியது அவர்கள் கடமை. இன்றேல், ஏழைமக்கள், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டுத்தேடிய பணம், இந்தப் பணமூட்டைகளின் பணப்பைகளைப்போய் நிரப்பும் என்பதில் சந்தேகமில்லை! அந்தப் பணப்பைகளைக்கொண்டு, அதே பணமூட்டைகள் ஏழை மக்களை அடக்கி ஒடுக்கி, நசுக்கிப் பணமூட்டைகளின் ஆதிக்கத்தை நிலைநாட்டத் துணிவார்களென்பதிலும், துளியும் சந்தேகமில்லை! இந்த ஜமீன்தார்களையும், இனாம்தார்களையும் ஆதரித்து, ஜமீன்தார் ஒழிப்பு மசோதாவுக்கே குழிதோண்ட ஐயர், அய்யங்கார், ஆச்சாரியார்கள், அந்தரங்கத்தில் வேலைசெய்து வருவதை மக்கள் உணரவேண்டும். உணர்ந்து, உடனே தீவிரமாக எதிர்க்க முற்படவேண்டும். இன்றேல், ஏழை மக்களின் கதி, அதோகதிதான்!

ஊழியர் கடமை

உடலையும், உயிரையும் கொடுத்துப் பாடுபடுகிறவர்கள் ஏழை மக்கள்; அதன் பயனை அனுபவிக்கிறவர்கள் பணக்காரரும், பதவி வேட்டைக்காரரும், வெறும் வாய்வீச்சுக்காரர்களுமே! "நீ உடலை கொண்டுவா, நான் உமி கொண்டுவருகிறேன்; இரண்டையும் கலந்து, இருவரும் ஊதி ஊதித் தின்னலாம்" என்பதுபோல இன்று தலைவர்களும், சுயநலவாதிகளும், பதவி வேட்டைக்காரர்களும், ஊழியர்களுக்கு உபதேசஞ் செய்கிறார்கள்! இது அதிகப்பிரசங்கித்தனமென்றே சொல்லவேண்டும். இந்திய சுதந்திரத்துக்காகப் பாடுபட்டது காங்கிரஸ்; அந்தக் காங்கிரசின் செல்வாக்கைப் பெருக்கச் சிறை சென்று, இரத்தஞ் சிந்தி, சர்வ தியாகமும் செய்தவர்கள், பெரும்பாலும் காங்கிரஸ் ஊழியர்கள். ஊழியர்களே காங்கிரசுக்கு அரண்போன்று விளங்கினார்கள், அந்த ஊழியர்களின் உதவியைக்கொண்டே பலர் தலைவர்களானார்கள்; ஏறிய ஏணியை உதைத்துத் தள்ளுவதுபோல், இன்று தலைவர்களே ஊழியர்களை உதைத்துத் தள்ளி என்னஞ்செய்கிறார்கள்? இது தர்மமா? தலைவர்களுக்கு அழகா? இல்லவே இல்லை; நியாயமும் இல்லை. பாடுபட்டவர்கள் ஏழைகள்; எலும்பை முறித்து, மண்டையை உடைத்து, இரத்தம் பெருகச் சிறைக்கோட்டம் சென்றவர்கள் ஏழை ஊழியர்கள்; இன்று பதவிகளில் வீற்றிருப்பவர்கள் தலைவர்கள். கவர்னர் ஜனரல் பதவி முதல், மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்கள் வரையில் பதவிகளில் பலர் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்; இவர்களில் பலர் பணக்காரர்; இன்றைக்கும் வயிற்றுச் சோற்றுக்குக்கூடத் தாளம் போட்டு, உள்ளதையும் இழந்து, நடுத்தெரு நாராயணன்களாகப் பரிதவிக்கிறார்கள் ஏழை ஊழியர்கள்! அந்த உண்மை ஊழியர்களுக்கு, மந்திரிகளையோ, தலைவர்களையோ தட்டிக் கேட்க உரிமை இல்லையா? நியாயத்துக்காகப் போராட அவர்களுக்கு யோக்யதை இல்லையா? தட்டிக் கேட்பது பாவமா? குற்றமா? அப்படிக் கேட்பது உண்மை ஊழியர்களுக்கு அழகல்ல, அவர்கள் உண்மை ஊழியர்களும் அல்லவென்று முத்திரை போட மற்றவர்கள் யார்? ஊழியர்கள் மந்திரி சபை அமைப்பிலோ, அல்லது மந்திரிகள் செய்யும் காரியங்களிலோ தலையிடக்கூடாது; அதில் கவனஞ் செலுத்தவும் கூடாது; அவர்கள் வாய் பொத்தி, கை கட்டி சும்மா இருக்க வேண்டுமாம்! காங்கிரஸ் கமிட்டித் தலைவர் போக்கையோ, அல்லது கமிட்டியின் பெயரையோ, கண்டிக்கக் கூடாதாம். கண்டிப்பது பெரிய குற்றமாம்; அயோக்யத்தனமாம்! ஊழியர்கள் கண்டிக்க முற்படுவது, உண்மை ஊழியர்களுக்கு அழகல்லவென்று பட்டஞ் சூட்டப் புறப்பட்டுவிடுகிறார்கள்! ஊழியர்களுக்குப் பதவி ஆசை கூடாது; பதவியில் இருப்பவர்களை எதிர்த்தும் பார்க்கக்கூடாதென்று உபதேசஞ் செய்யவும் துணிந்துவிடுகிறார்கள்! பணிந்தவர்களும், பருமண்டைகளும் மட்டும் பதவிகளில் இருப்பதா? அவர்களுக்குத்தான் உரிமை உண்டா? பதவிக்காகவே அவர்கள் சிறை சென்றார்களா? பதவிகளை குறிகொண்டே அவர்கள் தியாகஞ் செய்தார்களா? அவர்களுக்குப் பதவிகளிலிருக்க, உரிமை உண்டென்றால், சாதாரண ஊழியர்களுக்கு ஏன் அந்த உரிமை இல்லை? பதவிகளிலிருக்கத்தான் அவர்கள் கொடுத்து வைக்கவில்லை; பதவிகளில் மக்கள் பெயரால் இருப்பவர்கள் தவறு செய்தால், அல்லது, தவறான வழியில் சென்றால், அதைக் கண்டிக்கவுமா அவர்களுக்கு உரிமை இல்லை? தேசத்தையும், தேச மக்களையும் பாதுகாக்க வேண்டியது ஊழியர் கடமை; நிர்மாண வேலைகளில் கவனத்தைச் செலுத்தவேண்டியதும் ஊழியர்கள் கடமைதான்; இதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், மந்திரிகளும், மற்றவர்களும் நிலை தவறி தடுமாறினால், அதைக் கண்டும், ஊழியர்கள் வாய்மூடி, கை கட்டிக்கொண்டு சும்மா இருப்பதா? அவர்களைக் கண்டித்து, அவர்கள் தவறை எடுத்துக்காட்ட வேண்டியது ஊழியர்கள் கடமையல்லவா? அது தவறா? அது அநியாயமா? இல்லை, இல்லை; ஊழியர்களின் கடமைகளில், அது முதல் கடமை; பெரிய கடமை, என்பதை யாரும் மறுக்கமுடியாது.

காமன்சென்ஸ் எங்கே?

இன்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருக்கும் காமராஜ நாடார் யார்? அவரும் ஒரு ஊழியரே. இன்று அவர் தலைவராக இருக்கிறார்; தலைவர் பதவியில் அட்டைபோல் பல வருடங்களாக ஒட்டிக்கொண்டிருக்கிறார்! அவர் போக்கும், செய்யும் காரியங்களும் மக்களுக்குப் பிடிக்கவில்லை; அவர் பதவியிலிருந்து விலகவேண்டுமென்று ஊழியர்கள் கேட்கின்றனர்; வற்புறுத்துகின்றனர் என்றாலும், காமராஜ் நாடார் அசைகிறாரா? இல்லை; ஏதோ நொண்டிக் காரணங்களும், சாக்குப் போக்குகளும் சொல்லி, மழுப்பிக்கொண்டே, பாம்புபோல் நழுவி வருகிறார்! பதவியிலிருந்து விலகுவது அவருக்குக் கசப்பாக இருக்கிறது! தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியைக் கூட்ட மறந்துக் காலம் கடத்திக்கொண்டே போகிறார். இதைக் கண்டிப்பது குற்றமா? கண்டித்தால் உண்மை ஊழியர்களுக்கு அது அழகல்லவென்று அசட்டுப் பட்டம் கட்டிவிடுவதா? அவ்வாறு அசட்டுப் பட்டம் கட்டுவது வடிகட்டிய அயோக்யத்தனமல்லவா? மந்திரி சபை அமைப்பதிலும், அரசியலை உருவாக்காமல் சீர்குலைப்பதிலும், பதவியை உடும்புபோல் பற்றிக்கொண்டிருப்பதிலும், மாஜி ஊழியர் காமராஜ் நாடாருக்கு உரிமை இருக்கவேண்டுமென்றால், அதே உரிமை, அவரைப்போன்ற மற்ற ஊழியர்களுக்கும் இருக்கவேண்டுமல்லவா? அந்த உண்மைக்காகப் போராடினால் அது குற்றமாம்! உண்மை ஊழியர்களுக்கு அது அழகல்லவென்று கூறுவது அறிவுடைமையல்ல; அது அசட்டுத்தனம்; சுத்த முட்டாள்த்தனமென்று சாதாரண ஊழியர்கள்கூடச் சொல்லுவார்கள். காமராஜ் நாடார் மட்டுமென்ன? இன்று மந்திரிகளாக இருப்பவர்களும், தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் எல்லோரும் ஊழியர்களே; எல்லோரும் சிறைகளில் ஒன்றாக இருந்தவர்களே! இவர்கள் எல்லோரையும் சிறைகளில் தள்ளிய வெள்ளையர், வெறும் ஊழியர்கள் யார், உண்மை ஊழியர்கள் யாரென்று பிரித்து வைக்கவில்லை;

(10ம் பக்கம் பார்க்க)

தமிழ் மணி

சென்னை, சர்வஜித்து கார்த்திகை மீ 1௳ (16-11-47)

சிதம்பர நாதன்

தில்லையிலே நடனமாடிய நடராஜன் அல்ல; தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பிய முடிசூடா மன்னர் தென்னாட்டுத் திலகர், கப்பலோட்டிய வீரத் தமிழன், தூத்துக்குடி, வ. உ. சிதம்பரநாதன். தமிழ் நாட்டில் எத்தனையோ மன்னர்களும், புலவர் பெருமான்களும் தோன்றினர்; மறைந்தனர்; அது அந்தக் காலம்; நமது காலத்தில் தோன்றிய தமிழ் மன்னன் சிதம்பரநாதன் பாட்டுக்கொரு புலவன் பாரதி, தியாகத்துக்கும், வீரத்துக்கும், உறுதிக்கும், தளராத ஊக்கத்துக்கும், எழுச்சிக்கும், திறமைக்கும், தமிழர் பெருமைக்கும் ஒருவர் சிதம்பரநாதன் என்பதை யாரும் மறுக்க முடியாது. சுதந்திரம், சுயராஜ்யம் என்ற சொல்லையே, உச்சரிக்கப் பயந்திருந்த காலத்தில் வடக்கே திலகர் பெருமான் தோன்றினர்; தெற்கே சிதம்பரநாதன் தென்னாட்டுத் திலகமாக விளங்கினர்; வெள்ளையரை எதிர்த்து, வெள்ளையர் பார்லிமெண்டையும் நடுநடுங்க வைத்தவர் சிதம்பரநாதன்! சிதம்பரமென்ற பெயரே வெள்ளையருக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது! வெள்ளையர் சுரண்டலை எதிர்க்கத் தூத்துக்குடியிலே சுதேசிக் கப்பலை ஓட்டத் துணிந்த ஒருவர் சிதம்பரநாதனே! சிதம்பரமென்றாலே, தமிழர் உள்ளத்தில் ஒரு உத்வேகம், ஒரு உறுதி, ஒரு மகிழ்ச்சி, பெரும் எழுச்சி, தானாகவே சாக்கும்! தமிழர் உள்ளத்தைச் சிதம்பரநாதன் அவ்வளவுக்குக் கொள்ளை கொண்டிருந்தார். தாய் நாட்டின் சுதந்தரத்துக்காக சிறை சென்று, செக்கிழுத்துப் பெருந் தவங் கிடந்தார்! உள்ளது, உரியது எல்லாம் தேசத்துக்கே அர்ப்பணஞ் செய்தார்; தாய் மொழி தமிழுக்கும் அரிய தொண்டு செய்தார். கடைசி காலத்தில் வறுமைக்குள்ளானர்; ஆனால், உறுதி குன்றியதா? தியாகம் குறைந்ததா? உள்ளம் ஒடிந்ததா? இல்லை, இல்லை; கடைசி மூச்சு உள்ளவரையில் சுதந்திரம், சுதந்திரமென்றே உள்ளம் துடித்தது; சுதந்திரம் என்ற கடைசி மூச்சுடன் அவர் உயிரும் பிரிந்தது; வீரசுவர்க்கம் எய்தினர். ஆனால் தமிழர் இந்த வீரத் தமிழனை, தியாக மூர்த்தியை, ஈடு இணையற்ற தேசபக்தனைக் கடைசி காலத்தில் ஆதரித்தனரா? இல்லை, இல்லை; கைவிட்டனர்; மறந்தனர். தமிழ் நாட்டுக்கே இது ஒரு சாபக்கேடு. உயிருள்ளபோது ஆதரிக்க முன் வராமல் மறந்து விடுவதும், உயிர் பிரிந்தபின் சிலை செய்வதும், ஞாபகச் சின்னம் எழுப்புவதும் கோவில் கட்டுவதும், கும்பிடுவதும், புகழ் பாடுவதும் வழக்கமாகிவிட்டது.

செய்ய வேண்டியதென்ன?

தமிழ் புலவன் பாரதியை மறந்தனர்; கடைசியில் அவர் பாடல்களை அச்சிட்டுப் பரப்பினர்: எட்டயாபுரத்திலே பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவிட்டு ஒரு கோவில் கட்டினர். இந்த முயற்சியில் பலர் ஈடுபட்டனர்; தமிழரும் மனமுவந்து உதவிச்செய்ய முன்வந்தனர். பாரதிக்கு அவ்வித ஞாபகச் சின்னம் மகா அவசியந்தான்; ஆனால் சிதம்பரநாதனுக்குத் தமிழர்கள் என்ன செய்தார்கள்? இதுவரையில் எதுவும் செய்யவில்லை; ஆங்காங்கு கூட்டம் போட்டுப் பேசுகிறார்கள்; அவர் பெருமையைப் பாடுகிறார்கள்; அவ்வளவுதான்; பாரதியே புகழ்ந்து பாடிய சிதம்பரநாதன் புகழைப் பாடுவதும், பேசுவதும் பிரமாதமா? இல்லவே இல்லை; சிதம்பரநாதனுக்கு தங்கத்தால் கோவில் கட்டி, அங்கே வைரத்தால் அவர் உருவம் செய்து வைத்துக் கும்பிட்டாலும் தகும்! ஏன்? சிறை என்றாலே உள்ளம் நடு நடுங்கிய அக்காலத்திலேயே சிதம்பரநாதன் தைரியமாகச் சிறை சென்றார்; இரும்பு விலங்குகளை ஏற்றுக் கொண்டார், செக்கிழுத்தார்; கூழ் உண்டார்; ஆனால், என்ன சுகம் கண்டார்? எதுவுமில்லை; அன்னியனின் அடிமை விலங்கைத் தகர்த்தெறிந்தார்! அதன் பின் சிறை சென்று, "ஏ" வகுப்பு, "பி" வகுப்பில் சுகமாக இருந்து வந்த தலைவர்கள், இன்று மந்திரிகளாகவும், கவர்னர்களாகவும், கவர்னர் ஜெனரல்களாகவும் பதவிபெற்று சுகம் பெறும் இந்நாளில், உண்மைத் தியாகிகளுக்கும், வீரர்களுக்கும் இடமேது? ஆகவே, தமிழர் என்ன செய்யவேண்டும்? தமிழ் நாட்டின் தவப்புதல்வனாகிய, வீர சிங்கமாகிய சிதம்பரநாதனுக்கும் தகுந்த ஒரு ஞாபகச் சின்னம் எழுப்பவேண்டும் தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையிலேயுள்ள கோகலே மண்டபம் போல் ஒரு சிறந்த மண்டபம் எழுப்பினால் மிகமிக நல்லது. சிதம்பரநாதனிடம் தமிழ் மக்கள் கொண்டிருக்கும் அன்புக்கும், பெருமைக்கும் அது ஒரு அருமையான, அழியாத சின்னமாக விளங்கும். இதுடன், சுதந்திரத்துக்கு விதை போட்ட தூத்துக்குடியில், சிதம்பரநாதன் கப்பலோட்டியதின் அடையாளமாக, ஒரு கலாசாலை ஏற்படுத்தலாம்; அதிலே கடற்படைக்கும் ராணுவத்துக்கும் அவசியமான கல்வியைத் தமிழ் இளைஞர்களுக்குப் புகட்டலாம். இந்த இரு பெரும் கைங்கர்யங்களைச் செய்து முடிக்கத் தமிழர் முன் வந்தால், அதுவே சிதம்பரநாதனிடம் தமிழ் மக்கள் கொண்டுள்ள ஆர்வத்துக்கும், அன்புக்கும் சரியான கைம்மாறாகும். இதற்கு ஏராளமான பொருள் வேண்டுமென்பது உண்மையே. தமிழ் மக்கள், ஏன், இந்திய மக்கள் மனம் வைத்தால், இது பிரமாதமல்ல; ஒரு லக்ஷமல்ல, எத்தனை லக்ஷமும் எளிதில் திரட்டிவிட முடியும்; கோடிக்கணக்கில் திரட்டவும் கூடும். அதற்கு மக்கள் மனம் வேண்டும்; தாராள உள்ளம் வேண்டும்; தளராத முயற்சி வேண்டும்: இம் முயற்சியில் ஈடுபடத் தகுந்த தலைவர்கள் வேண்டும். வெறும் பேச்சோடு அல்ல; தளராத உறுதியுடன் செயலில் இறங்கவேண்டும்; இறங்கினால் வெற்றி பெறுவது திண்ணம். சிதம்பரநாதனின் வாழ்க்கையே இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். தமிழ் நாட்டின் ஒப்பற்ற தலைவனுக்குத், தவப் புதல்வனுக்குத் தமிழர் இதையேனும் செய்துவைக்க ஏன் முன்வரக் கூடாது?

துடுக்கு அடங்குமா?

லீகர் துள்ளித் திரிந்த காலத்திலேயே அவர்கள் துடுக்கை அடக்கி இருக்கவேண்டும்; அவ்வாறு அடக்காததினால்தான், இன்று பாகிஸ்தான் உருவானது; பின்னும் அவர்கள் துடுக்கு அடங்கியதாகத் தெரியவில்லை; இன்றைக்கும் அவர்கள் இரு இன விஷ வித்தையே விதைத்துக்கொண்டிருக்கிறார்கள்.! அந்த விஷமே இன்று நாடெங்கும் தலைவிரித்தாடும், கோர கொலைகளுக்கும், கொடும் கொள்ளைகளுக்கும் மூலகாரணம். பாகிஸ்தானில் அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசிக்கொள்ளட்டும்; அதைப்பற்றி யாரும் கவலைப்படப் போவதில்லை. ஆனால், இந்தியாவிலிருக்கும் முஸ்லிம்களும், லீகர்களும் அந்த இரு இனக் கொள்கையை அடியோடு விட்டொழித்தே தீரவேண்டும். அவ்வித விஷப் பிரசாரத்துக்கு இந்தியாவில் இடம் கொடுக்கவே கூடாது. அவ்வித பிரசாரம் செய்தே தீருவோமென்று லீகர் சொல்லுவார்களேயானால், அவர்களுக்கு இந்தியாவில் இடமில்லை; அவர்கள் பேசாமல் பாகிஸ்தானுக்கு மூட்டை கட்ட வேண்டியதுதான்! இந்தியாவிலிருந்து கொண்டு அவர்கள் ஐந்தாம் படை வேலை செய்ய இந்தியா ஒரு போதும் சம்மதிக்காது என்பதை லீகர் கண்டிப்பாக அறிந்து கொள்ளவேண்டும். பாகிஸ்தான் ஏற்பட்டபின் லீக்குக்கு இந்தியாவில் இடமில்லை; ஆகவே, முஸ்லிம் லீகையும் ஒழித்துக்கட்ட வேண்டியதுதான். இதைப் புதுடில்லியில் கூடிய தேசிய முஸ்லிம் தலைவர்கள் கூட்டத்தில் மௌலானா அபுல்கலாம் ஆஸாத், சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாக்கிவிட்டார். அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த, பல லீக் தலைவர்கள் கூட மௌலானா ஆஸாத் சொன்னதை, ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம் லீக்குக்கு அவசியமே இல்லை. லீக்கரும் இதர முஸ்லிம்களும் காங்கிரசில் சேர்ந்து இந்தியாவிலுள்ள இதர சமூகங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று மௌலானா ஆஸாத் கேட்டுக்கொண்டார். இதை எந்த முஸ்லிமும் மறுக்க முடியாது. மௌலானா ஆஸாத் சொன்னது உண்மை; முஸ்லிம்களுக்கு அது தான் நேர்மையான வழி என்பதை எல்லா முஸ்லிம்களும் சந்தேகத்துக்கு இடமின்றி ஒப்புக்கொள்ளுவார்களென்பது நிச்சயம். ஆனால், வெளிக்கு வேதாந்தம் பேசி, இந்திய சர்க்காரிடம் ரொம்ப விசுவாசமாக நடப்பது போல் பாசாங்கு செய்யும் வங்க மாஜி முதன் மந்திரி சுஹ்ரவர்த்திக்கு இது புத்தியில் படவில்லை! "லீக் இன்னமும் இருக்க வேண்டியதுதான்; லீக் இருப்பதா, தொலைவதா? என்பது முக்கியமல்ல; இரு இனக் கொள்கையும் இருக்கவேண்டியதுதான்" என்று சுஹ்ரவர்த்தி கல்கத்தாவில் கூட்டிய லீகர் கூட்டத்தில் பேசியிருக்கிறார். இதிலிருந்தே லீகர்களின் சுய சொரூபத்தைத் தெரிந்து கொண்டிருக்கலாம். இந்தியாவிடம் அவர்கள் எவ்வளவு விசுவாசத்துடன் இருக்கிறார்களென்பதற்கும் இது ஒரு எடுத்துக்காட்டாகும் இவ்வித கொள்கைக்கோ, பேச்சுக்கோ, உணர்ச்சிக்கோ இந்திய சர்க்கார் கொஞ்சங்கூட இடம் கொடுக்கக் கூடாது. இவ்வித உணர்ச்சி முஸ்லிம்களிடையே இனிமேலும் வேரூன்றவிடாமல், அதை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். அவசியமானால், இத்தகைய உணர்ச்சியுடைய தலைவர்களையும், முஸ்லிம்களையும் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு, நாடு கடத்திவிடுவது நல்லது; இன்றேல், கட்டுச் சோற்றுப் பெருச்சாளிகள் போல், இந்த லீகர் இந்தியாவிலிருந்து இந்தியாவுக்கே வினை தேடுவார்கள்! பாகிஸ்தானிடம் அன்புகொண்டு, அவர்கள் ஐந்தாம்படையினராக, வேலை செய்வார்களென்பதும் நிச்சயம். பாகிஸ்தான் வாலாக்கள் இன்று செய்துவரும் அக்கிரமங்களும், இடையூறுகளும் எண்ணிறந்தன. இன்னும் எத்தனை இடையூறுகளைக் கிளறிவிட அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்களோ தெரியாது. இந்த இடையூறுகள் ஒன்றன் பின் ஒன்றாக வரலாம். ஒருவேளை இந்த இடையூறுகளே, ஒரு யுத்தத்தில் கொண்டு வந்துவிடலாம். அப்படி ஒரு யுத்தம் ஏற்படுமேயானால், இந்தியாவிலுள்ள இரு இனக் கொள்கையுள்ள, லீகர்களே இந்தியாவுக்குப் பரமவிரோதிகளாக இருந்து ஐந்தாம் படை வேலை செய்யலாம். அவ்வித நெருக்கடி ஏற்படுவதற்குள், இவர்களைக் கூண்டோடு பாகிஸ்தானுக்கு அனுப்பிவிடுவதே உசிதம். இந்தியாவில் அவர்கள் இருக்கவிரும்பினால், லீகை ஒழித்துவிடவேண்டும்; லீகின் அடிப்

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

படைக் கொள்கைகளை இரு இனக் கொள்கையையும் ஆழமாகக் குழி தோண்டிப் புதைத்துவிடவேண்டும் இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் இதற்குச் சம்மதிக்கிறார்களா? இதை இந்திய சர்க்கார், முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். இன்றேல், அவர்களை மூட்டைகட்ட உடனே, உத்திரவுபோட்டு லீகர் கூடுக்கை அடக்கவேண்டும், காலங் கடத்துவது கூடாது. அது இந்தியாவுக்கே பெரும் ஆபத்தாக வந்து முடியலாம்.

இருதலைப் பிராணி!

இந்தியாவிலே இருதலைப் பிராணி என்ற, ஒரு விசித்திரமான பிராணி இருக்கிறதென்றால் அது பாகிஸ்தான் தான்! பாகிஸ்தான் ஒரு பக்கம் சமரசம் பேசுகிறது; இந்திய யூனியனுடன் ஒத்துழைக்க தயார், என்று சொல்லுகிறது; மற்றொரு பக்கம் போருக்குத் தயாராகிக்கொண்டு வருகிறது. முதலில் ஜுனாகத், ஹைதராபாத் போன்ற சமஸ்தானங்களைப் போருக்குத் தூண்டி விட்டது; அப்புறம், காஷ்மீர் மீது குண்டர்களைத் தூண்டிவிட்டு, அந்தக் குண்டர்களுக்கு உணவு, உடை, யுத்த தளவாடங்களெல்லாம் சப்ளை செய்தது இந்த இருதலைக் கொள்கையை இந்திய சர்க்கார் கண்டித்ததும், அப்படிச் செய்யவே இல்லையென்று, பச்சைப் பொய் சொல்லிச் சாதிக்கிறது. பாகிஸ்தானின் இந்தப் புளுகு எவ்வளவு காலத்துக்கு நீடித்திருக்கப் போகிறது? கெட்டிக்காரன் புளுகு அம்பலப்படுவது நிச்சயம். இந்திய சர்க்காருடன் சமரசம் பேசும் பாகிஸ்தான், எதற்காக வெளிநாடுகளில் யுத்த தளவாடங்களை ரகசியமாகச் சேகரிக்கவேண்டும்? ஈரான், ஈராக் எகிப்து போன்ற அரபு நாடுகளுக்கு விசேஷ பாகிஸ்தான் தூதுவராக, பெரோஸ்கான்நூன் எதற்காகப் போயிருக்கிறார்? அங்கே ஏராளமான யுத்த தளவாடங்களையும், வெடிமருந்துகளையும் அவர் வாங்கி வர ஏற்பாடுகள் செய்து வருவதாகத் தெரிகிறது. சுமார் எட்டரைகோடி ரவுண்ட் வெடிமருந்தை சேகரித்து வைக்கப் பாகிஸ்தான் திட்டம் போட்டிருக்கிறதாம். இதேபோல் ஹைதராபாத்தும், நிஜாம ராணுவத்தைச் சேர்ந்த ஜெனரல் இட்ரூஸை, இங்கிலாந்துக்கு அனுப்பி, கள்ள மார்க்கட்டில் யுத்த தளவாடங்களை ஏராளமாக வாங்க ஏற்பாடு செய்திருப்பதாக வதந்தி; அமெரிக்காவிலேயுள்ள பிரபல ஹைதராபாத் வாத்தகாலாலியாக் அலியும், இட்ரூஸுக்கு உதவிச் செய்ய லண்டன் சென்றிருக்கிறாராம். பிரிட்டனிலுள்ள பிரபல அதிகாரிகளுடனும் இதர ஐரோப்பிய நாடுகளுடனும், இவர்கள் ரகசிய ஏற்பாடுகள் செய்து வருகிறார்களாம். ஹைதராபாத்தில் சுமார் 25,000 பேர் அடங்கிய ராணுவமிருக்கிறது. இவர்களில 17000 பேர், முன்னணி துருப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு யுத்தப் பயிற்சி அளிக்க, வெளி நாடுகளிலிருந்து ராணுவ நிபுணர்களைக் கொண்டு வரவும், திட்டம் போட்டிருக்கிறார்களாம்! இந்த இருதலைக் கொள்கையால் என்ன பயன்? இந்த இருதலைப் பிராணியின் கொள்கை அதற்கே நாசகாலமாக வந்து முடியுமென்பதில் சந்தேகமில்லை. ஜுனாகத்துக்கு ஏற்பட்ட கதியே; ஹைதராபாத்துக்கும் கிடைக்கப் போவது நிச்சயம். ஜுனாகத் நவாப் பாகிஸ்தானில் தஞ்சமடைந்ததைப்போல், நிஜாமும் பாகிஸ்தானில் தஞ்சம் புகும் காலம் நெடுந்தூரத்திலில்லையென்பதை அவர் உணர்ந்துகொள்ளுவாராக.

டாக்டர். யூ. கிருஷ்ணராவ்,
சென்னை.

சென்னை மேயரே,

சென்னை நகருக்குப் புது மேயராக வந்திருக்கும் தங்களை வாழ்த்தி வரவேற்கிறேன். தங்களுடைய பதவிக் காலத்தில், தாங்கள் செய்ய வேண்டிய பெரும் பணிகள், பல இருக்கின்றன. பொதுவாக நகரை அழகுபடுத்தும் பணியில் மேயர்கள் ஈடுபடுவதுண்டு. இது வழக்கம்; ஆனால் நான் தங்களைக் கேட்டுக்கொள்ளுவது தென்னவென்றால் நகரை அழகுபடுத்தும் வேலையோடு மட்டும் நின்று விடாமல், நகர மக்களின் வாழ்க்கை மேலும் பல வசதிகளைப் பெற்று, வளமுறும்படி செய்யுங்கள். குடியிருக்க வசதியின்றி மக்கள் சாக்கடைப் புழுக்களாய் வாழுகின்றனர். தாங்கள் ஒரு முறை நகரின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்ப்பீர்களானால் இந்த நிலைமையை உணர்வீர்கள். இந்நிலைமாற, நல்லதோர் மார்க்கம் தேடுங்கள். உல்லாசப் புருஷர்களின் வாழ்வுக்கு வேண்டிய வசதிகளை மேலும் மேலும், செய்து தருவதை சற்று நிறுத்திவைத்து, உழைப்பாளிகளின் வாழுமிடங்கள் சீர்திருந்தும்படி செய்யுங்கள்.

டிங்—டாங்!

* * *

ஸ்ரீ. ஜவஹர்லால் நேரு,
புதுடில்லி.

தலைவரே,

தங்களுடைய 59-வது பிறந்த தினத்தையொட்டி தமிழரின் சார்பாக எனது மனமார்ந்த வாழ்த்தினைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தியா தற்போது சூறைக்காற்றில் சிக்கி நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மரக்கலத்துக்கு ஒப்பாக இருக்கிறது அத்தகைய மரக்கலத்தை மாலுமி போன்றிருந்து திறமையுடனும், பொறுமையுடனும் நிருவாகத்தை நடத்திவரும் தங்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். அத்துடன கூடிய விரைவில் புயல் அடங்கி அமைதி நிலவும் என்று நம்புகிறேன். அங்ஙனம் அமைதி நிலவுங்காலத்தில் தங்களுடைய சமதர்ம திட்டங்கள் இந்நாட்டிற்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன். தாங்கள் மேலும் பல்லாண்டு நல்வாழ்வு வாழ்ந்து நல்லாட்சி நடத்த இறைவன் அருள்புரிவானாக.

டிங்—டாங்!

தோழர். மாலடோவ்,
மாஸ்கோ.

ருஷிய அயல்நாட்டு அமைச்சரே,

ருஷிய புரட்சியின் 30-வது ஆண்டு விழாவிலே பேசிய தாங்கள் பொதுவாக உலக முதலாளித்துவத்துக்கும் சிறப்பாக அமெரிக்க முதலாளித்துவத்துக்கும் சரியானதோர் எச்சரிக்கை விடுத்திருக்கிறீர்கள். தன்னிடம்தான் அணுக்குண்டு அதிசயமாக அகப்பட்டுக்கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டிருந்த அமெரிக்காவுக்கு, "அணுக்குண்டின் ரகசியம் அமெரிக்காவின் ஏகபோக உரிமையல்ல" என்றும் "ஏகாதிபத்தியங்கள் ஆட்டங்கொடுத்துவிட்டன; இனி கம்யூனிசத்துக்கே எல்லாப் பாதையும்" என்றும் தாங்கள் பேசியிருக்கும் பேச்சுகள் அத்தனையும் அணுக்குண்டுகளாகவே இருக்கின்றன. இவ்வனற் முடுக்குடன் திரியும் முதலாளித்துவத்துக்கு சரியானதோர் சூடுதந்த தங்களுக்கு எனது நன்றி.

டிங்—டாங்

* * *

ஸ்ரீ. சுஹர்வர்த்தி
கல்கத்தா.

மாஜி பிரதமரே,

தங்களைப் போன்ற சமய சஞ்சீவிகளை இந்தத் தாரணியில் கண்டதில்லை. முன்னர் தாங்கள் வங்கத்தைப் படுகளமாக்கப் போட்ட திட்டம்தான் இன்று இந்தியாவெங்கும் படுகளங்களை உண்டுபண்ணியிருக்கிறது. அப்படிச் செய்த தாங்கள் கொஞ்ச நாட்களாக, அதுவும் பாக்கிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு காங்கிரசுடனும், இந்துக்களுடனும் ஒத்துழைப்பது போல நடித்து வருகிறீர். தாங்கள் நடத்தி வரும் நாடகங்களில் ஒன்றாகிய கல்கத்தா மகாநாட்டைப் பற்றிய செய்தியையும் பத்திரிகைகளில் பார்த்தேன். அந்த மகாநாட்டுத் தீர்மானங்களுக்கிடையேயும் வேற்றுமை விஷ வித்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. சாதாரணமாக வெளி வேஷம் போடுவதால் மட்டும் இந்திய யூனியனின் நம்பிக்கையைத் தாங்கள் பெற்றுவிட முடியாது. வேற்றுமை மனப்பான்மையையும், சூழ்ச்சித் திட்டங்களையும்விட்டொழியுங்கள். அப்பொழுதுதான் இரு சாருக்கும் நன்மை உண்டு.

டிங்—டாங்!



எலிசபத் இளவரசியை மணக்கும் மணமகன்
பிலிப் மவுண்ட்பேட்டன்.

டம்-டம் குண்டு [7-ம் பக்கத் தொடர்ச்சி]

நாய் குலைத்தா நத்தம் பாழ்? அரச மரத்தைப் பிடித்த பேய்! குண்டு சட்டிக் குதிரையோட்டம்!

நாடில்லாத ராஜாக்கள்-நாதியற்ற நவாப்புகள்

பிரிவினை கூடவுமில்லை. அந்த "காமன்செல்ல" கூட, இன்று ஊழியர்களுக்கு உபதேசஞ்செய்யப் புறப்பட்டிருக்கும், பிரகஸ்பதிகளுக்கு இல்லை போனால், அதற்காக யாரை நொந்து கொள்ளுவது? தேசத்துக்காகவும், சுதந்திரத்துக்காகவும், சகல கஷ்டங்களையும், நஷ்டங்களையும் ஏற்றுக்கொண்டு, சகல தியாகங்களையும் செய்த ஊழியர்களைத்தான் நொந்து கொள்ளவேண்டும். அவர்கள் தலைவிதி அவ்வளவுதான் என்று முடிவு கட்டவேண்டியதுதான்!

ஆனால், சொல்லுகிறவர் சொன்னால், கேட்கிறவர்களுக்கு மதி இல்லையா? ஆமாம்; ஊழியர்களுக்கும், மக்களுக்கும் மதியுண்டு; அவர்கள் செய்வது சரியா, தப்பா என்பதை நிர்ணயிக்க, அவர்களுக்குப் புத்தியுண்டு. அவர்களுக்கு யாரும் புத்தி சொல்ல வேண்டியதில்லை. வெறுடைய புத்திமதியையும் அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. இன்று காமராஜ் நாடாரை ஊழியர்கள் எதிர்க்கிறார்களென்றால், அதற்குக் காரணம் என்ன? அவர் போக்குதான் காரணம். அவர் ஊழியர்களைக் காட்டிக் கொடுத்து, தன்னுடைய பதவியை நிலைநாட்டிக்கொள்ள முயற்சிக்கிறார். பணமூட்டைகளின் தயவை நாடி, அவர்களிடம் கட்டுண்டு கிடக்கிறார்! சில "லோபர்"களின் யோசனையைக் கேட்டு, அவர்களிடம் பம்பரம் போல் ஆடிக்கொண்டிருக்கிறார்! அவருக்கு இசைந்த மாதிரி சபையை அமைக்கிறார்; அவருக்கு பிடிக்காவிட்டால், அதை இடித்துத் தகர்த்து விடச் சதிசெய்கிறார்! இன்று டில்லி கூட்டத்துக்குப் போயிருக்கிறார்; அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்திலும் கலந்துகொண்டார். அங்கு நடைபெறும் விவாதங்கள் அவருக்கு எப்படி புரியும்? அவருக்கு விஷயங்களை எடுத்துச்சொல்ல ஒரு மொழி பெயர்ப்பாளர் வேண்டும். இந்தத் தொல்லைகளெல்லாம் எதற்கு? அவர் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொண்டால், விஷய ஞானமறிந்த ஒரு தலைவரைக் கொண்டு வரலாமல்லவா? காமராஜ் நாடாரும் ஒரு ஊழியரே; அவர் மட்டும் ஒரு ஊழியராக இருப்பதுடன் ஏன் திருப்தி அடையக்கூடாது? தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருக்கிறார்; அத்துடன் நின்றிருக்கக்கூடாதா? சென்னை சட்டசபை அங்கத்தினராகிறார்; அரசியல் நிர்ணய சபையிலும் இருக்கிறார். இவருக்கு ஏன் இத்தனை பதவிகள்? இவருக்கு ஏன் இவ்வளவு பதவி மோகம்? ஊழியர்கள், என்னை ஊழியர்களாகவே இருக்க வேண்டுமென்று, உபதேசம் செய்யப் புறப்பட்ட மேதாவிகள், காமராஜ் நாடாருக்கு ஏன் அந்த உபதேசஞ்செய்யக்கூடாது? அவருக்கு உபதேசம் தேவையில்லையா, என்ன எண்ணமா? ஊழியர்களுக்கு உபதேசஞ்செய்ய முன்வந்த அவர்கள், காமராஜ் நாடாருக்கும் அதே உபதேசஞ் செய்திருந்தால், எவ்வளவோ நலமாக இருக்கும்! ஆனால், அந்த உபதேசஞ்செய்ய அவர்களுக்குத் தைரியமில்லை; அப்பாவி ஊழியர்கள்தான் அவர்களுக்கு அகப்பட்டார்கள்! ஆனால், ஊழியர்கள் இந்த உபதேசங்களுக்கெல்லாம் மசிகிறவர்களல்ல; அவர்கள் கடமை என்னவென்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் ஒன்றுபட்டு, அவர்கள் கடமையை நிறைவேற்றியே தீருவார்கள். அவர்களை எதிர்த்து நிற்க, அவர்களை சிதைத்து சின்னாபின்னமாக்க எந்த சக்தியாலும் முடியாது; எவ்வித சூழ்ச்சிகளாலும், நயவஞ்சகத்தாலும் அவர்களை சிதறடிக்க முடியாது என்பது நிச்சயம். ஊழியர்கள் உதவியைக் கொண்டு, இன்று பதவி சிகரங்களில் ஏறிக் கோபுரப் பொம்மைகளைப்போல் காட்சியளிக்கும், தலைவர்களும் மந்திரிகளும் இதை நன்கு உணர்ந்திருப்பார்களாக! ஊழியர்களின் தியாகமும், சேவையும் அன்று அவசியமளித்தது! அவர்கள் தொண்டு, இனிமையாக இருந்தது; இன்று அவர்கள் எதிர்ப்பும், கண்டனமும், கசப்பாக இருக்கிறது போலும்! மந்திரிகளும், தலைவர்களும், அவர்களைத் தாங்கி நிற்கும் மற்றவர்களும், விளக்கெண்ணெய் சாப்பிட்ட மாதிரி, முகத்தைச் சுளித்துக்கொண்டிருக்கிறார்கள்! இருக்கட்டும், இதனால் யாருக்கு என்ன நஷ்டம்? நாய் குலைத்து நத்தம் பாழாகி விடாது! ஊழியர்கள் உறுதியை யாராலும் குலைத்துவிட முடியாது. அவர்கள் கடமையை செய்தே தீருவார்கள்; அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை.

போலிக் கூட்டங்கள் ஏன்?

ஊழியர்களும், தோழர்களும் ஏமாந்தவர்களல்ல; அவர்களை எதைப் பற்றி வேண்டுமானாலும் திருப்பவும், இழுத்த இழுப்புக்கெல்லாம், அவர்கள் இடம் கொடுப்பார்களென்று சில ஏமாந்த சோணகிரிகள் எண்ணியிருக்கிறார்கள்! ஆகவே, அவர்களை கசப்படுத்த, அவர்களை ஏமாற்றி இழுக்கப், பல கட்சியாளர்கள் சூழ்ச்சி செய்துவருகிறார்கள். இதனால், தமிழ் நாட்டிலே பல கட்சிகள் மலிந்துவிட்டன; பல போட்டிகளும், பெருகி வருகிறார்கள். இன்று தமிழ் நாடு கெட்ட ஒரே குழப்பம். ஊழியர்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும் பெரிய திண்டாட்டத்திலிருந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை சரியான கொள்கையில், நேர்மையான பாதையில் நடத்திச்செல்லத் தகுதியான தலைவர்கள் இல்லை. தமிழ் நாட்டில் இது ஒரு பெரும் குறை. சுயநலமாதிகளும், தான்தோன்றித் தலைவர்களும், தகுதியின்றி முளைக்கிறார்கள். ஆளுக்கொரு திட்டம், ஆளுக்கொரு கூட்டம்; கூட்டங்களுக்கும், பேச்சுக்கும் குறைவில்லை. இந்த மந்திரி சபை கூடாது என்பது, ஒரு கட்சி; இவர் மந்திரி சபையே வேண்டுமென்பது மற்றொரு கட்சி; "தமிழ்நாடு தமிழருக்கே" என்று சொல்லுகிறார்கள் பெரும்பாலோர். இதை ஆதரிக்காத தமிழன் இருக்கமுடியாது. காங்கிரஸ்காரரா தமிழ் நாடு தமிழருக்கே என்று ஆதியிலிருந்தே சொல்லி வருகிறார்கள். காங்கிரஸ் தலைவர்களும் அதை ஆதரிக்கிறார்கள். இந்த நிலைமையில், குட்டிக் கட்சிகள் எதற்கு? நல்ல பாம்பு படமெடுத்து ஆடுகிறதே என்று, நாக்குப்பூச்சியும் படமெடுத்து ஆடியதாம்! இதேபோல் சில குட்டித் தலைவர்களும், தனித்தனி கட்சி சேகரித்துக்கொண்டு, தமிழ் நாட்டில் பெரிய கூச்சலைக் கிளப்பி வருகிறார்கள்! இந்தக் கூச்சல் எதற்கு? தமிழ் நாடு பிரிந்துபோவது நிச்சயம். சென்னை தமிழ் நாட்டிற்கே சொந்தம்; அதில் சந்தேகமே வேண்டியதில்லை, ஆந்திரர், தலைகீழாக நின்று தவஞ் செய்தாலும், சென்னை நகரைத் தட்டிக்கொண்டுபோக முடியாது. இது நிச்சயம். காங்கிரஸ் தலைவர்கள் உறுதி கூறுகிறார்கள்; அதற்கான வேலை செய்தும் வருகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில், சில சுண்டைக்காய் வீரர்கள் தமிழரசுக்கட்சி, தமிழ் அன்பர் கட்சி, என்று பல கூட்டங்களைப் போட்டு, ஏன் தங்களை விளம்பரப் படுத்திக்கொள்ளவேண்டும்? "திராவிட நாடு திராவிடருக்கே" என்று சொல்லி, அதற்காக ஏன் ஒரு கும்பலைத் திரட்ட வேண்டும்? திரு. வி. க. சொல்லுவது போல், 'தமிழ்நாடு தமிழருக்கு' என்று ஏற்பட்டுவிட்டால், தமிழ் நாட்டின் திறமையைக்கண்டு அதைச் சுற்றியுள்ள தெலுங்கு, மலையாளி, கன்னட நாடுகள், தானாகவே தமிழ் நாட்டுடன் சேர்ந்துகொள்ளலாம். அப்புறம் தமிழ் நாடு, இதர நாடுகளுடன் சேர்ந்து, ஒரு 'பெடரேஷன்' அமைத்துக்கொள்ளலாம். ஆனால், முதலில் தமிழருக்கு வேண்டியது தமிழ்நாடு; அதை எந்தத் தமிழனும் மறுக்கமுடியாது. ஆகவே, தமிழர் எல்லோரும் ஒன்றுபட்டு தமிழ் நாட்டைப் பலப்படுத்தவேண்டும்; அப்புறம் ஒரு பெடரேஷனைப்பற்றி சிந்திக்கலாம். அதற்குக் காலமுண்டு; நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் பல கட்சிகளையும் உண்டுபண்ணி, தமிழரின் கவனத்தை வேறுபக்கம் திருப்ப வேண்டாம். இதனால் தீமையேயொழிய நன்மையில்லை; தமிழரை ஒரு முகமாகத் திருப்பித் தமிழ் நாட்டைப் பலப்படுத்துவதில் எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்; தலைமைப் பதவிக்காகவும், சுயநலத்துக்காகவும், தமிழரின் ஒற்றுமையைக் குலைத்த தமிழரைச் சிதறடித்து சின்னாபின்னமாக்கும் சீர்கெட்ட வேலையில், இறங்காதிருக்கவேண்டும். ஜாதி, மத பூசலை உருவாக்காதிருக்க வேண்டும். தமிழர் ஒன்றுபட்டுத் தமிழ் நாட்டுக்காகப் பாடுபடவேண்டும். அது ஒன்றே, இன்று தமிழ் மக்கள் முன்னுள்ள ஒரே பிரச்னை. யார் என்ன சொன்னாலும், தமிழர் அதற்கு செவிசாய்க்கவே கூடாது. தமிழர் ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு, இல்லேல் தமிழர் அனைவருக்கும் தாழ்வு, என்பதை மறந்துவிட வேண்டாம்.

அரசமரத்தைப் பிடித்தபேய், அடியிலுள்ள பிள்ளையாரையும் பிடித்து ஆட்டியதுபோல், பாகிஸ்தானைப் பிடித்த பேய், இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களையெல்லாம் ஆட்டிவைத்துக்கொண்டிருக்கிறது! திருவாங்கூர் ஆட்டம் ஓய்ந்தது; மைசூர் ஆட்டமும் தீர்ந்தது. ஜூனாகத் நவாப், பாகிஸ்தானுக்கே பறந்துவிட்டார். அவருடன் திவானும் ஓடிப்போய்ச்சேர்ந்தார். ஜூனாகத் இந்திய யூனியனில் சேர்ந்துவிட்டது. காஷ்மீர் மீது, பாகிஸ்தான் வைத்த குறியும் தவறிவிட்டது. அங்கு படையெடுத்த குண்டர்களும் தலைகால் தெரியாமல் ஓடுகிறார்கள். காஷ்மீர் இந்திய யூனியனுடன் சேர்ந்துகொண்டதைக் கண்டு, ஓலமிடுகிறது. அங்குள்ள முஸ்லிம்களுக்காக ஜின்னா சாயபும், லியாகத் அலிகானும், வெகு கைபூசானும் கண்ணீர் வடிக்கிறார்கள்! ஆனால் அவர்கள் பாச்சா இனிமேல் பலிக்காது! வீண் உருட்டல், மிரட்டல்களுக்கு இது காலமல்ல; அந்தக் காலம் மலையேறிவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழ் நாட்டின் மத்தியிலுள்ள, சுண்டைக்காய் சமஸ்தானமாகிய புதுக்கோட்டை, குண்டுச் சட்டியிலே குதிரையோட்டம் காட்டுவதுதான், பெரிய விசித்திரம்! தமிழர் 'பூ'வென்று ஊதினாலும் போதும், புதுக்கோட்டை போனவிடம் தெரியாது மறைந்துபோகும்! அப்படியிருந்தும், புதுக்கோட்டை ராஜா, அங்குள்ள மக்களுக்கு சுதந்திரம் கொடுக்க மறுத்து, என்னவெல்லாமோ செப்படி வித்தை செய்கிறார்! அங்குள்ள டிவானும் அவருக்குத் தூபம் போடுகிறார்! புதுக்கோட்டை சமஸ்தான மக்களுக்கு ஆட்சி உரிமையளிக்கவேண்டும்; இன்றேல், இம்மாதம் 15-ந்தேதியன்று, அங்கு சுதந்திர போராட்டம் ஆரம்பமாகுமென்று, சமஸ்தானக் காங்கிரஸ் ஒரு எச்சரிக்கை விடுத்தது. இதைக்கண்டு மன்னரும், திவானும் துடி துடித்தார்கள். சென்னைக்குக் காவடி எடுத்தார்கள். யாரோ ஒரு அசாமதேயம் புதுக்கோட்டைக்குப் பயந்து; என்ன "குல்மால்" நடந்ததோ தெரியாது. சமஸ்தான மன்னர் ஒரு வழங்குவந்தார்; அவர் புதுக்கோட்டையில் இருவரடங்கிய ஒரு மந்திரி சபையை அமைக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால், அந்த மந்திரிகள் கட்சிப்பற்றில்லாதவர்களாக இருப்பார்களாம்! ஏன்? புதுக்கோட்டை சமஸ்தானக் காங்கிரஸ் தலைவர்களை மந்திரியாக நியமிப்பதில் மன்னருக்கு மனமில்லை; எங்கேயோ இருக்கும் இருகால் ஆட்டித் தம்பிரான்களை மந்திரிகளாகப் பிடித்துப்போட மன்னரும், திவானும் யோசனை போட்டுக்கொண்டிருக்கிறார்களாம்! இதைக் காங்கிரஸ் தலைவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை, மக்கள் நம்பிக்கைப்பெற்றவர்களே மந்திரியாக இருக்கவேண்டுமென்று, நிபந்தனை போட்டிருக்கிறார்கள். புதுக்கோட்டையார் சம்பந்தமில்லாத ஒரு பிள்ளையார் தூது போயிருக்கிறார்; ராஜாவுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார். ராஜாவின் முடிவு தெரியவில்லை. ஆகவே, இம்மாதம் 15-ம் தேதி ஆரம்பிக்கவிருந்த போராட்டத்தை, இம் மாத முடிவுக்கு காங்கிரஸ் தலைவர்கள் ஒத்திப்போட்டிருக்கிறார்கள். அதற்குள் புதுக்கோட்டை ராஜாவுக்குப் புத்தி வருமென்று நினைக்கிறோம்; இன்றேல், நாடில்லாத ராஜாக்களுடனும், நாதியற்ற நவாப்புகளுடனும், அவரும் கடையைக் கட்டவேண்டியதாக வருமென்பதைச் சிந்தித்துப் பார்ப்பாராக.



மாடர்ன் தியேட்டர்ஸாரின் அயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியில் ஒரு காட்சி.

''எதை எழுதுவது? எப்படி எழுதுவது? எதையாவது எழுதித் தொலைக்க வேண்டுமே'' என்ற எண்ணம், ஆழ்ந்த சிந்தனையில் தன்னந்தனியே தன்னறையில் வீற்றிருந்த விமலேசனை வாட்டி வதைத்தது. அப்பொழுது இரவு மணி எட்டு இருக்கும். அவனது மேஜை மீது சில காகிதக் கட்டுகள் கிடந்தன. விமலேசன் கையில் பேனாவைப் பிடித்த வண்ணம் சிந்தனையிலாழ்ந்திருந்தான். அவன் ''வீரமணி'' என்னும் வாரப் பத்திரிகையிலே துணையாசிரியன். எனவே, வழக்கம்போல் அவ்வாரம் ஏதாவதொரு சிறுகதையை தனது பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டிய அவசியம் அவனை அவசரப்படுத்திக் கொண்டிருந்தது. விமலேசன் ஒரு நல்ல எழுத்தாளனாக இருந்தும், அடிக்கடி தானே தன்னுடைய பத்திரிகையில் கதைகள் எழுத விரும்புவதில்லை; அதற்குவேண்டிய அவகாசமும் அவனுக்கு இருப்பதில்லை. எனவே, வெளியிலிருந்து வேறு நல்ல எழுத்தாளர்கள் எழுதியனுப்பும் கதைகளைப் பிரசுரிப்பது வழக்கம். ஆனால், அந்த வாரம் மாத்திரம் பிரசுரிப்பதற்கு நல்ல கதையாக ஒன்றும் கிடைக்கவில்லை. தானே எழுதுவதென்றாலும் சிரமமாக இருந்தது. இதனால்தான் ''எதை எழுதுவது? எப்படி எழுதுவது?'' என்ற சிந்தனையில் ஆழ்ந்தான்.

விமலேசன் இவ்வனம் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவனது அறைக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. எழுந்து சென்று கதவைத் திறந்தான் கையிலே புத்தகங்களுடன் கனகவதி அவன்முன் காட்சியளித்தாள். கனகவதியைக் கண்டதும், ''வா, கனகா, இந்நேரத்தில் எங்கு வந்தாய், என்ன விசேஷம்?'' என்று அன்புடன் வினவினான் விமலேசன்.

கனகவதி ஒரு புன்னகை செய்துவிட்டு, அறைக்குள் வந்து அங்கிருந்த நாற்காலியொன்றில் அமர்ந்து, விமலேசனை நோக்கி ''உங்களால் எனக்கொரு காரியம் ஆகவேண்டும், முடியுமா?'' என்று அன்பும், ஆர்வமும் கலந்த மொழிகளில் கேட்டாள்.

''சொல் கனகா, உனக்காக நான் என்னாலியன்ற உதவியைச் செய்ய சித்தமாயிருக்கிறேன்'' என்று அன்புடன் விடை பகர்ந்தான் விமலேசன்.

கனகா, விமலேசனின் தமக்கை மகள். போதிய கல்வி கற்றவள். இருந்தபோதிலும், ஆங்கிலம் அதிகமாகப் பயின்றவளல்ல. ஆனால், ஆங்கிலம் படித்து பட்டம் பெறவேண்டுமென்ற ஆசைமட்டும் அவளைவிட்டு அகன்றபாடில்லை. எனவே, சென்னையில் பாபா டியூடோரியல் காலேஜில் மெட்ரிக் வகுப்பில் படித்துவந்தாள். கனகாவுக்கு வகுப்பு நேரம் மாலை 6-மணி முதல் 8-மணி வரை. 8-மணிக்கு வகுப்பு முடிந்து வரும் வழியில்தான் விமலேசன் வீட்டிற்கு வந்தாள்.

''என்னாலியன்றதைச் செய்கிறேன்'' என்று விமலேசன் சொன்னவுடன் கனகா தன் கையில் வைத்திருந்த தோல் பை ஒன்றிலிருந்து ஒரு கத்தை கடிதங்களை எடுத்து விமலேசனிடம் கொடுத்து, ''இதோ இதனைப் படித்துப்பாருங்கள். இது ஒரு சிறுகதை; இதனை எழுதியவள் என் தோழி அம்புஜம். நீங்கள் ஒரு பத்திரிகாசிரியர் அல்லவா? ஆகவே, இதைப் படித்துப் பார்த்து நன்றாக இருக்கிறதா, இல்லையா என்று சொல்லுங்கள். அத்துடன் இக்கதைக்குத் தங்க

சிறுகதை

மணமும், மனமும்

ஜி. ஆண்டாள்

ளுடைய பத்திரிகையில் இடங்கொடுக்குமா என்று பாருங்கள்'' என்றாள்.

கனகா கொடுத்த காகிதச்சுருளைப் பிரித்துப் பார்த்தான் விமலேசன். ''மணமும், மனமும்'' என்ற தலைப்புடன், ஒரு சிறுகதை வரையப்பட்டிருந்தது. அக்கதையை எழுதிய பெண்மணியின் பெயர் ''அம்புஜம்'' என்று, அதன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. விமலேசன் அதை இரண்டு முறை திருப்பித் திருப்பிப் பார்த்தான். ஒருவாறு கதையின் போக்கைப் படித்து உணர்ந்துகொண்டான். கதை மிகச் சிறிய கதை. இதுகாறும் பத்திரிகைகளில் வந்துள்ளதுபோன்ற காதல் கதைதான். கதையின் போக்கிலே புதுமை ஒன்றும் காணவில்லை. இதனைப் பிரசுரிப்பதா, இல்லையா என்று யோசித்தான். பிரசுரிக்க முடியாது என்று கண்டிப்பாகக் கனகாவிடம் சொல்ல அவன் மனம் இடந்தரவில்லை. அதுமட்டுமின்றி, அக்கதையில் வரும் காதல் சம்பவம் ஒருவிதத்தில் விமலேசனின் வாழ்க்கைச் சம்பவங்களில் ஒன்றெனச் சொல்லக்கூடிய நிலைமையிலிருந்தது. எனவே, கனகாவைப் பார்த்து, ''சரி, ஆகட்டும்; நான் இதை எப்படியும் பிரசுரித்துவிடுகிறேன்'' என்றான்.

''கதை நன்றாக இருக்கிறதா?'' என்று மறுகேள்வியைப் போட்டாள் கனகா.

''சுமாராக இருக்கிறது; ஆனால் மிகச் சிறிய கதை.''

''சரி, எப்படியாவது அதைப் பிரசுரித்துவிடுங்கள். கதையில் திருத்தங்கள் செய்யவும், கூட்டவும் குறைக்கவும் தங்களுக்குப் பூரண உரிமை அளிக்கிறேன். கதையை எழுதியவள் பெயர் ''அம்புஜம்'' என்பதை மட்டும் தவறாமல் போட்டுவிடுங்கள்.''

''ஏன் கனகா, உன்னுடைய பெயரிலேயே வெளியிட்டுவிட்டால்?''

''வேண்டாம், வேண்டாம்; அப்படியொன்றும் செய்துவிடாதீர்கள். நான் ஒன்றும் அப்படிப்பட்ட எழுத்தாளியல்ல. தயவு செய்து உங்களுடைய குறும்புத்தனத்தை இதில் காட்டிவிடாதீர்கள் என் தோழியின் விருப்பத்தை நிறைவேற்றினால் போதும். அதுவே எனக்குத் திருப்தி.''

''சரி, அப்படியே செய்கிறேன்.''

''நான் சென்றுவரட்டுமா?''

''சரி கனகா, குட் நைட்!''

(கனகா சென்றுவிட்டாள்.)

* * *

அடுத்த வாரம் ''வீரமணி'' பத்திரிகையில் 'மணமும், மனமும்' என்னும் சிறுகதை வெளியாயிற்று. அச் சிறு கதையில்......

ஒருநாள் மாலைப்பொழுது ராமசாமிப் பிள்ளை, தனது சொந்த நிலையை எண்ணி, எண்ணி! நெஞ்சம் புண்ணாகிக் கொண்டிருந்தார். தனது மனைவியின் பிரிவாற்றாமை ஒருபுறம்; பருவமடைந்த மூத்த மகள் ரமணிக்கு மணம் முடிக்கவேண்டுமே, கோமதி, வேணு, என்னும் மற்ற இருபிள்ளைகளையும் வளர்த்து உருவாக்கவேண்டுமே என்றகவலை மற்றொருபுறமும் அவரைப் பற்றி அலக்கழித்தது. அடிக்கடி தன் தந்தை இவ்வனம் கவலைப்படுவது கண்டு, கலக்கமுறுவாள் ரமணி. ஏனென்றால், குடும்பத்துக்கு மூத்தப் பெண் அல்லவா? இவ்வாறு இந்தக் குடும்பத்தின் கவலை வளர்ந்துகொண்டேயிருந்தது.

ராமசாமிப் பிள்ளை குடியிருந்த வீட்டுக்கு அடுத்த வீடு ஒரு மாடி வீடு. வாணி & கம்பெனி மானேஜர் ரங்கமணி பி. ஏ. அவ்வீட்டிற்குப் புதிதாகக் குடி வந்தவன். ரங்கமணியின் பெற்றோர் உடல்நலத்திற்காக ஊட்டிக்குச் சென்றுவிட்டனர். ரங்கமணியும், சமையற்காரன் அம்பியும்தான் அவ்வீட்டில் வசித்து வந்தனர். ரங்கமணி ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனிடம் கல்வி குடிகொண்டதுபோலவே இளமையும், எழிலும் குடிகொண்டிருந்தது. அவனது பேச்சும், செயலும் அவனுடன் பழகும் அத்தனைப்பேரையும் வசிகரிக்கும் தன்மை வாய்ந்ததாக இருந்தன.

அண்டை வீட்டார் என்ற முறையிலே ரங்கமணிக்கும் ராமசாமி பிள்ளையின் குடும்பத்துக்கும நெருங்கிய தொடர்பு ஏற்படலாயிற்று. சமையற்காரன் அம்பிக்கு வேணு இணைபிரியாத தோழனாகிவிட்டான். அம்பிக்கு மாத்திரமல்ல, ரங்கமணிக்கும் அப்படியே ரங்கமணியை வேணு அடிக்கடி கிண்டல் செய்து அவனுடன் விளையாடுவான். வேணுவை அடிக்கடி ரமணி கண்டிப்பாள். ''டேய் வேணு இங்கே வா.'' என்று தன் தம்பியை ரமணி அதிகாரத் தோரணையுடன் அடிக்கடி அழைக்கும் குரல் ரங்கமணியின் காதில் விழுவதுண்டு. அது கேட்டு அவன் மகிழ்வதுண்டு ஏனெனில் ரமணியின் பேச்சுகளில் அடங்கியிருந்த அறிவும் ஆற்றலும் கேட்டவரை மயங்கவைக்கும் சக்தி வாய்ந்ததாக இருந்தது

ரமணியை நேரில் காண முடியாவிட்டாலும் அவளது குரலைக்கேட்டே அவள்பால் அன்புகொள்ள ஆரம்பித்தான் ரங்கமணி.

ஓர் நாள் மாலை; ரமணி தன் வீட்டு முற்றத்தைத் தண்ணீர் விட்டு அலம்பிக்கொண்டிருந்தாள். இதே நேரத்தில் பக்கத்து வீட்டுமாடியில் ரங்கமணி குரோட்டன்ஸ் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தான். செடிகளுக்கு ஊற்றிய நீர் வழிந்து ரமணியின வீட்டு முற்றத்தில் விழுந்தது. முற்றத்தை அலம்பிக்கொண்டிருந்த இள நங்கை ரமணி திடீரென தன்னுடைய வேலையை நிறுத்திவிட்டு அண்ணாந்து பார்த்தாள். ரங்கமணியின் கண்களும் ரமணியின் கண்களும் சந்தித்தன. ரமணி நாணத்தால் தலை குனிந்தாள். இரண்டே அடிவைத்து வீட்டிற்குள் சென்று மறைந்தாள். ரங்கமணி நின்ற நிலையிலே ஆடாது அசையாமல் நின்றான். அதற்குமேல் ரமணியை அவன் காணமுடியவில்லை. அதுபோலவே ரங்கமணியையும் ரமணி காணமுடியவில்லை ஆனால் அன்று முதல் இருவரும் ஒருவரையொருவர் அகக்கண்முன் கண்டு களித்தனர். அவர்களிடையே காதல் வளர ஆரம்பித்தது.

ரமணியும் ரங்கமணியும் அடிக்கடி ரங்கமணியின் வீட்டுத் தோட்டத்தில் ஒருவரையொருவர் சந்திக்கத் தலைப்பட்டனர். தோட்டத்தில் மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய செடிகள் படர்ந்து, வளர்ந்து இருந்தன. மாலைப்பொழுதில் அங்கு சென்று பூக்களைக் கொய்து தலையில் அணிந்துகொள்ளுவது கோமதிக்கும், ரமணிக்கும் வழக்கம். அதுமட்டுமல்ல; ரமணிக்குக் கொஞ்சம் பரத நாட்டியமும் தெரியும் அவள் தனக்குத் தெரிந்த பரத நாட்டியக் கலையைத் தன் தங்கைக்கும் கற்பித்து வந்தாள். இவ்விரு ஏழைப் பெண்களின் மாலைப்பொழுது மல்லிகை முல்லைக் கொடிகளுக்கிடையே தான், உல்லாசமாகக் கழிந்து வந்தது.

ஒரு நாள் மாலை ரமணி தன் தங்கை கோமதிக்கு முல்லைக்கொடி படர்வது போல், அபிநயம் பிடிப்பது எப்படி? என்பதை கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தாள். கோமதி முல்லைக்கொடிபோல் படர்ந்து நிற்பது எப்படி? என்பதைப் பழகிக்கொண்டிருந்தாள். அப்பொழுது ரமணி தன் தங்கையிடம் ஓடி...

''அடி கோமதி அப்படியே நில், நீ முல்லைக் கொடியல்லவா? முல்லைக்

(அடுத்த பக்கம் பார்க்க)

இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கக் கூடியது.

பழனி ஆர். எம். கே. தங்க மாத்திரை.

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே இல்லை. தாதைக் கெட்டி படுத்தி, பலஹீனத்தைப்போக்கி, நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து, உங்கள் மனக்கவலையை நீக்கி, தம்பதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது. இதைச் சகலரும் சாப்பிடலாம். விந்தில் கரு அமைக்கும் சக்தியுள்ளது.

50 நாள் தங்க மாத்திரை, சாலாமிசிரி ஹல்வா 15—0—0

குறிப்பு:—இலங்கை, பர்மா, மலாய் நாட்டினர் தபால் செலவு கூட்டி முன்பணம் அனுப்பினால் லைசன்ஸ்பெற்று பார்சல் அனுப்பிவைக்கிறோம்.

[தபால் செலவு தனி.]

வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி,
சித்த வைத்தியசாலை, பழனி. [ஸ்தாபகம் 1900]

மணமும், மனமும்

(மூன் பக்கத் தொடர்ச்சி)

கொடி படர, ஒரு பற்றுக்கோல் வேண்டுமல்லவா? நான் அந்தப் பற்றுக்கோலாக இருக்கிறேன்" என்று சொல்லி அவள் அருகில் நின்றான்.

இங்ஙனம் இவர்களிருவரும் உல்லாசமாக விளையாடிக் கொண்டிருந்ததை அப்பக்கம் வந்த ரங்கமணி பார்த்துவிட்டு சற்று தூரத்தில் அப்படியே நின்றான். கோமதி இதனை கவனிக்கவில்லை. ரமணிமட்டும் பார்த்துவிட்டு ஒரு புன்னகையுடன் இலைகளுக்கு இடையே சற்று நாணத்துடன் நின்றாள். இதைக்கண்ட கோமதி "இதென்ன அக்கா போய் விட்டாயே, வா, இப்படி" என்று அழைத்தாள்.

இதே சமயத்தில் ரங்கமணியின் கண்கள் ரமணியின் கண்களை சந்தித்து ஏதோ சில குறிப்புகள் காட்டின. அவ்வளவுதான்!

"கோமதி, பொழுது போயிற்று அப்பா தேடுவார்; போ வீட்டுக்கு" என்று தன் தங்கைக்கு ஒரு அவசர சட்டம் போட்டாள் ரமணி.

கோமதியும் உடனே அவ்விடம் விட்டகன்றாள்.

ரங்கமணி மெள்ள ரமணியை நெருங்கினான்; இருவருக்குமிடையே ஒரே ஒரு மல்லிகைச் செடிதான் இருந்தது ஒரு மல்லிகையைப் பறித்து அதை ரமணிமீது வீசினான் ரங்கன். ரமணி அவ்விடம் விட்டு இரண்டடி பின் வாங்கினாள்.

"ரமணி, நில்" என்றான் ரங்கன்

அச்சம், அன்பு இரண்டுக்குமிடையே அகப்பட்டுத் தவித்தாள் ரமணி.

கையில் ஒரு மலரை எடுத்து "ரமணி இதோ பார் இந்த மலருக்கு மணம் எப்படி வந்தது? ஏன் வந்தது தெரியுமா?" என்று கேட்டான் ரங்கன்.

ரமணி புன்னகையுடன் "இதென்ன கேள்வி! மலருக்கு மணம் அமைந்தது இயற்கை. அது ஆண்டவன் செயலல்லவா!" என்றாள்.

"ஆம், ஆண்டவன் செயல்தான். ஆனால் அதன் காரணத்தை நாம அறிந்துகொள்ள வேண்டாமா?"

"காரணமா? அதென்ன காரணம்?

மலருக்கு மணமும், அழகும் இருப்பதால்தான் தேன் வண்டுகள் அம்மலர்கள் இருக்குமிடந்தெரிந்து வருகின்றன. மணமும் அழகும் இல்லையென்றால் வண்டுகள் வராது. வண்டுகள் வராவிட்டால் மலர்கள் விருத்தியடைய மார்க்கமில்லை. மலர்களிடமுள்ள தேனை வண்டுகள் உண்டு மகிழவேண்டும். எனவே, வண்டுகள் வரவை மலர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்"

"அதுபோல...!"

அது போலவே தான் நம் காதலும். நம்முடைய காதல் களிகொடுக்க வேண்டுமானால் நீ மலராகவும் நான் வண்டாகவும் மாறியே தீரவேண்டும்"

இதே சமயத்தில் ரமணியின் கரத்தை ரங்கனின் கரம் இறுகப் பிடித்தது. ரமணி ரங்கனை நோக்கினாள்.

"அப்படியானால் ஏழையாகிய என்னைத் தாங்கள் காதலிப்பது உண்மைதானா?"

"இன்னுமா சந்தேகம்?"

"நமது பெற்றோர் இதற்கு இடந்தர வேண்டுமே?"

"ஆம், பெற்றோரின் சம்மதம் தேவைதான். ஆனால் அவர்கள் நமது சம்பந்தத்தை விரும்பவில்லையானால்"

"நமது வாழ்வு பாழ்பட்டுப் போகும்"

"அப்படி என்னாதே; காதலரன்பைத் தடை செய்ய யாராலும் முடியாது. உறுதியுடன் இருப்போமானால் வெற்றி நிச்சயம்.

இங்ஙனம் இவர்களது உரையாடல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது வீட்டினுள்ளிருந்து கோமதி "அக்கா, அக்கா" என்று அழைத்தாள்

"கோமதி என்னைக் கூப்பிடுகிறாள். நான் போகிறேன். மற்ற விஷயங்களைப் பிறகு பேசிக்கொள்ளலாம்"

ரங்கமணி, ரமணியின் கரங்களை மேலும் இறுகப்பற்றிய வண்ணம் "சற்று பொறு ரமணி" என்றான். அவன் குரல் சற்று கம்மிற்று; கண்கள் சிவந்தன; ரமணியைக் கூர்ந்து கவனித்தான். அவளுடைய நிலையும் அங்ஙனமே! அவளது முகத்தில் அன்பக்குறி தாண்டவமாடிற்று. அவள் அதரங்கள் துடித்தன. முல்லை கொடியருகே நின்றிருந்த அவளும் அப்படியே கொடிபோல் துவண்டாள். துவண்ட அந்த கொடியை தன் மார்போடு அணைத்துக் கொண்டான் ரங்கமணி இருவர் அதரங்களும் ஒன்றையொன்று நெருங்கின. அந்திரன் ஆதவன் மேற்றிசையில் மறைந்தான். எங்கும் இருள் சூழ்ந்தது. அதே சமயத்தில் மீண்டும் வீட்டினுள்ளிருந்து "அக்கா" என்ற குரல் கேட்டது.

"உஸ்! போதும, விடுங்கள்... நேரமாகிறது..." என்றாள் ரமணி.

இருவரும் அவ்விடம் விட்டுப் பிரிந்து சென்றனர். அன்றையப் பொழுதும் கழிந்தது. மாதங்கள் இரண்டு உருண்டோடின.

ரமணி ரங்கமணியின் உள்ளத்தில் நிலையான இடம் பெற்று விட்டாள் வேலை பார்க்குமிடத்திலும், வீட்டிற்கு வந்த பின்பும் ரமணி ரங்கனின் அகக்கண் முன் காட்சியளித்துக் கொண்டேயிருந்தாள். ரமணியின் அன்பும், அறிவும் அவனது சிந்தனையைக் கிளறிய வண்ணமிருந்தன.

இவையொரு புறமிருக்க, இதேசமயத்தில் ரங்கமணிக்கு எப்படியாவது சீக்கிரத்தில் திருமணத்தை முடித்துவிடுவது என்று நிச்சயித்தனர். அவன் பெற்றோர் உடனே புறப்பட்டு ஓர்நாள் மாலை சென்னை வந்து சேர்ந்தனர். அன்றைய இரவு உணவருந்தியபின் திருமணத்தைப்பற்றிய பேச்சை ஆரம்பித்தனர். இது கேட்ட ரங்கன் திடுக்கிட்டான். தன் பெற்றோர் செய்யும் முயற்சியால், தன்னுடைய காதல் வெற்றி பெறாமற்போகுமோவென்று அஞ்சினான். என்னென்னவோ எண்ணமெல்லாம் எண்ணி, எண்ணி நெஞ்சம் புண்ணானான். முதலில் தான் திருமணம் செய்துகொள்ளப்போவதில்லை என்று கூறிப்பார்த்தான். அதற்கு அவன் பெற்றோர் சம்மதிக்கவில்லை காரணம் கேட்டனர்; காரணம் காதல் என்பது அவர்களுக்குத் தெரியாதல்லவா? ரங்கமணிக்கும், அவன் பெற்றோருக்கும் வாக்குவாதம் முற்றியது. முடிவில் ரங்கமணி தன் பெற்றோரிடம் தன் உள்ளத்தைத் திறந்து காட்டினான். லக்ஷாதிபதியாகிய தங்களுடைய மைந்தன் ரங்கமணியின் உள்ளத்தில், பரமதரித்திரர் ராமசாமிப் பிள்ளையின் மகள் ரமணி குடிகொண்டுவிட்டதை அறிந்து, ராஜகோபால் பிள்ளையும் அவரது மனைவியும் திடுக்கிட்டனர்.

"இதென்ன இருந்திருந்தும் அடுத்த வீட்டு ரமணியையா மணக்கப்போகிறாய்?"

இது ரங்கமணியின் தாயார் காமாக்ஷி அம்மாளின் கேள்வி.

"ஆம்" என்று கண்டிப்பான பதில் தந்தான் ரங்கமணி.

"ஏழையாயிற்றே; அவர்கள் நிலைமைக்கும், நம் நிலைமைக்கும் பொருத்தமில்லையடா தம்பி?"

ஏழையென்றும், அடிமையென்றும் எவருமில்லை இந்த நாட்டில். இந்த நாடு சுதந்திரமடைந்துவிட்ட பிறகுமா இந்த எண்ணம்? நாம் பணக்காரர்களாக இருந்தால், ஏழை மக்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளக் கூடாதென்பது அர்த்தமா? அப்படியே நீங்கள் சொல்லுகிறபடி வைத்துக்கொண்டாலும், பணக்காரர் பணக்காரர்களையே தேடிக்கொண்டு அலைவதும், ஏழைகள் ஏழைகளையே தேடிக்கொண்டு அலைவதுமாக இருந்தால், ஏழைகள் முன்னேறுவதுதான் எப்போது? ரமணி ஏழை என்பதற்காக பணக்காரனாகிய நான் அவளை மணக்கக்கூடாதென்றால், பூங்கொடியாகிய அவள் பற்றுகோலின்றி வாடிவிடமாட்டாளா? அதுவும் என்னை நம்பிய ஒரு பெண்ணை நான் கைவிடுதல் தருமமா? மேலும், ஏழ்மையையும், செல்வத்தையும் பற்றியெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தால் நல்ல பண்பை நாம் இழந்தவர்களாவோம். நம்முடன் சம அந்தஸ்துள்ள இடத்தில் பெண் தேடுவது கஷ்டமல்ல. ஆனால், ரமணியைப்போன்ற அறிவும், ஆற்றலுமுள்ள பெண்ணைத் தேடுவது தான் கஷ்டம். எனவே, உங்களுக்கு எனது நல்வாழ்வில் நாட்டமிருந்தால் நாளையே ரமணியை நான் மணக்க இடங்கொடுங்கள். அப்படிச் செய்ய மனமில்லாவிட்டாலும், என்னிஷ்டத்திற்குக் குறுக்கே நிற்காமலாவது இருங்கள்" என்றான். அவனது பேச்சிலே ஒருவித ஆவேசம் காணப்பட்டது. பெற்றோர் இது கேட்டு திகைத்தனர். தாம் எண்ணியிருந்த மனக்கோட்டைகளெல்லாம் சரிந்துவிட்டதாக எண்ணி, ஏமாற்றம் அடைந்தனர். மேலும், இரண்டு மாதங்கள் உருண்டோடின.

* * *

ரங்கமணியின் மனதை மாற்ற முடியாத அவனது பெற்றோர் கடைசியில் ரமணியையே அவனுக்கு மணமுடிப்பதென்று முடிவு செய்தனர். ராமசாமிப் பிள்ளையின் செவிக்கு இச்செய்தி எட்டியது. தாயற்ற தன் மகள் ரமணிக்கு ஏற்ற கணவன் வந்தான் என்றெண்ணி மகிழ்ந்தார் அவர். ஆனால், அதேசமயத்தில் பெரிய இடத்து சம்பந்தமாயிற்றே, அதற்கேற்ற அந்தஸ்து தனக்கில்லையே என்ற வருத்தமும் அவரைச் சற்று துன்புறுத்தியது.

ரமணியின் உள்ளத்தில் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தோடியது; ரங்கமணி வெற்றி பெற்றுவிட்டதாக பெருமிதமடைந்தான். சேத்துப்பட்டு மகளபவனத்தில் ரமணிக்கும், ரங்கமணிக்கும திருமணம் இனிதே நிறைவேறியது. ரங்கமணிக்கு நண்பர்கள் தந்த வாழ்த்துக்களுக்கும், பரிசுகளுக்கும் அளவேயில்லை. வெளியூர்களிலிருந்தும் வாழ்த்துக்கள் வந்து குவிந்தன.

மறுநாள் ரங்கமணி ரமணியைப் பார்த்து, "ரமணி, மல்லிகையின் மணம் எப்படி இருக்கிறது பார்த்தியா?" என்றான்.

ரமணி புன்னகை செய்தாள். அவன் செய்த புன்னகையில் பல பொருள்கள் அடங்கி இருந்தன.

LEPROSY ★ LEUCODERMA

குஷ்டம் ★ வெண் குஷ்டம்.

இலவச பரீக்ஷை சிகிச்சை செய்யப்படும்

கடிதங்கள் உடனே கவனிக்கப்பட வேண்டுமானால் ஆங்கிலத்தில் எழுதுங்கள். தமிழில் எழுதப்படும் கடிதங்கள் புரிந்துகொள்ள முடியாது. அதனால் அவை திருப்பி அனுப்பப் படும்.

தமிழ், மலையாளம், உருது முதலிய பாஷைகளில் வெளியாகி இருக்கும் நற்சாட்சி பத்திரங்கள் முதலிய விவரங்களுக்கு எழுதிக்கொண்டால் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்,

ஆப்ரிக்காவிலிருந்து பீஜி வரையில் எங்கள் மருந்து ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

REDDY & CO., (*Regd*)

GOPALAPURAM. E. G. Dt. TANUKU, M. S. M.

மிருகபலத்தால் யாது பலன்?

மனோ பலத்தால் செய்து முடிக்காத காரியத்தை முறட்டுத்தனமாக மிருக பலத்தைக்கொண்டு சாதிக்கமுடியாது. மனோதிடம் பெற சரீர பலம் அவசியம்.

ஸ்ரீ மகா போக லேகியம்

நரம்பு தளர்ச்சியை நீக்கும், இரத்தத்தை பெருக்கும், ஆண்மை அழகுதரும்

1 சேர் விலை ரூ. 4—4—0. 3 சேர் விலை ரூ. 9—0—0.

பேதைப் பெண்களை பேணுங்கள். யாழ்ப்பாண கற்ப எண்ணை.

ஸ்திரீகளுக்கு மாதாந்தர காலத்தில் ஏற்படும் சூதகத்தை ஒழுங்குபண்ணி, பொறுக்கமுடியாத வயிற்றுவலியை ஒரேவேளையில் குணப்படுத்தும். அனேக வருஷங்கள் குழந்தையில்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் ஏற்படுத்திய புண்ணிய மருந்து. ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் அனுபவமுறை. உத்திரவாதமானது. ஒரு பாட்டில் விலை ரூ. 3—0—0.

சகல வியாதிகளையும் நோயில் பரீக்ஷித்து தக்க மருந்துகள் கொடுக்கப்படும்.

யாழ்ப்பாண வைத்தியசாலை, பழனி.

அங்கும் இங்கும்

தமிழருக்குத் தனியரசு வேண்டும்
நாட்டு மொழி நலிகிறது;
அன்னிய மொழிக்கு ஆதரவு ஏன்?
பாதுகாப்புச் சட்டம் ஒழிக!

தமிழ் நாட்டு மக்கள் தமக்குள்ளிருக்கும் ஜாதி, மத, கட்சி வேறுபாடுகளை விட்டொழித்துவிட்டு தமிழர் தனியரசை நிறுவ பாடுபடவேண்டுமென்பதை நாம் பலகாலமாக வலியுறுத்திவருகிறோம். தமிழ்நாட்டுப் பிரிவினையும், தமிழரின் எதிர்கால ஆட்சி முறையும் எப்படியிருத்தல்வேண்டுமென்பதைப்பற்றியும் அவ்வப்போது கட்டுரைகள் மூலமும், பிரசுரங்களாலும் எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம். சென்றவாரம் சென்னையில் கூடிய தமிழரசுக்கட்சி மாநாட்டினர் செய்துள்ள தீர்மானங்கள் ஏறக்குறைய நமது கருத்துகளுக்கு ஒத்ததாகவே இருப்பதுகண்டு மகிழ்ச்சியடைகிறோம். பொதுவாக அந்தத் தீர்மானங்கள் அனைத்தையும் நாம் வரவேற்பதுடன் குறிப்பாகச் சில தீர்மானங்களைக் குறித்து ஈண்டு ஒருசில எழுத விரும்புகிறோம்.

"இந்தியாவை மொழிவாரி நாடுகளாகப் பிரித்து, அதில் வாழும் மக்களுக்கு சோஷியலிசக் குடியரசினை நிலைநாட்டும் உரிமையைத் தந்து, இந்திய சோஷியலிசக் குடியரசுகளின் கூட்டரசினை அமைக்க அரசியல் நிர்ணயசபை தவறிவிட்டதை இந்த மகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. மற்றும் பலவாய்ந்த மத்திய சர்க்கார் என்ற பெயரால் தமிழகத்தின் பொருளாதாரம் முதலிய உரிமைகளுக்கு இடையூறு விளைந்திருப்பதால் விரைவில் இந்தப் பெருங்குறையைத் தீர்க்கவேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையைக் கேட்டுக்கொள்வதோடு, உடனடியாகத் தமிழ் நாட்டினைப் பிரித்து அவ்வாறு திருத்தியமைக்கும்படி தமிழ்நாட்டு உறுப்பினரைக் கேட்டுக்கொள்ளுகிறது".

இது தமிழரசுக்கழக மகாநாட்டுத் தீர்மானங்களில் முதல் தீர்மானம். நாம் அடிக்கடி வடநாட்டுச் சுரண்டல்களிலிருந்து தமிழ்நாடு தப்பவேண்டும் என்று எழுதிவருவதை வாசகர்கள் அறிவர். அப்படி நாம் எழுதிவந்தின் அவசியத்தை அறியவிரும்புவோர் மேற்கண்ட தீர்மானத்தைச் சற்று தெளிவாக ஆராய்ந்து பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தமிழ்நாடு உண்மையிலேயே சுதந்தர நாடாகத் திகழவேண்டுமானால் எவ்வளவுக்கெவ்வளவு வட நாட்டுத் தொடர்பிலிருந்து விடுபடுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. இதனால் வட நாட்டு உறவு வேண்டாம் என்று நாம் கூறுவதாக யாரும் கருதத் தேவையில்லை. உறவு இருக்கட்டும். ஆனால் அந்த உறவு நமது உரிமையைப் பறிப்பதாக இருக்கவேண்டாம். தமிழ் நாட்டை வட நாட்டுக்கு மார்கெட்டாக மாற்றுவதற்கு அந்த உறவு பயன்படக்கூடாது வேண்டுமானால் அண்டை வீட்டார் என்ற முறையிலே வடநாட்டுடன் உறவு கொள்வோம் என்றுதான் கூறுகின்றோம்.

தமிழர் தனியாட்சி

பலம் பொருந்திய மத்திய சர்க்கார் என்பதெல்லாம் எப்பொழுதும் பலம் பொருந்திய சுரண்டலுக்கு இடந்தருவதாகவே முடியும். ஏனெனில் தமிழ் நாட்டின் உண்மை நிலை வட நாட்டுக்குத் தெரியாது. தமிழ் நாட்டு உறுப்பினர் என்று சொல்லிக் கொண்டு அரசியல் நிர்ணய சபையிலே ஒய்யாரமாக வீற்றிருப்பவர்கள் தமிழரின் உண்மைப் பிரதிநிதிகளல்ல. இதனை நாம் முன்னரே பல தடவை குறிப்பிட்டிருக்கிறோம். எனவே இப்படிப் பட்ட நிலைமையில் மத்திய சர்க்கார் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் முறையிலே தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை சுரண்ட நேர்ந்தால் அதனை ஏனென்று கேட்பார் அங்கில்லை அப்படி கேட்பது தேசியத்துக்கு விரோதமானது என்ற நம்பிக்கை இருந்து வருகையில் அவர்கள் எப்படிக் கேட்பார்கள்? எனவே மொழிவாரி நாடுகளாக இந்தியாவைப் பிரித்து ஆங்காங்குவாழும் மக்கள் தனி சோஷியலிசக் குடியரசை அமைத்துக் கொள்ளுவதுதான் முறை. அப்படி அமைத்துக் கொண்டால்தான் அந்தந்த நாட்டுப் பொருளாதார நிலையைப் பாதுகாக்கமுடியும். இந்தியா ஒரு பரந்த பூபாகம். இதில் பல குடியரசுகள் ஏற்படுவது தவறு என்று யாரும் சொல்லி விடமுடியாது மொழிவாரியாக நாடுகள் பிரிந்து குடியரசை அமைத்துக் கொண்டு வாழ்ச் செய்வது தான் உண்மையிலேயே பலமுள்ள மத்திய சர்க்காரை ஏற்படுத்துவதாகும். இதை விடுத்து பலதிறப்பட்ட நாடுகளை கட்டாயமாக மத்திய சர்க்காருடன் இணைப்பது மனமில்லாத மங்கையை பலவந்தமாக ஒருவன் மணந்து கொள்ள விரும்புவது போலவேயாகும். எங்கெங்கே பலவந்தம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் பலவீனமும் கூடவே இருந்துதான் செய்யும். எனவே தமிழ் நாட்டைப் பொருத்த வரையில் இதனை ஒரு தனி சோஷியலிசக் குடியரசாகச் செய்வது தான் முறை. உடனடியாகச் செய்ய வேண்டியதும் அதுதான். அப்படிச் செய்தால் இப்பொழுது பலதுறைகளிலும் தாழ்வுற்று நிற்கும். தமிழ்நாடு தலைதூக்க முடியும். உதாரணமாக ஒன்று கூறுகிறோம், இறையத்தினம் தமிழ் நாட்டில் எங்கு பார்த்தாலும் தமிழாசிரியர்கள் ஊதியம் போதவில்லை என்ற காரணத்தால் துக்கவாரம் கொண்டாடுகின்றனர். அவ்வளவு தூரம் அவர்களை இந்த அரசாங்கம் அலட்சியப் படுத்தியிருக்கிறது. இதனைக் கூட தமிழரசுக் கழக மகாநாட்டார் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். தமிழரின் தனியாட்சி இந்த நாட்டிலே இருக்குமானால் தமிழாசிரியருக்கு இத்தகைய நிலை ஏற்படுமா என்பதை எண்ணிப் பாருங்கள்.

இதுமட்டுமல்ல இன்னும் எத்தனையோ குறைகள் உள்ளன. அவற்றையெல்லாம் போக்கவேண்டுமாயின் தமிழர் தனியாட்சி பெறுதல்வேண்டும். எல்லாவற்றுக்கும் மத்திய சர்க்காரையே எதிர்பார்த்து நிற்கும்நிலை மாறவேண்டும். தமிழ்நாடு சகல துறைகளிலும் வளம்பொருந்திய நாடு. தனித்துநிற்கும் ஆற்றல் தமிழ் நாட்டுக்கு உண்டு. தமிழ் நாட்டைவிட பரப்பளவு, ஜனத்தொகை, வளம் முதலியவற்றில் சுருங்கிய பல ஐரோப்பிய நாடுகள் தனியாட்சி நடத்தவில்லையா? தமிழ் நாட்டிற்கு மாத்திரம் அது எப்படி முடியாமற்போகும்? எனவே தமிழரசுக் கழகத்தார் செய்திருக்கும் முதல் தீர்மானத்தை நாமும் முழு மனதுடன் வரவேற்கிறோம். அதனை நிறைவேற்றிவைக்கும்படி அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்ளுகிறோம். அத்துடன் இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக்கொண்டு தமிழர்கள் செய்யவேண்டிய அரும்பணிக்கெல்லாம் முழு ஆதரவும் தருவதாக உறுதி கூறுகிறோம்.

அன்னியமொழிக்கு - ஆதரவா?

அடுத்தபடியாக நமது கவனத்தைக் கவர்வது மொழியைப்பற்றிய தீர்மானம்.

"தமிழ் நாட்டில் தொடக்கப் பள்ளிமுதல் கல்லூரி முடிய தமிழை முதன்மொழியாக்கி அதனை வருகிற ஆண்டிலேயே செயலில் கொண்டு வரவேண்டுமென்றும், இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தை ஆக்க வேண்டும் என்றும், இந்தி முதலிய பிறமொழிகளுக்குப் பாடதிட்டத்தில் இடமளிப்பதோ, அம்மொழிகளுக்காக அரசாங்கத்தின் பொருளையும் காலத்தையும் செலவிடுவதோ கூடாது என்றும் இம்மகாநாடு அரசாங்கத்தாருக்கு அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறது".

தமிழ் நாட்டின் முன்னேற்றம் தமிழ் மொழியின் முன்னேற்றத்தைப் பொருத்தேயிருக்கிறது என்று கருதுகின்ற நாம் இத்தீர்மானத்தையும் முழுமனதோடு வரவேற்கிறோம் இதில் முக்கியமாக நாம் குறிப்பிட விரும்புவதெல்லாம் இந்தி முதலிய பிறமொழிகளுக்கு ஆக்கமளிப்பதும் அதற்காக அரசாங்கத்தின் பணத்தை செலவிடுவதுமேயாகும். நாட்டு மொழியாசிரியர்களின் பணி எவ்வளவு சிறந்த பணி என்பதை எண்ணிப்பாராமல் தாயாரைப் பிச்சையெடுக்கும்படி செய்துவிட்டு தனயன் கோதானம் கொடுப்பதுபோல அயல் மொழியாகிய இந்திமொழிக்கு நாட்டுப்பணத்தை செலவிடுவது எந்த முறையில் ஏற்ற செயலாகும் என்பதை எண்ணிப் பாருங்கள். தமிழாசிரியர்கள் ஊதியம் போதவில்லையே என்றால், "அரசாங்கம் என்ன பணங்காய்க்கும் மரமா?" என்று கேட்கும் மந்திரியாரை இந்திக்கு செலவிட மாத்திரம் பணம் இருக்கிறதா என்று நாம் கேட்கிறோம். வீண் செலவுகளை அனுமதித்துக் கொண்டு அவசியமான செலவுகளை அலட்சியப் படுத்தும் மந்திரி சபையார் தமிழரசு கழகத்தாரின் இந்தத் தீர்மானத்தைக் கண்ட பிறகேனும் தமது போக்கை மாற்றிக் கொள்ளுவார்களாக.

ஆவன செய்க!

கடைசியாகவும், மிக முக்கியமாகவும் நாம் கவனிக்கவேண்டுவது பாதுகாப்புச் சட்டத்தை வாபஸ் வாங்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம். பாதுகாப்புச் சட்டம் தமிழ் நாட்டில் உள்ளவரையில் தமிழ் நாட்டில் நடைபெறும் ஆட்சி ஜனநாயக ஆட்சி என்றே சொல்லமுடியாது. பாதுகாப்புச் சட்டம் வெள்ளையர் ஆட்சியில் இருந்த இந்திய பாதுகாப்புச் சட்டம் என்னும் ஒரு எதேச்சாதிகாரச் சட்டத்திற்கு ஒப்பானதேயாகும். அன்று வெள்ளையனைக் கண்டித்த சிலர்களே இன்று இந்த பாதுகாப்புச் சட்டத்தை சீராட்டிப் பாலூட்டி வளர்க்கின்றனர். இச்சட்டத்தால் பொதுமக்களுக்கிருக்கும் அபிப்பிராயச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. சிறப்பாக தொழிலாளரின் உரிமைகள் பறிபோகின்றன. எனவே, இத்தகைய சர்வாதிகாரச் சட்டம் ஒழியவேண்டியது மிக மிக இன்றியமையாததாகும். தமிழர் பெரும்பாலோர் தொழிலாளர். எனவே, தொழிலாளர்களுடைய உரிமையைப் பறிக்கும் சட்டம் எதுவாயினும் அதற்கு இந்தத் தமிழ் நாட்டில் இடம் அளிக்கவேகூடாது. அப்படி இடமளிப்பது தமிழருக்குப் பெருத்த அவமானமாகும். ஆகவே, தமிழர் உரிமையைப் பறிக்கும் ஒரு சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றிய தமிழரசு கழகத்தாரை மனமார வாழ்த்துகிறோம். அத்துடன் இந்தக் கழகத்தார் நிறைவேற்றியுள்ள மற்ற தீர்மானங்களுக்கும் தமிழர்கள் தமது பூரண ஆதரவையும் அளித்து தமிழரின் தனியாட்சியை நிறுவ ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

அறிவிப்பு

கையெழுத்து மட்டும் போட்டு கடனாக ரூ 1000 வரை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். இது வரையில் அனேகர் அவ்விதம் பெற்றிருக்கிறார்கள். விபரங்களுக்கு ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

ALL INDIA LOANS LIMITED
211 Frere Road, Fort,
Bombay.

ஜோதி எண்ணெ

குஷ்டம், குறை நோய், விஷக்கடியால் உண்டாகும் குஷ்டம் ரணமேகம், செம்மேகம், செம்மேகப்பத்து, கருந்குஷ்டம் கருமேக ஊரல் வெண்குஷ்டம் ரெத்தி குலக்கட்டி, குழிபுண் ஆறாத ரணம் தினவு, மதமதப்புகள் மாறி ரணங்கள் காய்ந்து சருகுபோல் உதிரும். குஷ்டரோகி என்ற பெயரை மாற்றும். இத்துடன் (கரு எட்டிகல்பம்) 40 வேளை சேர்த்து சாப்பிட்டால், நீடித்த வியாதிகளும் நீங்கும். சஞ்சீவி போன்றது ஜோதி எண்ணெ ௵ கரு எட்டி கல்பம் 20 வேளை ரூ. 18.

K. S. பதி வைத்தியசாலை,
பழனி. (S. I. R.)

ஓர் கற்பனை உரையாடல்

உண்மை உலவுகிறது!

துப்பறிவோன்

உரையாடுவோர்: பஞ்சாபிகேச ஐயரும், பட்டுசாமி ஐயரும்.

இடம்: பனகால் பார்க், தியாகராய நகர்.

பஞ்சாபிகேசஐயர்; ஹலோ!......குட் ஈவ்னிங்...

பட்டுசாமிஐயர்: குட்ஈவினிங்!...

பஞ்: வாரும் இப்படி உட்காரும்: என்ன விசேஷம்...இன்னிக்கு உங்காத்திலே சினிமாவுக்குப் போறதா சொன்னியளே...ஏது இக்கப் பக்கம் திரும்பிட்டியள்? சினிமாக்கு போகலியோ?...

பட்டு: ஆமாம் சார்...எங்க போறது ஆபிசிலேயிருந்து வந்தா டயர்டா போறது...அதுக்குமேலே சினிமாவுக்கு போகிறதின்னு சிரமமாத்தானிருக்கு...ஆத்திலே என்னமோ...போகணும் போகணு மின்னுதான் அடிச்சிண்டா...அதெல்லாம இன்னிக்கு வேண்டாம் நாளைக்கு பார்த்துக் கொள்ளலாமின்னு சொல்லி விட்டு வந்தேன்டேன்,

பஞ்: ஓகோ! நாளைக்கு ஆபீஸ் லீவ் தானே...

பட்டு: ஆமாம், அதனாலே தான் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமின்னு சொல்லிவிட்டேன்; அதுவுமல்லாமல் நாளைக்கு தீபாவளி பாருங்கோ...தீபாவளி டேயில், அப்படியே கொஞ்சம் ஜாலியா போயிட்டு வரலாமின்னு நினைக்கிறேன். மேலும் ஊர்லே இருந்து என்னுடைய சிஸ்டர் இன்னா வந்திருக்கா...அவளையும் அழைச்சுண்டு ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு வரலாமின்னு பார்க்கிறேன்...

பஞ்: பேஷ்! பேஷ்! நீர் டலே பேர் வழிங்காணும், உம...அப்புறம?

பட்டு: அப்புறம என்ன..நீங்கள்தான் சொல்லணும்...உமக்குத்தான் எல்லைவட ஊர் விஷயமெல்லாம நன்னு தெரியும். அதுசரி, இன்னைய பேப்பர் பார்த்தியளா?

பஞ்: ஏன், காஷ்மீர் சமாசாரம் எப்படியிருக்குன்னு கேட்கிறியளே!

பட்டு: சோ...சோ......அதைப்பத்தி கூட எவ்வளவு அக்கரையில்லே ஓய்...சேற்று செயிண்ட் மேரீஸ் ஹாலில ஒரு கான்பிரன்ஸ் கூடினு பாருங்கோ...அதைப் பற்றித்தான் கேட்கிறேன்.

பஞ்: ஓ! அதுவா? அந்த கிராமணியார் கட்சி கான்பிரன்ஸா?

பட்டு: ஆமாம்.

பஞ்: அதைப் பத்திரிகையிலே பார்க்கிறதென்னங்காணும். நம்ப பத்திரிகையிலே, அவாளுகளெல்லாம அவ்வளவு புராமினைன்ஸ் கொடுத்து வாளா?என்ன நடந்ததன்னு வேணுமான்னு என்னைக்கேளும......நான சொல்றேன்.

பட்டு: அப்படியானு நீர் போயிருந்தீரோ?

பஞ்: ஆமான்காணும், ஆமாம்;

பட்டு: மகாநாடு ரொம்ப அபர்க்களமா ...இருந்ததாமே...ஜேர்தானு?

பஞ்: ஆமாம்; அது உண்மைதான் ஏரான கூட்டம்; டேசினவாளும நன்னு பேசினு...

பட்டு: என்ன இருந்துதான் என்ன பிரயோஜனம்.......அவா போறபோக்கு ரொம்பமோசமாகவல்லோ இருக்கு. இந்தக் கிராமணியார் என்னமோ தமிழ் நாடு, தமிழ் நாடுன்னு, கத்திண்டிருக்காரு ...அந்த நாயக்கர் என்னமோ திராவிட நாடு, திராவிட நாடுன்னு, கத்திண்டு இருக்காரு...இவா கூட்டத்திலே அவா பேசறு......அவா கூட்டத்திலே இவா பேசறு..இதென்னங்காணும, எல்லாம் விபரீதமாயிருக்கே. நமமவா பாலிடிக்சே இருக்கிற இடந்தெரியலியே!

பஞ்: நன்னு சொன்னயள்...ஆமாம்... நீர் சொல்றதெல்லாம் சரி...ஆனு அவாக் கூட்டம் வேறே...இவாக கூட்டம் வேறேன்னு நினைக்காதீர எல்லாம் ஒரே கூட்டம்தான. பேர் தான் வித்தியாசம். இன்னும் கேட்கப் போனுல் இந்த கிராமணியார் கட்சிக்கு வர்ற ஆட்களெல்லாம அந்த சு. ம. காரன்கள்தான் வேற புதிசா,யாரும் அவர்கூடசேர்ந்து விடவில்லே. ஆனு கிராமணியார நெனைச்சண்டிருக்கார் எல்லாம தன்னுடைய ஆட்கள் என்று.

பட்டு: ஓய், அப்படிச் சொல்லாதீர ஓய்...அவருக்கும் தெரியும் தனக்கு இருக்கும செல்வாக்கெல்லாம் அந்த சு. ம. காரன்களாலேயே வந்தது என்று.........இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் என்னென்னமோ செய்துண்டு வருகிருர்.

பஞ்: ஓய், நான் சொல்றதைக் கேளும; என்ன இருந்தாலும் இனிமேல நாம அந்தக் கிராமணியாரை நம்பக்கூடாது. நம்மவாளை எதிர்த்து வேலை செய்ற விஷயத்திலே கிராமணியார், ராமசாமி நாயக்கா, துமாதுரார இவா அத்தனை பேரும ஒத்துமையாகத்தான போரு.....பார்த்தண்டே இருங்கோ...ஏன், அவ்வளவுதூரம போவானேன; நம கல்யாணசுந்தர முதலியாரை பாருங்களேன்...வரவர சுத்த சு. ம காரா மாதிரன்னு பேச ஆரம்பிச்சுடார். அன்னைக்குக் கூட அந்த தமிழரசு மகாநாட்டிலே இதே பேச்சுதான்!

பட்டு: அடடா! என் அப்படி? இதுக்கெல்லாம் காரணம் என்ன?

பஞ்: காரணம் என்ன வந்திருக்கு... காலம் அப்படி கெட்டுப் போச்சு அவாளெல்லாம் ஒன்று கூடிடுவா போலிருக்கு.

பட்: கூடி என்ன செய்யப்போருளாம்?

பஞ்: செய்யப் போறது என்ன ஒண்ணுமில்லே...எல்லாம வெறும பேச்சோடே சரி...இந்த கிராமணியார்தான் ஆகட்டும...இவ்வளவு கத்தறாரே......என்ன பிரயோஜனம்? நம்மவா பேப்பரிலே பப்ளிஸிடி கொடுத்தால்தானே? இல்லாவிட்டா என்ன நடக்கும்?

பட்: ஓய், நான சொல்றதைக் கேளும அது கூட தேவையில்லே அவாளுக்குளளேயே அடிச்சிண்டு கிரகப் போரு பாருங்கோ...எந்த காலத்திலே அவா ஒற்றுமையாயிருந்தா?

பஞ்: ஆமாங்காணும்...ஆமாம். நீர சொல்றது ரொமபசரி. அன்னிக்குக்கூட அந்த மகாநாடு நடக்கச்சே அவாளுக்குள்ளேகொஞ்சகலாட்டா இல்லாமலில்லே.

பட்: யாருக்கும், யாருக்குக் கலாட்டா?

பஞ்: இது தெரியாதா?...யார்தான் கலாட்டா பண்ணுவா? எல்லாம் அந்த சு. ம. காரப் பயல்கள்தான் அவா சமாச்சாரம்தான் நமக்குத் தெரியுமே......அவாதான் வெறி பிடித்தவளாச்சே......அவாளுடைய கருத்துக்கு மாறாக வேறு யாராவது எதையாவது சொல்லி விட்டாலே போதுமே...உடனே கலாட்டா பண்ண ஆரம்பிச்சுடுவாளே. அவாளுக்குத்தான் டிபரன்ஸ் ஆப் ஒபீனியனே கூடாதே

பட்: ஆமாங்காணும்......அவா அப்படித்தான் செய்யறு. பாவம!...அவா தான் என்ன பண்ணுவா... அந்த நாயகர் அவாளே அப்படித் தயார் பண்ணி வச்சுட்டார்.

பஞ்: அதிருக்கட்டும் காணும்...அந்த தமிழரசு கட்சிக்கும்.....திராவிட கட்சிக்குமே அடிப்படையில் வித்தியாசமிருக்கே.

பட்டு: அதெப்படி?

பஞ்: தமிழரசு கட்சிக்காரர் ஆந்திரர் மலையாளிகளை யெல்லாம் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை; திராவிட கட்சிக்காரர் அவாளையெல்லாம் சேர்த்துக் கொள்ளணும் என்கிறு...ஆனுல அவாள்தான திராவிட கட்சியாரோட சேர விரும்பவில்லை!

பட்டு: அதுமட்டுமில்லேங்காணும்... இன்னொரு முக்கியமான விஷயமிருக்கு...தமிழரசு கட்சிக்காரா நம்பவாளையும் சேர்த்துக் கொள்ள பார்க்கிறு.... திராவிட கட்சியாருக்கு அது பிடிக்கிலே.... இதனுலேதான அவர்களுக்குள் தகராறு.

பஞ்: சரி, அவா எப்படியாவது முட்டிக் கொள்ளட்டும்.... அவ்வளவுக்கவ்வளவு நம்ப பாடு யோகம.

பட்டு: (சிரித்துக்கொண்டே) பேஷ்' நன்னு சொன்னயள்.... நானும அடிக்கடி இதைத்தான் நினைத்துக் கொள்வது.... சரி, நேரமாகிறது கடைக்குப் போய் காப்பிப் பவுடர் வாங்கிண்டு ஆத்துக்குப் போகணும் ....நான வரட்டுமா.

பஞ்: ஆகா....

நகைப் பெட்டிகள & அட்டை பெட்டிகள் தயாரிப்பவர்கள்

C. E. ராஜன் & பிரதர்ஸ்

நெ. 84, எழுகிணறு தெருவு, மின்ட் போஸ்ட் G. T. மதராஸ்.

மாதவிடாய் நின்றிருந்தால்

'குமாரி' (TABS) உபயோகித்தால் மீண்டும் ஏற்படுவதுடன் பிற்காலத்திலும் தொந்தரவு ஏற்படாது. நீங்கற்றது. விரைவில் பலன் தரும் விலை ரூ. 3. கடுமையானதற்கு ரூ. 5. மிகக்கடுமையானுல் ரூ. 8. கர்ப்பத்தடை 6 மாதங்களுக்கு ரூ. 4. (வி. பி. அணா 12. பிரத்தியேகம்) Mrs P. DEVEE, F. D. S. (T. M.) Tollygunge: GALCUTTA ஸ்டாக்கிஸ்டுகள்: (1) ஹாரி & ஸன், 93. சைனாபஜார் ரோட் மதராஸ். (2) ராகவன் & கோ. ஸ்ரீ நரசிம்மராஜ ரோட், பெங்களூர் ஸிடி.

RUBY CIGARS

No. 1. ரூபி ஸ்பெஷல் மணிலா சுருட்டு

உயர்ந்த ரகப் புகையிலைகளினுல் கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு நவீன முறையில் தயார் செய்யப்பட்டது குணத்திலும் மணத்திலும் மிக விசேஷியமானது. இன்றே வாங்கி உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

ஒரு சுருட்டு விலை 0-0-6

T. M. மாணிக்கம் பிள்ளை

சுருட்டு பாக்டரி 48. சின்னதம்பி தெருவு, ஜார்ஜ் டவுன் மதராஸ்

நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும் ஏற்ற இடம்

சேலம், கோயமுத்தூர் முதலிய இடங்களிலிருந்து தருவிக்கப்பட்ட பட்டும், நூலும் கலந்த கெட்டிச் சாயமான புடவைகள் எங்களிடம் மிக சரசமாகக் கிடைக்கும் *

தனம் ஸ்டோர்

128. நைனியப்ப நாயக்கன் தெரு, பார்க்டவுன், மதராஸ்.

கனகராணி

அல்லது

மாயவீரன்

பூ. ஆ.

மதுரைப் பாண்டிய மன்னர் அரண்மனை நந்தவனத்தில் வேலை செய்துகொண்டிருந்த பெண்களிடம் பேசிக்கொடுத்த கற்பூரனுக்கு, அந்தப் பெண்களில் ஒருவள் நன்றாகச் சூடு கொடுத்தாள். அந்தச் சூட்டோடு சூடாகக் கற்பூரன் அரண்மனைக்குத் திரும்பினான். என்றாலும், அவன் மனதில் ஏற்பட்ட சந்தேகங்களை அவனால் நிவர்த்தி செய்ய முடியவில்லை; வசந்த மண்டபத்திலுள்ள ரகசிய அறைக்குள், மாயமாக மறைந்த பெண் யாரென்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை; அவன் பேச்சுக் கொடுத்த வேலைக்காரப் பெண்களில் யாராவது அங்கு சென்றிருக்கலாமென்று எண்ணினான்; அந்தச் சந்தேகமும் அவனுக்கு நிவர்த்தியாகவில்லை. ஆகவே, நேரடியாக மதுரத்திடம் சென்றான்; மதுரத்திடமும் சாதுர்யமாகப் பேச்சுக்கொடுத்[...] நந்தவனத்திலே ஒரு மதுராயியைக் கண்டதாகச் சொன்னான். மதுராயி என்ற பெயரைக் கேட்டதும், மதுரம் சந்தேகித்தாள்; அவளும் கற்பூரனை விட்டபாடில்லை; மதுரத்திடம் பேச்சுக் கொடுத்த கற்பூரன்பாடு வெலவெலத்துப் போய்விட்டது! மதுரத்திடம் அவன் கொண்டிருந்த சந்தேகமும் தீர்ந்தபாடில்லை; எனவே, மதுரத்திடம் பேசக் கொடுப்பதை நிறுத்தி, வேறு பக்கம் பேச்சைத் திருப்பினான். மதுரத்தின் முகமும், கண்களும் சோர்ந்து போயிருந்ததைக் கவனித்து, அதற்குக் காரணம் என்னவென்று கேட்டான. மதுரம் புன்னகை செய்து மழுப்பினாள்; ஆனால், கற்பூரன் மேலும், மேலும் வற்புறுத்திக் கேட்டதால், மதுரம் அவள் விதியை எண்ணி மௌனமாய் கண்ணீர் வடித்தாள். அவள் கண்ணீரைக் கண்ட கற்பூரன் கண்களிலும் கண்ணீர் ததும்பியது; அவன் உள்ளத்தில் எழுந்த துயரத்தை கட்டுப்படுத்த முடியாதவனாய் மதுரத்தின் கரங்களை அன்புடன் பற்றிக்கொண்டு கெஞ்சினான். மதுரமும் ஒருவாறு ஆறுதலடைந்தாள். கற்பூரனை அவள் உடன் பிறந்த அண்ணனாக எண்ணியிருப்பதாகவும், இனிமேல் அவள் பிறப்பைப் பற்றியோ, அல்லது, அவளைச் சூழ்ந்திருக்கும் மர்மங்களைப் பற்றியோ எண்ணிக்கூடப் பார்ப்பதில்லையென்று உறுதி மொழி கூறினான். அவன் உறுதி மொழியைக் கேட்ட கற்பூரனும், ஆனந்தமாகப் போகத் திரும்பினான் உடனே மதுரம் குறும்புத்தனமாக மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

“அண்ணா, மறந்துவிட்டேன்...நந்தவனத்தில் கண்ட அந்த மதுராயி கதையை அண்ணியிடம் சொல்லிவிடாதீர்கள்!...அண்ணியறிந்தால்... உர்... அப்புறம் ஆபத்துதான்!” என்றான்

“உம்...ஆபத்தா?...ஐயா... சாமிகளே...நில்லுங்கோ!...யாரடி மதுராயி?” என்று திடீரென்று வந்த குரலைக் கேட்டு, மதுரமும், கற்பூரனும் திடுக்கிட்டுப் பிரமித்துப் போயினர்! கற்பூரன் சட்டென குரல் வந்த பக்கம் திரும்பினான். அவனுக்கு எதிரே புஷ்பவதி நிற்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தான்! புன்சிரிப்புடன் வெளியே வந்தான்.

“புஷ்பா...நீ இங்கு எப்படி வந்தாய்?...வா...போகலாம்...

“எங்கே?...சாமிகளே...கொஞ்சம் உள்ளே வாருங்கள்...அண்ணனும், தங்கையும் என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள் என்பதை நான் விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்” என்றாள் புஷ்பவதி. கற்பூரனும் மறு வார்த்தை பேசாமல் உள்ளே சென்றான்.

பார்த்தாயா மதுரம்...இந்தத் திருடி எப்படியோ அருகில் வந்து, மறைந்திருந்துகொண்டு நாம் பேசியதையெல்லாம் ஒற்றுக்கேட்டுக் கொண்டிருந்திருக்கிறாள்...

“சாமிகளே......அதெல்லாம் பேச வேண்டாம்...நான் எதுவும் ஒற்றுக் கேட்க வரவில்லை...நான இப்பொழுதுதான் வந்தேன்...யார் அந்த மதுராயி? யாருடன் பேசிக்கொண்டிருந்தீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள்... இதுதான் உங்கள் வேலையா? இதுதான் உளவு அறியும் சாமர்த்தியமா?” என்று கேட்டாள் புஷ்பவதி

“அண்ணி... அப்படி ஒன்றுமில்லை... அண்ணா நந்தவனத்தில் வேலை செய்யும் சில பெண்களிடம் சில விஷயங்களைப்பற்றி...” என்று மதுரம் கூறிமுடிப்பதற்குள், புஷ்பவதி உடனே அவளைத் தட்டிக் கேட்டாள்

நீ சும்மா இரு திருடி!...நீயும் உன் அண்ணாவுடன் சேர்ந்தவள்தான்!...

“புஷ்பவதி...நீ ஏன் எங்களைச் சந்தேகிக்கிறாய்?...மதுரம் சொன்னது உண்மைதான்...” என்றான் கற்பூரன்.

அதெல்லாம் எனக்குத் தெரியும்... உம்...உங்கள் இருவரையும் சும்மா விட்டேனா பாருங்கள்..என்னை ஒன்று மறியாத குழந்தை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?...என்டி மதுரம...நீ எங்கே போயிருந்தாய்?...

அண்ணி...உம்...நான் இங்குதானே இருந்தேன்...அண்ணாவைக் கேட்டுப் பாருங்கள்...அண்ணி வேண்டாம் என் அண்ணாவுக்குத் தொந்திரவு கொடுக்க வேண்டாம்...வாருங்கள் போகலாம்... அண்ணாவுக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன...

அது எனக்குத் தெரியும்...உன் அண்ணா வசந்த மண்டபத்திலிருந்து என்னை எப்படியோ தட்டிக் கழித்து விட்டார்கள்...நான் இங்கு வந்தேன் உன்னைத் தேடினேன...உன்னையும் காணவில்லை!...

அண்ணி...நான் உங்கள் அண்ணாவுடன சற்று முன்புதான் வந்தேன்.. நீங்கள் வர நேரமாகுமென்று உங்களுக்காக இங்கு காத்திருந்தேன்...

அப்படியா?...நீ எனக்குப் பின்னுல்தான் இங்கு வந்தாயா?...உன்னைத் தேடினேன் காணவில்லை...உன் அண்ணாவையும் காணவில்லை...இதில் ஏதோ ரகசியமிருக்கிறதென்று எண்ணி நானும் உடனே நந்தவனத்துக்குத் திரும்பினேன்......யாரையும் காணவில்லை...உன் உண்ணா அந்தப் பெண்களுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன்......அந்தப் பெண்ணிடமா இந்த வீராதி வீரர், ஒற்றர் படைத் தலைவர், உளவறியச் சென்றார்? நன்று இருக்குதடியம்மா... உளவு!...

இருக்கட்டுமே...அதனால் என்ன? அந்தப் பெண்களிடம் ஏதோ உண்மையைத் தெரிந்துகொள்ளலாமென்று எண்ணிப் பேச்சுக்கொடுத்திருக்கலாம்...இதில் தப்பு என்ன இருக்கிறது அண்ணி?...

ஆமாம் தப்பு ஒன்றுமில்லை....மதுராயி...முனியம்மாயி...காட்டேரி..கருப்பாயி...

“சரி இருக்கட்டும்...எல்லாம் பேசி முடித்துவிட்டாயா புஷ்பா?...எனக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிறாய்?...உம் அதையாவது சொல்லிவிடு” என்று குறுக்கிட்டான கற்பூரன்.

அத்தான தண்டனை கொடுக்க இது இடமுமல்ல...சரியான சமயமுமல்ல... இல்லாவிடில்...உம்...என்ன தண்டனை கொடுத்திருப்பேன் தெரியுமா?...சரியான தண்டனை!...

அந்தத் தண்டனையைக் கொடுக்க வேண்டிய காலத்தில்......கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்துக் கொள்ளலாம்....சரி வா போகலாம்.

எங்கே?...ஏனடி அம்மா...மதுராயி நீ வரவில்லையா?...

குறும்புக்காரி......யாரை மதுராயி என்று சொல்லுகிறாய்?...அவள் என் தங்கை என்பது ஞாபகமிருக்கட்டும்...

நல்ல ஞாபகமிருக்கிறது......அவள் எனக்கு ஒரு மதுராயிதான்!...

“அண்ணி எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்......எல்லாம் உங்கள் விருப்பம்...நீங்கள் அண்ணாவுடன் போய்க்கொண்டிருங்கள் இதோ வந்துவிட்டேன்” என்று சொல்லி, மதுரம் அவள் அறைக்குள் சென்றாள். கற்பூரனும், புஷ்பவதியும் அங்கிருந்து போகப் புறப்பட்டனர். இந்நேரத்தில் அங்கு ஒரு சேடி வந்தாள்; கற்பூரனைக் கண்டதும், அவனை பாண்டிய மன்னர் தேடி ஆள் அனுப்பியிருப்பதாகச் சொன்னாள்; கற்பூரனும், புஷ்பவதியும் விரைந்து சென்றனர். புஷ்பவதியை அவள் அறையில் விட்டுவிட்டுக், கற்பூரன் மட்டும் மதுரை மன்னரிடம் சென்றான். பூபதியும் அங்கிருந்தான்; மன்னர், முதன் மந்திரி குணசீலன், தளபதி வீரசிம்மன் எல்லோரும் கற்பூரனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்; கற்பூரனைக் கண்டதும், மன்னர் புன்னகை செய்தார்.

கற்பூரா.. நீ நினைத்தபடி குங்குமனையும் பிடித்துவிட்டாய்!....இனிமேல் நீ தாராளமாகத் தெற்கே போகலாமல்லவா?...

ஆம்...உங்கள் உத்திரவுப்படி நான் தெற்கே போகத் தீர்மானித்துவிட்டேன். ஆனால், குங்குமனைப் பிடித்தது

(அடுத்த பக்கம் பார்க்க)

அம்பாள் சுகந்த பாக்குத்தூள்

ஸ்ரீ அம்பாள் பாக்குத்தூள் தயாரிப்பவர், கொத்தவால் சாவடி., மதராஸ்.1.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா சேமியாவை உபயோகியுங்கள்

தயாரிப்பு:—
P. பெரியசாமி செட்டியார்
கள்ளக்குரிச்சி S. A. Dt.

தாளக பஸ்பம்

காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, மூச்சுத்திணரல் முதலியவை அவசியம் தீரும். 45-வருஷம் அனுபவத்தில் கைகண்ட மகா அருமையான மருந்து.

அரை மண்டலம் அனுபானம் தாளீச பத்திரி சூரணத்துடன் ரூ 10-0-0

வைத்தியபதி,
R. M. நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை
பழனி (S.I.)

கனகராணி

அல்லது

மாய வீரன்

[முன் பக்கத் தொடர்ச்சி]

* * *

நானல்ல...அந்தக் கௌரவமும், பெருமையும் மதுரத்தையே சாரும்..... அவளே குங்குமனைக் கட்டி உருட்டினாள்...

உம்....மதுரம்......மதுரம்....ஆம்... அவள் ஒரு அபூர்வப் பெண்மணி...... பூபதி எல்லா விவரங்களையும் எங்களிடம் எடுத்துச் சொன்னான்...புஷ்பவதியைப்போல்......மதுரமும் என் கண்மணி...அவள் பாண்டிய நாட்டிற்குச் செய்திருக்கும் சேவை அபாரம்!...

ஆம்...மதுரம் ஒரு தெய்வீகப் பெண்...ஆனால், அவள்...

கர்பூரா......அவளுக்கு என்ன?... அவள் யாராக இருந்தால் என்ன?... அவள் நம்மைச் சேர்ந்தவள்...அவ்வளவுதானே?...

ஆமாம்...அவளை என் தங்கையாகவே எண்ணியிருக்கிறேன்...

ஆம்...உன் தங்கைதான்!...தங்கையாகவே அவளைப் பாதுகாத்துவரவேண்டும்...இருக்கட்டும்......தெற்கே எப்பொழுது புறப்பட எண்ணி இருக்கிறாய்?...

நாளைக்கே புறப்படவும் தயார்.. எவ்வளவு சீக்கிரத்தில் புறப்பட்டுப் போகிறேனோ அவ்வளவுக்கு நல்லது..

ஆம்......ஆனால்......கண்ணே.....நீ ரொம்பவும் சோர்ந்து போயிருக்கிறாய்...பல இரவுகள் கண் விழித்துச் சோர்வடைந்திருக்கிறாய்...உன் தேக ஆரோக்கியத்தையும் நீ கவனித்துக் கொள்ளவேண்டுமல்லவா?... சிலதினங்கள் ஓய்வெடுத்துக்கொள்...

எனக்கு ஓய்வு அவசியமா?...அவ்வளவுக்கு நான் சோர்ந்து போயிருக்கவில்லை...மேலும், பாண்டிய நாட்டைச் சூழ்ந்திருக்கும் ஆபத்துக்களை எண்ணிப் பார்க்கும்போது எனக்கு ஓய்வு எதற்கு என்றே நான் நினைக்கிறேன்..

நீ நினைக்கிறபடி அவ்வளவுக்குப் பெரிய ஆபத்துக்கள் எதுவும் சூழ்ந்துவிடவில்லை...ஆகையால், கண்ணே நீ சிறிது ஓய்வெடுத்துக்கொண்டால் நலமது என்றாலும், உனக்குப் பூர்ண சுதந்திரமுண்டு...பாண்டிய நாட்டின் மணிகளாகிய உங்களிடம் எனக்குப் பூர்ண நம்பிக்கையுண்டு...உங்கள் விருப்பம்போல் நடந்துகொள்ளுங்கள்...குணசேலா...வீரசிம்மா உங்கள் அபிப்பிராயம் என்ன?...

"நீங்கள் சொல்லுவது சரிதான்... என்றாலும் கர்பூரன் யோசனைபோல் நடந்துகொள்ளட்டும்" என்றான் குணசீலன்.

"பாண்டிய நாட்டைச் சூழ்ந்திருக்கும் ஆபத்துகள் பல என்றாலும்...... நமது சக்திகளையும் கவனித்துக்கொள்ளவேண்டுமல்லவா?...... சில தினங்களுக்கு ஓய்வு எடுத்துக்கொள்ளுவதால் குடி முழுகிப்போய்விடாது!... ஆகவே... மன்னர் யோசனையைக் கேட்டு நடந்துகொள்ளுவது உசிதமென்று எனக்குத் தோன்றுகிறது' என்றார் தளபதி வீரசிம்மன்.

"அப்பா சொல்லுவது நியாயமே... அத்தான்...பெரியவர்களின் யோசனையைக்கேட்டு நடந்துகொள்ளுவது நல்லது..." என்றாள் பூபதி.

அப்படியே செய்கிறேன்...ஆனால், நான் திடீரென்று புறப்பட்டுப்போக நேர்ந்தால்......என் விருப்பம்போல் புறப்பட்டுச் செல்ல நீங்கள் அனுமதி கொடுக்கவேண்டும்" என்றான் கர்பூரன்.

"ஆகா...தாராளமாகப் புறப்பட்டுப் போகலாம்... உனக்குத்தான் பூர்ண சுதந்திரம் கொடுத்திருக்கிறேனே..." என்றார் பாண்டிய மன்னர்.

இவர்கள் பேசிமுடிந்ததும், எல்லோரும் மதுரை ராணியின் அறைக்குச் சென்றார்கள்; ராணி அப்பொழுது படுக்கையில்தான் இருந்தாள்; ராணி அருகில் புஷ்பவதியும், மதுரமும் பேசிக்கொண்டிருந்தார்கள். மன்னர் மந்திரி, தளபதி முதலியோர் வருவதைக் கண்டதும், புஷ்பவதியும் மதுரமும் எழுந்து மரியாதை செய்து ஒருபுறம் ஒதுங்கி நின்றார்கள். புஷ்பவதியையும், மதுரத்தையும் கண்டதும் மன்னர், மந்திரி முதலியோர் புன்முறுவலுடன் அவர்கள் அருகில் சென்று, அவர்கள் செய்த தீரச் செயலைப் பாராட்டினர்; புஷ்பவதி ஏற்கெனவே ராணியிடம் குங்குமனைக் கட்டி உருட்டிய கதையை சொல்லியிருந்ததால், ராணியும் ஆனந்தமடைந்தாள். படுத்த படுக்கையில் இருந்துக்கொண்டே மதுரத்தைப் பாராட்டினாள். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மதுரத்துக்கு மனதில் ஒருவித கலக்கம் ஏற்பட்டது. அவளுக்கு இவ்வித பாராட்டுப் பிடிக்கவில்லை; ஆகவே, அவர்களுக்கு மரியாதை செய்துவிட்டு, அங்கிருந்து போய்விடத் தீர்மானித்தாள்; மெதுவாக நழுவப் பார்த்தாள். மன்னர் அவளை நிறுத்தி, "கண்ணே...ஏன் போகிறாய்?...நாங்கள் வந்தது உனக்குப் பிடிக்கவில்லையா?" என்று புன்னகை தவழும் முகத்துடன் கேட்டார்.

மகாராஜா...அப்படி ஒன்றுமில்லை..

ஆரம்பித்துவிட்டாயா? எனக்கு மகாராஜா பட்டம் வேண்டாம்.. நான் எல்லோருக்கும் தந்தை...உனக்கும்..

ஆம்...உங்கள் அன்புக்கும்......கருணைக்கும்...

"அதெல்லாம் இருக்கட்டும்......நீ பாண்டிய நாட்டிற்குச் செய்திருக்கும் தியாகம் பெரிது...கண்ணே...உன்னை பாண்டிய நாடு என்றும் மறவாது.. நீங்கள்...ராணி அம்மாவிடமே இருங்கள்...நாங்கள் போகிறோம்" என்று சொல்லிவிட்டு, மன்னர் ராணியின் சுகத்தைப்பற்றி விசாரித்தார். உடனே அங்கிருந்து வெளியேறினார். மந்திரியும், தளபதியும் அவருடன் சென்றார்கள். கர்பூரனும், பூபதியும் மட்டும் ராணியின் அறையிலிருந்தார்கள். கர்பூரன் விஷயமாக மன்னரும், மந்திரி தளபதியும் செய்த முடிவைப்பற்றி பூபதி ராணியிடமும், மற்றவர்களிடமும் சொல்லிக்கொண்டிருந்தாள்; ராணி மெதுவாகக் கர்பூரன் பக்கம் திரும்பினாள்.

கண்ணே....கர்பூரா....எப்பொழுது நான் புறப்பட யோசிக்கிறாய்?...

அம்மா...நான் இன்னமும் முடிவு செய்யவில்லை...மதுரைக்குத் திரும்பியதிலிருந்து நான் பாட்டியைக் காணவில்லை...முதலில் பாட்டியைக் காண எண்ணியிருக்கிறேன்...

ஆமாம் கண்ணே......பாட்டியைப் பார்க்க வேண்டியதுதான்...உன் பாட்டியும் அரண்மனைப்பக்கம் வரவே இல்லை... வயதாகிவிட்டதல்லவா?... சொல்லி அனுப்பவும் எனக்குச் சமய சந்தர்ப்பம் கிடைக்காது போயிற்று... ஒன்றன்பின் ஒன்றாக எத்தனை சம்பவங்கள் நடந்துவிட்டது பார்த்தாயா?..

ஆமாம்... அம்மா... அதைப்பற்றிக் கவலை வேண்டாம்...எல்லாம் நன்மைக்கே...நீங்கள் கவலைப்படக் கூடாது.... எங்களுக்காகவாவது... நீங்கள் நீண்டகாலம் உயிருடனிருக்க வேண்டும்...ஆண்டவன் அதற்கு அருள் செய்தால் போதும்...

கண்ணே...உங்களுக்காகவே இந்த உயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன்...இல்லாவிட்டால் சுவாமி இந்த வாழ்நாளில் எத்தனை துயரங்களைக் காண நேர்ந்தது...

அம்மா...நீங்கள் உயிருடனிருந்ததால்தானே. நாங்கள் எல்லோரும் இன்று இந்த நிலைமையிலிருக்கிறோம்... இல்லாவிட்டால்...

தெய்வமிருக்கிறது கண்ணே!..அந்த மீனாட்சி அம்மையும்......ஐயனும் நம்மைக் கைவிடமாட்டார்கள்!......இருக்கட்டும்...கண்மணி...நீ தெற்கே போகுமுன்...என்னிடமாவது கண்டிப்பாகச் சொல்லிவிட்டுப் போகவேண்டும் மறந்துவிடாதே...

"அப்படியே செய்கிறேன் அம்மா" என்று சொல்லிவிட்டுக் கர்பூரன் அங்கிருந்து போகப் புறப்பட்டான்; அவன் குறிப்பை அறிந்த புஷ்பவதி மெதுவாக அவனைப் பின்தொடர்ந்தாள்; இருவரும் புஷ்பவதியின் அறைக்குச் சென்றார்கள். காதலர் தனித்திருந்தால் சொல்லவும் வேண்டுமா? கர்பூரன் நினைத்த மாத்திரத்தில் அவன் காதலி புஷ்பவதியைப் பிரிந்து செல்லலாம்; அவன் மனம் அதற்கு இசையவில்லை; என்றாலும், கடமை அவனைத் தூண்டியது; தாய் நாட்டின் சேவை அவனைத் தள்ளிக்கொண்டு போனது. அவனை உயிருக்குயிராகத் தெய்வமாக உள்ளத்தில் வைத்துப் பூஜித்த புஷ்பவதிக்கு, அவன் பிரிவு அவள் உயிரையே கொள்ளைகொண்டு போவது போலிருந்தது! அந்த எண்ணம் அவள் உள்ளத்தை உடைத்துத் தூள் தூளாக்கிக்கொண்டிருந்தது. ஆம்; கர்பூரனைப்போல், புஷ்பவதியும் கடமையை நன்குணர்ந்தவள்; அவள் சுகத்தையும், இன்பத்தையும், இன்பக் கனவுகளையும் பெரிதாக நினைக்கவில்லை; கோடிக்கணக்கான பாண்டிய நாட்டின் மக்களை எண்ணிப் பார்த்தாள்; அவர்கள் சுகவாழ்வும் இன்பமும், அவளுடைய சுக வாழ்வை விடப் புனிதமானது என்று கருதினாள் ஆகவே, கர்பூரன் பிரிவை ஒருவாறு சகித்துக்கொண்டு, அவனுடன் இன்பமாய்ப் பேசினாள்; அவள் உள்ளத்தைப் பிளந்து, கசிந்துகொண்டிருந்த வருத்தத்தைத் துளிகூட அவள் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. கர்பூரனின் அரவணைப்பில் மெய்மறந்திருந்தாள். அவன் அன்புடனளித்த முத்தத்தில் புது இன்பம் பெற்று, ஒரு தனி, இன்ப உலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்தாள். திடீரென்று தட்டி எழுப்பப் பட்டவள்போல் கண்ணைத் திறந்து, அவள் அன்பின் உருவாக, உயிராக நின்ற கர்பூரனின் முகத்தை உற்று நோக்கினாள்; மேகம் சூழ்ந்த நிலவுபோல், கண்ணீர் துளிகளால் மறைக்கப்பட்டிருந்த ஒளிபற்ற அவள் கண்களுக்குக், கர்பூரன் ஒரு தெய்வமாகக் காட்சியளித்தான். மெல்லிய அவள் கரங்களால் கர்பூரனின் முகத்தைத் தடவினாள்.

"அத்தான்...அத்தான்...உம்...எப்போ புறப்படப் போகிறீர்கள்?... சீக்கிரம் வந்துவிடுவீர்களல்லவா?..." என்று ஒரு சிறு குழந்தைபோல் கொஞ்சும் மொழிகளில் கேட்டாள்.

ஆம்...கண்ணே....சீக்கிரத்தில் திரும்பிவிடுவேன்......என் வேலைகள் முடிந்துவிட்டால் அப்புறம் எனக்கு அங்கு என்னவேலை?...என் அன்பை... என் உயிரை...இங்கு விட்டுவிட்டு என்னால் அங்கிருக்க முடியுமா?...

ஆம்...ஏதோ சொல்லுகிறீர்கள்... இருக்கட்டும்...அத்தான்....உம்...ம்... மீண்டும் என்னைச் சந்திப்பீர்களா?...

"கண்ணே...அதில் உனக்கு என்ன சந்தேகம் வந்தது?...புஷ்பா இன்றிரவு, உன்னைக் கண்டிப்பாகச் சந்திப்பேன்...நான் போய்வரட்டுமா?...... உம்.. இதோ" என்று சொல்லி முத்தமிட்டான்.

"போதுமா?... நான் [illegible]" என்று சொல்லி, புஷ்பவதியிடம் விடை பெற்றுக்கொண்டு, நேரடியாக அவன் வீட்டிற்குச் சென்றான்; குழந்தைப் பருவ முதல் அவனை வளர்த்த அவன் பாட்டியைக் காண அவன் உள்ளம் துடிதுடித்துக்கொண்டிருந்தது. வீட்டு வாசலுக்குள் நுழையப்போகும் சமயத்தில், தடதடவென்று வேகமாக வரும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் தோட்டத்தின் பக்கம் திரும்பினான்!

(தொடரும்)

எங்களுக்கு ஆதரவளித்து வந்த நண்பர்கள், வியாபாரிகள் அனைவருக்கும் எங்கள்

சுதந்திர தீபாவளி வாழ்த்துக்கள்

அலுமினியம், பித்தளை

பாத்திர வகைகள்

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் ★ வாடிக்கைகாரர்களுக்கு சில்லரையாகவும்

மிக அநுகூலமான விலைகளிலும், ஆதரணையுடனும் சப்ளை செய்யக்கூடியவர்கள்:

ஸ்ரீ கிருஷ்ண மெட்டல் கம்பெனி,

5-1 லிங்கு பஜார், : : பி. டி. சென்னை 3.

KITTU'S

Edited, Printed and Published by, P. ALBIN FERNANDO at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St, G. T. Madras